உ

கடவுள் துணை.

சர்வசமயசமரசக்கீர்த்தனைகள்.

இஃது

மாயூரம்மாஜி முன்சிப்

ச. வேதநாயகம்பிள்ளை

அவர்களாலியற்றப்பட்டு.

()

மணிமங்கலம்.

வடிவேலுமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு.

மதுரை புதுமண்டபம் புஸ்தகஷாப்.

P. N. C. கடைக்காரியம்.

குருசாமிநாயுடு அவர்களால்

பிடாரித்தாங்கல்

நாராயணசாமி முதலியாரவர்கள் குமாரர்

சிதம்பரமுதலியாரவர்களது

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1902.

சென்னைபிரம்பூர்குப்பப்பேட்டை 65 வது, நெம்பர்வீடு.

கடவுள் துணை.

கேட்லாக்கிலுள்ள சாமான்களின்

வி ள ம் ப ர ம்.

கனவான்களே ! சென்னை பிரம்பூர் குயப்பேட்டை படவெட்டம்மன் கோவில் தெருவு 64-வது நெம்பருடைய வித்தியாரத்தினாகர அச்சுக்கூடத்தில் ஸ்தாபிக்கப்பட்ட வி-பி கம்பெனியில் தமிழ், தெலுங்கு, கிரந்தம், துலுக்குமுதலிய புஸ்தகங்களும் ஸ்மார்த்த வைஷ்ணவர்களுக்கு வேண்டும் புஸ்தகங்களும் பால்யர்களுக்கு வேண்டும் காலேஜிப் புஸ்தகங்களும் உத்தியோகஸ்தர்களுக்கு வேண்டும் ஆக்டுபுஸ்தகங்களும், இசுலாமானவர்களுக்கு வேண்டும் தமிழ் எழுத்தில் துலுக்குபுஸ்தகங்களும், காவலர், பாவலர், நாவலர் யாவருக்கும் வேண்டும் இலக்கணம், இலக்கியம், புராணம், கதை, அம்மானை, நாடகம், விலாசம், கீர்த்தனை, அந்தாதி, கலம்பகம், கோவை, தூது, வெண்பா, சதகம், கும்மியெனும் அனேகம் தினுசுகளும், அத்வைத சாஸ்திரமும், ஆறுமுகநாவலர் புஷ்பரத செட்டியார் சை-இரத்தினசெட்டியார் இவர்களுடைய அச்சுக்கூடங்களிற் பதிப்பித்த உயர்ந்த புஸ்தகங்களும், வியாதிகள் சொஸ்தப்படும்படி தகுக அவிழ்தங்களும், அவரவர் பேர்களுக்குத் தக்கதாய் ரொம்பவும் அழகான வேலைசெய்த றப்பர் சீல்களும், ஜெர்மன் சில்வரால் செய்த நகைகளும், சாமான்களும், நல்ல வாசனைபொருந்தியதாயும் நாள்படயிருந்தால் கெடாமலிருக்கும்படியாயும், உள்ள அத்தர் தினுசுகளும், பூசு பில்லைகளும், வாசனை வத்திகளும் இவைகளெல்லாம் தயாரா யிருப்பதால் வேண்டியவர்கள் அடியிற்கண்ட எனது மேல் விலாசத்திற்கு எழுதினால் உடனே வி-பி தபாலில் அனுப்பக்கூடும் என்னுடைய கேட்லாக்கு வேண்டுமானால் அரையணா ஸ்டாம்பு அனுப்பினால் அனுப்பப்படும்.

ஒவ்வொருவரும் எங்களுக்கு விஷயந் தெரியும்படி தெளிவாய்ஒவ்வொரு முறையிலுந் தங்கள்பெயர் ஊர், இருப்பிடம், போஸ்டாபீஸ், தாலுக்கா, ஜில்லா முதலியவைகளோடே விலாசத்தை கட்டாய மெழுதவேண்டும்.

வித்தியாரத்தினாகர அச்சுக்கூடத்தலைவர்
பெரம்பூர்போஸ்டு மதறாஸ்.

பி. நா. சிதம்பரமுதலியார்.

கடவுள் துணை.

சர்வசமய சமரசக் கீர்த்தனைகள்.

க. இராகம்-தேவகாந்தாரி-ஆதிதாளம்.

பல்லவி.

எக்காலமும் உன்தன் பொற்கால்பணிந்துகொண்
டிருக்கநீவரம் அருள்வாய். (எக்கா)

அநுபல்லவி.

தக்கோர்அபிமான ஞானசீலா
சகலபுவனரக்ஷ காநுகூலா. (எக்கா)

சரணங்கள்.

க. சந்தமேவுபிர பந்தமாலைபாடி
கந்தமார்உன்அர விந்தபாதம்சூடி
வந்தனுதிகள் அநந்தமேசொலி
விழுந்துபூமியில் எழுந்துநைந்துருகி. (எக்கா)

உ. துங்கசாதுஜன சங்கமோடுகூடி
பொங்கும்ஞான அகலங்கவாரிஆடி
அங்கமேபரவ சங்கொளப்பலப்
தங்களோடுசுப மங்களங்கள்சொலி. (எக்கா)

ங. பழுதிலாதுதினம் முழுதும்உன்னைநாடி
தொழுதுநேசமுடன் அழுதுபாடிஆடி
ஒழுகுசெந்தழலின் மெழுகுபோலமனம்
இளகியேஅதிக புளகிதாங்கமுடன். (எக்கா)

ச. பூதலம்பரவு பாதவேதநாதா
சாதகம்செயும் அபேதநீததாதா
போதநாயகனே பூதநாயகனே
கீதநாயகனே வேதநாயகனே. (எக்கா)

உ. இராகம்-துசாவந்தி-ஆதிதாளம்

பல்லவி.

ஓடிநான்உனைத் தேடிவந்தேன்-எனக்
குதவிசெய்தருள் ஐயனே. (ஓடி)

அநுபல்லவி.

நாடிஉன்பதம் தொட்டேன்
கோடிதரம் கும்பிட்டேன்
நாதவிநோத பிரசாதபிரபோத
அபேதஅதீத நிர்வாதகியாதனே. (ஓடி)

சரணங்கள்.

க. அற்பமானபதார்த்தம்-சற்றும்விரும்பேன்
ஐயா இது யதார்த்தம்
அற்புதபரமார்த்தம்-கொடுத்தருளிய
அதுவேஉப யோகார்த்தம்
பற்பல விசித்திரனே
கற்பனை சமுத்திரனே
பாச விநாச சுரேச நரேச
பிரகாச விகாச உலாச விலாசனே. (ஓடி)

உ. வந்துனையே அடுத்தேன்-கீர்த்தனமாலை
வகைவகை நான்தொடுத்தேன்
வந்தனம்கைஎடுத்தேன்-நீவசிக்கஎன்
மனக்கோயிலுங் கொடுத்தேன்
அந்தமனை உனக்கே
உன்தன் மனைஎனக்கே
ஆயவிநேயர்கள நேய சகாய
அகாய உபாய நியாய விதாயனே. (ஓடி)

ங. அன்பர்உபாசனனே-பூதலந்தன்னில்
அதர்ம விமோசனனே
இன்பநிவேசனனே-வேதநாயகன்
இதய சிம்மாசனனே
என்பவங்களைத் தீர்ப்பாய்
உன்பதந் தன்னிற்சேர்ப்பாய்
ஏக அநேக திரிலோக நிர்வாக
தெய்வீக விவேக அமோக தியாகனே. (ஓடி)

ங. இராகம்-கேதாரகௌளம்-ஆதிதாளம்.

பல்லவி.

எனை ஆதரிப்பாயே-என்மன இருள்
தனையேபிரிப்பாயே. (எனை)

அநுபல்லவி.

வினையே அரிக்குஞ்சொல்லா
வீணனுன் ஒருபுல்லா
நினையா என்மனம்கல்லா
நிதம் அதனுடன்மல்லா
நிசயபிர போதனே
அக்ஷயப் பிரக்கியாதனே
சஜ்ஜனப் பிரசாதனே
துர்ஜ்ஜனப் பிரமாதனே. (எனை)

சரணங்கள்.

க. துக்கப்பிர பஞ்சத்தொல்லே
சொல்வதற் குண்டோஎல்லே
திக்குவே றெனக்கில்லே
தெய்வமேகேள் என்சொல்லே
சிஷ்டர் சமுதாயனே
துஷ்டர்கள் அபாயனே
இஷ்டர்கள் சகாயனே
அஷ்டகுண நேயனே. (எனை)

உ. அடியனுன் வினைவசம்
ஆயினன் இதுநிசம்
படியிற் கருணைரசம்
பாலித் தருள்கலசம்
பக்தஜன நேசனே
சுத்தமன வாசனே
சித்தமல நாசனே
வித்தக விலாசனே. (எனை)

ங. மருவிய பாசவலே
மாட்டி உற்றேன்கவலே
தரும சைதன்னியநிலே
தந்தென் மயக்கந்தொலே

சங்கட நிவாரகா
எங்கள்குல தாரகா
பொங்குசுக தாயகா
துங்கவேத நாயகா. (எனை)

இராகம்-காம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

சித்தம்உவந்தருள்செய்ய-இத்தனைதாமதமேது
சீலனே புவனபரி-பாலனேமூலனேநீயுன் (சித்தம்)

அநுபல்லவி.

நித்தனேபுவியெங்கும் பிரசித்தனேநிகிலரோக்
கத்தனேஜீவகோடிகட்-கத்தனேசுத்தனே நீயுன். (சித்தம்)

சரணங்கள்.

க. அசடனுனெனப்பதென்ன ரகசியமா-பெற்ற
அன்னையிடம்உண்மை சொல்லவேபயமா
வசஞ்செய்தருள்வ துனக்கோர்விஷயமா-யாவும்
வல்லஉனக்கிதென்ன அதிசயமா

வசனசாதுரியனே
மன்னமாதுரியனே
சுஜனர்கள்பிரியனே
சுரர்தொழும்பெரியனே. (சித்தம்)

உ. நிதமும்உனதுபத கைங்கரியமே-செய்ய
நீயருளெனக்குச் சுதந்திரியமே
அதுவேயெனக்குப்பெரும் சௌகரியமே-இனி
ஐயனேவேண்டேன் வேறுஐசுவரியமே

அதிசய அப்பிரமேயா
அகணித சுப்பிரகாயா
விதிநெறி செப்பும்வாயா
விநய சங்கற்பதூயா. (சித்தம்)

ங. பூதபௌதிகமெல்லாம் நிறைவோனே-நல்ல
புண்ணியத்திருமறையை அறைவோனே
வேதநாயகன்மனம் உறைவோனே-ஞான
விழியில்லாதவருக்கு மறைவோனே

போதகப்பிர காசனே
புண்ணியப் பிரதேசனே
சாதகக்கிரு பேசனே
தாசருட் பிரவேசனே. (சித்தம்)

ரு இராகம்-அசாவேரி-ஆதிதாளம்.

பல்லவி.

உன்னிடத்திற்சொல்லாமல் யாரிடத்திற்சொல்லுவேன்.
ஓ-ஓ-ஜகதீசா.

அநுபல்லவி.

பொன்னிடத்தாசையறு புனிதர்கள்சமக்கின்பம்
பொழிதருவே இந்தப் புவியில்நான்படுந்துன்பம். (உன்னி

சரணங்கள்.

க. வயிறுபசிக்கும்பிள்ளை மாதா இடம்போமன்றி
மற்றொருவரிடத்திற் சேருமோ-நாளும்
அயர்வுறும்பெரும்பிணி அருமருந்தாயின்றி
அயலொன்றினாலே அதுதீருமோ-கன.
வெயிலால் வருந்துவோரே
வேண்டுவர் நிழல்நீரே
உயிர்ப்பயி ரோம்புங்காரே
உனையன்றிக் கதியாரே.
உலைவுறுசல்லடை போற்பல ஓட்டை
உளதாகியவெறும் புழுமலக்கூட்டை
நிலையெனமனக்கவி செயுட்பலசேட்டை
நித்தியம்நான் அதனாற்படும்பாட்டை. (உன்னி)

உ. நாதனேநான்பிழை யாதுசெய்யினும்நின்னை
நம்பினேன் என்மேலின்னம் க்ஷாத்திரமா-பாரில்
ஓதரும்புலச்சத்து ராதியர்கையில் என்னை
ஒப்புவிக்குதல்தர்ம சாஸ்திரமா-மறு
மாதர்மேற் செல்லும்நேத்திரம்
வாயே அபத்த பாத்திரம்
தீதுணைகொள்ளுஞ் சுரோத்திரம்
சிற்றின்பம் வேண்டுங்காத்திரம்.

நீப அவயவங்கள் செயுந்தினமோசம்
சிந்தையிற்குடிகொண்ட தாசாபாசம்
நாயேன்செய்கைகளே ஆபாசம்
நான்குபக்கத்திலும் நான்படுங்கிலேசம் (உன்னி)

௩. எத்தனைசுமைபாவம் வேண்டுமானாலுமுந்தி
எனக்குக்கொடுக்கலாம் அச்சாரமே-எந்தன்
அத்தனேநானுன்சேயென் றறிந்தும்நோய்செய்யுமாயைக்
கார்தந்தார் இந்த அதிகாரமே-சர்வ.

உத்தமஞ்சேர் நிர்தோஷ
உன்னதமா விசேஷ
பத்தர்நித்திய சந்தோஷ
பரசமயத் துவேஷ.

பாக்கியமலர்ந்தருள் பழுக்கும் உத்தியான
பலவுனனுத்மகோடிகள் அபிமான
ஆக்கியவேத நாயகன்ஸ்வாதீன
அனைதந்தைகுருதெய்வஞ் சகலமுமான. (உன்னி)

---

௯. இராகம்-பூரணகௌளை-ஏகதாளம்.

பல்லவி.

என்பிழைகள் பொறுத்தருள்வாய்-எனை அலைக்கும்
துன்பவினை அறுத்தருள்வாய்.

முன்பரவியே ஜெபிக்கும்
அன்பர்கள் அனுபவிக்கும்
இன்பமே அவர்விரும்பும்
நின்பதகமலம் நம்புர. (என)

சரணங்கள்.

௧ நேயனைப்போல்விவகரிப்பேன்-துதிகவிகள்
ஆயிரம் உண்டாக்கிவிரிப்பேன்-என்செய்கையெல்லாம்
வாயின் அன்பலாதுமனந்-தோயும் அன்புளதோசிற
நாயின் அன்புமேயிலாமல்-தீயவம்பனுய்த்திரியும். (என)

௨. எண்ணவொண்ணுமோ என்பவமே-ஐயனே இந்த
மண்ணினில் என்ஜன்மம் அவமே-தினந்தினமும்
உண்ணலும்நித்திரைதனை-நண்ணலும்பெரும்பவங்கள்
பண்ணலும் அல்லாதுன்பதம்-எண்ணல்செய்தறியேன்ஸ்வாமி.

௩. போதகம் என்னிடம்லயமே-என்மனம்பஞ்ச
பாதகங்கட்காலயமே-புவனமிசை
மாதவம்புரியவர்க்குக்-கோதகலும் இகபர
சாதகங்கொடுத்தருளும்-வேதநாயகா இறங்கி. (என்)

---

௭. இராகம்-சுப்பிரதீபம்-திரிபுடை.

பல்லவி.

வினையே எனையே மேவாதருளே.

அநுபல்லவி.

நினையேநம்பினே னின்மலப்பொருளே. (வினை)

சரணங்கள்.

௧. கனவிலுந்தருமத்தைக் கண்டறியேனே
அனவரதமும்உன தருள்குறியேனே. (வினை)

௨. பாவமென்பதற்கொரு பதியானேனே
ஜீவனும்வழிதெரி யாமற்போனேனே. (வினை)

௩. உதரபோஷணையன்றி உனைநினையேனே
இதயந்தனில் உன்னடி இணைபுனையேனே. (வினை)

௪. பூதலந்தொழும் அதி புண்ணியர்மித்திரனே
வேதநாயகன்தொழும் விமலபத்திரனே. (வினை)

---

௮. இராகம்-பரசு-ரூபகம்,

பல்லவி.

ஆண்டருளே-கருணை-பூண்டருளே.

அநுபல்லவி.

தூண்டருஞ் சுடராக விளக்கும்
சோதியே-உயர்-நீதியே எனை. (ஆண்ட)

சரணங்கள்.

க. என்னை ஆள்வது பாரமா என
திடம்வர வெகு தூரமா
அன்னைக்கும் உப சாரமா எனக்
கருள்புரிய இங் கோரமா கன
ஆரிடனே-மெய்ஞ்ஞான
சூரியனே-சர்வலோக
காரியனே-மிருத்யுஔ
தாரியனே-ஜகந்தனில்,
உன்னையல்லது பின்னையார்துணை
யோகனே-சுக-போகனே-எனை. (ஆண்ட)

உ. எனதுடலெலும் புல்லையே காக்க
எவர்களுங் காட்டுவன் பல்லையே
இனமும் ஆயிர் தொல்லையே இதில்
பிரிந்து மேசுகம் இல்லையே கன
சேதனனே-பெரியபு
ராதனனே-பரவசி
கேதனனே-மெய்ஞ்ஞான
சாதனனே-அநுதினம்
நினது பாதம் நம்பினேன் அதி
நேசனே-பிர-காசனே-எனை. (ஆண்ட)

ங. பொறுமை உனக்குச் சொந்தமே நான்
புரியும்பிழை அநந்தமே
மறுமையுறு விப்பந்தமே கெட
மலர் பாதார விந்தமே கன
மாக்ஷியனே-அமயாகன்
காக்ஷியனே-சர்வாண்ட
சாக்ஷியனே-தனி அர
சாக்ஷியனே-தினந்தினம்
சிறுவன் வேதநாயகன் பணி
சித்தியே-அருள்மூர்த்தியே-எனை. (ஆண்ட)

௬. இராகம்-மோகனம்-திரிபுடைதாளம்

பல்லவி.

காக்ஷிகொடுக்கக் கொடாமலிருக்கின்ற
காரணம் ஏதையா (காக்ஷி)

அநுபல்லவி.

சாக்ஷியாய்நிற்கும் சருவாதிகாரனே
மாக்ஷியுடையோர்மகிழ் நிர்விகாரனே. (காக்ஷி)

௧. அந்தரங்கபக்தி அற்றவனென்றோ
அக்கிரமத்தில்பெயர் பெற்றவனென்றோ
பந்தப்பேய்க்குள்ளத்தை விற்றவனென்றோ
பாதகங்களெல்லாங் கற்றவனென்றோ. (காக்ஷி)

௨. மறந்தும் ஒருமெய்சொல் லாதவனென்றோ
சிறந்தமெய்ஞ்ஞானங்கல் லாதவனென்றோ
மேசத்தார்க்கெல்லாய்ப்போல் லாதவனென்றோ. (காக்ஷி)

௩. ஏசிமனைமயை இகழ்ந்தவனென்றோ
ஈனமதத்தைப் புகழ்ந்தவனென்றோ
நீசெய்தநன்றி மறந்தவனென்றோ
நீசர்க்குள்மெத்தச் சிறந்தவனென்றோ. (காக்ஷி)

௪. ஆதிமத்தியாந்த ரஹிதமகேசா
அற்புதசின்மயா னந்தவிலாசா
வேதவேதாந்த விதிஉபதேசா
வேதநாயகன் இதயப்பிரகாசா. (காக்ஷி)

---

௭. இராகம்-நாதநாமக்கிரியை-ரூபகதாளம்

பல்லவி.

அருள்புரிவாயே-எனதுள
மருள்தெரிவாயே.

அநுபல்லவி.

இருளை நிகரும் சுருள் கொள்ளுகியர்
இலகும்பொருள்-உலகபுரி-கலகம்படர்-விலகும்படி. (அருள்)

சரணங்கள்.

க. நினைவெல்லாம் உன்னினைவதாயென் நெஞ்சம்உன்னுதோ-பழி
புனையும்வாய்வெறும் பேச்சைவிட்டுனைப் புகழ்ந்துபன்னு
தினையளவு மெய்தனைவிடாது [தோசிறு
சிந்தித்தனை-வந்தித்திடு-புந்தித்திடம்-வந்துற்றிட. (அருள்)

உ. எத்திசையும் உன்னுருவமாகவே இலக்கக்காணேனோ-சொந்த
அத்தம்யாவும்நீயென்றேமிக ஆசைபூணேனோ-கன
பத்தியாயுனை நித்தம்போற்றிப்
பாடித்தினம்—நாடித்தவம்-நீடிக்கதி கூடிக்கொள. (அருள்)

ங. நீதமாயரும் போதமாயெங்கும் நிறையுங்கர்த்தாவே - நாளும்
வேதநாயகன் காதல்கனப்பெண் மேவும்பர்த்தாவே-கொண்ட
ஏதமறப்பிர சாதம்உதவி
இழிவண்டிய-பழிவிண்டுநல்-வழிகொண்டுனை-விழிகண்டிட.

கக. இராகம்-பணிரங்கு-திரிபுடைதாளம்.

பல்லவி.

சித்தம் இரங்கிநல் முத்தர்தங்கோஷ்டியிற்
சேர்த்தெனைக் காத்தருளே.

அநுபல்லவி.

உத்தமசீலர்தஞ் சித்தமலர்உறை
வேனே-கோனே-வானே-தேனே. (சித்த)

சரணங்கள்.

க. நின்னடித்தொண்டனு னென்ன அறியும்
நிதம் உலகந்தானே
என்னஉனதொண்டன் பலனென்றெனைப்புவி
ஏசில்என் சொல்வேனே
பன்னரும் உன்னருள் என்னருகாகிடப்
பண்ணே-கண்ணே-எண்ணே-விண்ணே. (சித்த)

உ. பொய்த்தெய்வங்களைப் போற்றிப்பெரும்பழி
பூண்டவர்தம்முளமே
மெய்த்தெய்வம்உன்னைத் தொழும்எனக்கென்ன
விசேஷப் பிரயோஜனமே
கைத்தொழில்அண்டம அனைத்துந்தாங்கிடு
கையா-துய்யா-மெய்யா-ஐயா.

௩. கழுவக்கழுவ அழுக்குடல்மீது
கலந்தடருந்தன்மையே
தழுவிஎன்னெஞ்சுறு மாசுகள்நீங்கிடத்
தந்தருள்வாய் நன்மையே
எழுமன்பொடுவேத நாயகன்போற்றிடும்
ஏகா-யோகா-வாகா-தியாகா. (சித்த)

௰உ. இராகம்-தர்பார்-திரிபுடைதாளம்

பல்லவி.

என்னை ஆளையா-என்விண்ணப்பம்
தன்னைக்கேளையா

அநுபல்லவி.

மின்னைநிகரும்வாழ்வை வெறுப்பவர்க்குரியோனே
அன்னைபிதாசற்குரு வாகியபெரியோனே (என்னை)

சரணங்கள்.

௧. அடியேன்மேற்சினமா-என்குறைநீக்கி
ஆள்வதுகனமா
கடினம்நின்மனமா-எனதுநெஞ்சங்
கவலைக்காசனமா
படியிலஎன்னகத்துறு பாவஇருளைமாற்றித்
திடமுறவேமெய்ஞ்ஞான தீபமதனையேற்றி (என்னை)

௨. என்றுஞ்சஞ்சலமா - ஐயனேமாயைக்
கிவ்வளவுபலமா
வென்றுகொள்புலமா — அதனால்ஏழை
மெலிவதுநலமா
நன்றுருவாகியநாதா என்முகம்நோக்கிக்
குன்றெனநான்செயும் கொடுவினைகளைப்போக்கி. (என்னை)

௩. கைவிடலாமா - என்னிடம்வரக்
கால்மலர்நோமா
நைவினைபோமா - இனிமைதங்கும்
நன்னயநாமா
தெய்வநாயகனாகித் திகழுறும்அகளங்கா
கைவல்லியஞானநெறி கமழ்மதுரப்பிரசங்கா (என்னை)

௪. திக்திக்கும்தேனே-அமுதேகண
தேவர்கள்கோனே
எத்திக்குந்தானே-எள்ளுளெண்ணெய்போல்
இருக்குங்கோமானே
புத்தியுடையோர்சூட்டும் புகள்மாலை அணிவோனே
பத்தியுடனேவேதநாயகன்பணிவோனே. (என்னை)

௰௩-இராகம்-கல்யாணி-ரூபகதாளம்.

பல்லவி.

தருணங்கருணை விரிகுவாய்-ஐயா-உனக்கனந்தங்கோடி
சரணஞ்சரணந்-தெரிகுவாயய்யா

அநுபல்லவி.

அருணகோடி தேஜோமயனே பொன்
கிரணமென்றுன்னுவோர்பயனே இச், (தருணம்)

சரணங்கள்.

௧. இந்திரியசத்துருக்கள் செய்மோசம்
என்னசெய்வேனிர்வகித்தல் பிரயாசம்
நிந்தனையான அநு பந்தபாசம்
நீங்கச்செய்வாய்புண்ணிய உபதேசம்
நீயேகதியென்றே ஒரு
தாயே துயர்ஒன்றே சிறு
நாயேன்கெடல்நன்றோ கல
தீயேன்உடல்குன்றோ இது (தருணம்)

௨. கோரமாய்த்தனபிள்ளைசெய்யினுந் தீது
கோபித்துநீக்கிடுந்தாயுண்டோ ஓது
காரமாநான்செயும்பாவம்பொ றாது
கைவிடில்வேறெனக்காதர வேது
காயத்தைஎடுத்தேனே அரு
மாயத்தைஅடுத்தேன் அனி
யாயத்தைஉகித்தேனே திரு
நேயத்தைவிடுத்தேன் இது (தருணம்)

௩. நச்சுமரத்தையும்வைத்தவன் தானே
நாள்தோறுங்காவல்செய்யாமல்இ ரானே
இச்சகமீதில்எனை அமைத் தோனே
என்னைநீஆளாவிடிற்பிழை யேனே

ஏகந்தனையுருவே — சுக
போகந்தனைதருவே — கன
யோகந்தனைதிருவே — முதிர்
பாகந்தனைகுருவே — இது (சரணம்)

௪ நித்தமும்நானும்பாதகச்-சேறு
நீக்கிடப்போதுமோநின்னருள்-ஆறு
விதியுங்கதியும்இல்லையே-வேறு
வேதநாயகனேஅருள்-பேறு.

வேதத்துருவோனே — பல
பூதப்பெருமானே — கன
போதத்தமர்கோனே — இரு
பாதத்தைவிடேனே — இது (சரணம்)

---

௧௪ இராகம்-தேசிகதோடி-ஆதிதாளம்.

பல்லவி.

ஐயாளனை ஆண்டருளே-உனை
அண்டினனே-மனம்-வெண்டினனே. (ஐயா)

அநுபல்லவி.

பொய்யாம்வாழ்வினில்நான்குழையாமல்
போகாதிகளில்என்மனம்நுழையாமல். (ஐயா)

சரணங்கள்.

௧. ஒருநிமிஷமும்உன்தடிமறவாமல்
உலகழிபினுமுனதருள்துறவாமல்
இருதயமதனிலோரிடர்பிறவாமல்
இழிவுறுபழியொருநாளிறவாமல். (ஐயா)

௨. உன்னையலாதொருவரையும்தொழாமல்
உதாசிமித்தம்எங்கும்ஓடியழாமல்
இந்நிலமீதுதுராசைஎழாமல்
இறந்தபின்னுளிரகில்விழாமல். (ஐயா)

௩. நல்லவழிதனைஎந்தநாளும்விடாமல்
காட்டில்அசடனெனநான்பேரெடாமல்
பாவையர்மோகத்தில்படிந்துகெடாமல். (ஐயா)

ச. என்னுயிர்போல எவ்வுயிரையும்பேண
இச்சுகபோகத்தை என்றுமேநாண
மின்னுங்குணபூஷணங்களைப்பூண
வேதநாயகனே நானுனைக்காண. (நீபா)

கரு. இராகம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

இந்தவரந்தருவாய்-ஸ்வாமி-இந்த.

அநுபல்லவி.

பந்தவினையெலாம் அறவேண்டும்-உன்
பாததரிசனம் பெறவேண்டும். (இந்த)

சரணங்கள்.

க. தினமும்உன்பதமலர் தொழவேண்டும்-நான்
தேகபரவசமா பெழவேண்டும்
அனல்மெழுகாயுருகி யழவேண்டும்-இனி
ஆனந்தக்கடலில்நான் விழவேண்டும். (இந்த)

உ. தேகவிஷயாதிகள் கெடவேண்டும்-ஞான
தீபத்தைஎன்னுளத்தில் இடவேண்டும்
பாகஅறப்பயிரை நடவேண்டும்-அந்தப்
பயிர்க்குன் அருட்புனலை விடவேண்டும் (இந்த)

ங. மோகப்பசாசுதனை வெலவேண்டும்-நல்ல
முத்திநெறியிலே செலவேண்டும்
நாகமெனும்புலனைக் கொலவேண்டும்-வேத
நாயகனேயுன்னுமந் சொலவேண்டும். (இந்த)

கசு. இராகம்-பைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

இந்தப்பிழைகளெல்லாம் பொறுப்பாயே-பாச
பந்தக்களைகளை வேரறுப்பாயே. (இந்த)

அநுபல்லவி.

சொந்தப்பிள்ளைகளான தூயவர்க்கப்பிதாவே
அந்தப்பரமசுகம் அளிக்குங்கனதாதாவே. (இந்த)

சரணங்கள்.

௧. ஆதியானபரஞ்சோதி உன்னைநானவெறுத்தேன்
 என்மனந்தனை
ஆகமாதிகள்சொல் யோகசாதனையில்நிறுத்தேன்
 அநுதினமும்
வேதவேதியர்கள்ஓது நீதியையுமறுத்தேன்
 சமர்த்தன்போலே
வீம்புபேசிப்பெரும்பாம்பு போலவிடம்பொறுத்தேன்
 சதாகாலமும்
ஸுகல்வாழ்வுதனைநாடினேன் மறு
மாதர்கள்சுகந்தனைத்தேடினேன் பஞ்ச
பாதகரோடும்உறவாடினேன் கன
காதகனென்றுபெயர் கூடினேன்
 ஆதுலர்க்குதவியாமலேதடுத்தேன்
 சாதுஜனங்களைக்கண்டேதடியெடுத்தேன். (இந்த.)

௨. நேயமானதந்தைதாயைச்சற்குருவைப்பழித்தேன்
 ஜெபதபத்தை
நித்தியகர்மங்களைப்பத்திமார்க்கங்களைஒழித்தேன்
 கைப்பொருளெல்லாம்
காயமோகசுகமாயவாழ்விற்செலவழித்தேன்
 உனைத்தொழாமல்
காட்டில்வாழ்மிருகக்கூட்டம்போலநாள்கழித்தேன்
 அநுதினமும்
தூயரைக்குறைசொல்லித் தூற்றினேன் பெருந்
தீயரைத்தினந்தினம் போற்றினேன் நல்ல
ஞாயவழக்குகளை மாற்றினேன் பதி
னாயிரம்பொய்சொல்லத் தேற்றினேன்
 வாயில்வந்தபடி வம்புகள்தொடுத்தேன்
 கோயில்மணியமெனக்குடிகளைக்கெடுத்தேன். (இந்த.)

௩. பூவிலேபாவியென்றுபேரெடுத்தேன்
 புரட்டுருட்டும்
பொய்யும்வஞ்சனையுஞ்செய்யுமார்க்கந்தனையடுத்தேன
 உன்னுமந்தனை
நாவிலேஎனதுபாவிலேசொலாமல்விடுத்தேன்
 ஞானியைப்போல
நாட்டில்மாயவேஷங்காட்டி என்னைநான்கெடுத்தேன
 அநுதினமும்

௩

பாவமும்பழிகளுந்தாங்கினேன் பெருங்
கோவமுங்குரோதமும்பூண்டிக்கினேன் புண்ணிய
ஜீவனஞ்செய்யாமல்தூங்கினேன் நல்ல
பாவனஞ்செய்யும்வழிநீங்கினேன்
ஆவலாகப்பலர்பொருள்அபகரித்தேன்
காவலாநெறியைக்கடந்துசஞ்சரித்தேன். (இந்த.)

௪. வாரங்கூலிகளிற்சோரஞ்செய்துநான்குறைத்தேன்
பிறரிடத்தில்
வாங்கியபொருள்களைஈங்கில்லைஎன்றுநான் மறைத்தேன்
பஞ்சத்திலேவியா
பாரஞ்செய்யப்பலசேரில்நெல்லைக்கட்டிநிறைத்தேன்
நல்லதண்ணீரைப்
பாழிலேலசகலநாழிகையும்விழலுக்கிறைத்தேன்
முதலினொடு
நேரவட்டிதனைக்கூட்டினேன் வெகு
தூரம்அகவிலையைநீட்டினேன் வழக்
கோரஞ்சொல்லிச்சண்டைமூட்டினேன் உப
காரஞ்செய்தோர்க்குக்கத்திதீட்டினேன்
தாரம்பிள்ளைகளுக்குந்தான்செய்தேன்வஞ்சம்
நேரில்வேதநாயகாநின்னடிதஞ்சம். (இந்த.)

௧௭-இராகம்-சுருட்டி-திஸ்ரஜாதி-ரூபகம்.

பல்லவி.

தேவாதிதேவனே-தயை-தயை-செய்தருள்வாயே.

அநுபல்லவி.

பாவஉடலைஎடுத்துநீளும்
பாதகனும்என்னைநாளும்
பந்தப்பகைசாடாமல
சிந்தைத்துயர்கூடாமல்
சிந்தைப்பழிமூடாமல்
இந்தப்படிவாடாமல். (தேவாதி.)

சரணங்கள்.

௧- கற்பகோடிகாலம்போலஅற்பவாழ்வினை மதித்தேன்
காரமாகளங்நேரமும் அலங்காரமும்நெஞ்சினிற் பதித்தேன்
தற்பராஉன்பொற்பாதாம்புயந் தாழ்ந்திடாதெனைத் துதித்தேன்
சாந்தமாம்யோகாந்தமார்க்கஞ்சார்ந்திடாமற் குதித்தேன்

நற்பதந்தனை நாளுஞ் சார்ந்து
நாசவினைகள்யாவுந் தீர்ந்து
ஞானந்தனிலே நீட
மோனந்தனையே நாட
வானந்தனையே தேட
ஆனந்தமே கூட (தேவாதி.)

௨. பாசமாம்பிசாசம்என்மனம்வாசஞ்செய்வது நிலையே
பாபமுங்கடுங்கோடமும்பலர்சாபமும்பெரு மலையே
நேசமும்விசுவாசமும்பிரகாசமும்எனக் கிலையே
நிந்தையானஅகந்தையுமென்சிந்தையுங்கடுஞ் சிலையே

ஈசனேஎன்பாவம் நீக்கி
என்னையேஉன்தாச னாக்கி
இன்பக்கடலே தோக்
துன்பக்கடலே போர
அன்பர்க்கினமே சார
என்பொய்க்குணமே தீர (தேவாதி.)

௩. அன்பர்களிக்கஇன்பம்அளிக்குஆனந்தப்பெரும் நதியே
அனவரதமுங்கனவிரதர்கள்அகத்தில்ஒளிரு மதியே
துன்பசாகரமென்பதுகெடத்தோன்றிடும்பர கதியே
தொண்டன்வேதநாயகன்மணப்பெண்டகமகிழ் பதியே

நின்பதந்தனைநாளும் ஏத்தி
நேசமாய்க்கவிமாலை சாத்தி
நீஇப்பயனை விள்ள
ஆதிப்பழியே தள்ள
வேதப்பயனே கொள்ள
போதக்கனிலே துள்ள (தேவாதி)

௧௮-இராகம்-பியாகு-ரூபகதாளம்.

பல்லவி.

இந்தநிமிஷமேபாடநிவர்த்தி
எனக்கருள்வாய்ஸ்வாமி.

அநுபல்லவி.

எந்தநிமிஷத்தில்சாவுவருமோவென்
றேங்கியேநான்பயங்கேனேஉயர்
நீங்கிடவென்னசெய்வேனே-சுரர்கோனே.

சரணங்கள்.

௧. காலையோமாலையோநாளையோசாவெனுங்
காலக்கணக்கறியேனே வந்த
வேலைமுடியுமுன் ஓலையனுப்பிட
வேண்டாஞ்சொன்னேன்சிறியேனேஎன்னை
ஆண்டானுனைப்பிரியேனே பெரியோனே (இந்த.)

௨. பொட்டென்றுதேகந்தான்சட்டென்றுவீழ்ந்திடில்
கிட்டஒருவரில்லாரே குழி
வெட்டென்பர்பிரேதத்தைக்கட்டென்பர்மண்ணைமேற்
கொட்டென்பர்போவர்பொல்லாரே ஆன்ம
நட்டம்வாராமற்கண்பாரே துயர் (இந்த.)

௩. கப்பம்இல்லாமலேஎப்படியேனுங்
கடலைக்கடக்கலொண்ணாதே நாளும்
அப்படிநின்பதத்தெப்பமில்லார்க்கந்த
ஆநந்தவீடுகண்ணாதே நல்ல
ஞானந்தருவாயிப்போதே கைவிடாதே (இந்த.)

௪. ஆதிமத்தியாந்தரகிதப்பிரபோத
அபேதபுராதனநாதா நாளும்
காதலுடனவேதநாயகனுள்ளக்
கமலத்தங்குந்திருப்பாதா எனக்
கமலந்தரஇன்னம்வாதா கிடையாதா

௧௬-இராகம்-கல்யாணி-அடதாளசாப்பு.

பல்லவி.

இந்தஉபகார மறவேனே-பூமி
அந்தரம்எங்குநிறை-கோனே.

அநுபல்லவி.

விந்தைநரஜன்மம்நான் மேவஅருள்நோக்கினாய்
தந்தைதாய்மனைசேயர்தந்தகுறைநீக்கினாய். (இந்த.)

சரணங்கள்.

௧. குருதியாகியசேறு கூட்டி நல்ல
கொழுமாமிசச்சுவரை நாட்டி
வரிஎன்புவிட்டங்கள் பூட்டி தட்டும்
வடமாநரம்புகளை மாட்டி

இருகாவல்நவவாசல் உடல்மனையை வீக்கினாய்
இன்பங்கள் நுகர் அந்திரியம் ஆக்கினாய்
அரிய ஆன்மா அங்குகுடியுறப் போக்கினாய்
அந்த ஆன்மாவில்நல்லறிவினைத் தேக்கினாய் (இந்த)

௨. பூமியாகியவீ டமைத்தாய் பஞ்ச
பூதாதி ஊழியர் சமைத்தாய்
மாமதுர உணவுகள் கொடுத்தாய்
வானமாம் பந்தலும் எடுத்தாய்
சோமசூரியதாரகதீபம் ஏற்றினாய்
சுகவாயுவால் உஷ்ணசோகத்தை மாற்றினாய்
சேர உணவாக்கவே தேயுவினை ஆற்றினாய்
சீதக்கடங்கொண்டு தெண்ணீரை ஊற்றினாய் (இந்த)

௩. கடலாறு குளம்ஓடை தந்தாய் மலர்க்
காவுகளும் நதியினை பெய்தாய்
தடமலைத்தருக்களும் வகுத்தாய் வசனரு
சார்மிருகபக்ஷிகள் பகுத்தாய்
திடமானநவமணிஉலோகாதி நீட்டினாய்
ஜெகஜோதியாகவேசிங்காரம் காட்டினாய்
அடமின்றிநானாவிதங்கள் ஊற்றினாய் (இந்த)

௪. சிலபறவைகளான இசை பாடும் வேறு
சிலபறவை திருநடனம் ஆடும்
பலமிருகம்நரர்வேலை புரியும் நல்ல
பசுவாதிபாலினைச் சொரியும்
மலர்களிகள்கால்கிழங்குமரமெலாம் நீட்டுமே
மண்ணன்னம்விளைவித்துவயிறார ஊட்டுமே
பலதாதுமெங்களைத்தலைமுழுக் காட்டுமே
சர்வபொருள்களும்நல்லசந்தோஷம் மூட்டுமே (இந்த)

௫. பித்தர்க்குநீசெய் பாதகமே வளம்
பெரிதெனினுமீ தற்பசுகமே
சுத்தர்க்குநீசெய் போகமே பரம
சுகமென்கிருப்புமஎன் ஆகமே

பத்தர் அநுகூலசற்பரமகா — ருண்ணியனே
பகிரண்டகோடிகள்புரிந்திடுந் — திண்ணியனே
வித்தகசொரூபமேமேவுசற் — புண்ணியனே
வேதநாயகனைஉள்ளமீதுவளர் — கண்ணியனே (இச்ச.)

உ௰-இராகம்-கேதாரகௌளம்-ஆதிதாளம்

பல்லவி.

சிந்தைக்குள் உறைந்தாயே சிந்தைத்துயரந்தனைத்
தெரியாயோசுவாமி,

அநுபல்லவி.

அந்தரம்புவியெங்கும் அரசாக்ஷியளிப்போனே
எந்தப்பொருளினுள்ளுமிருந்துகங்களிப்போனே (சிந்தை)

சரணங்கள்.

௧. பாலையும்விஷமாக்கும் பாம்புபோல்கொடுமனம்
பலசுகத்தையுந்துன்பம் — ஆக்குமே
பூலோகமெல்லாம்வசமாயினும்வேறொரு
புவனத்தையும்பிடிக்க — நோக்குமே
காலமுழுதும்இந்தக்கருத்தே — யாதலாலும்
கலியாணவீட்டிலுங்கட்டிக்கொண் — டழுஞ்சாபம்
மேலவனேஎனக்கிதுவாய்த்த — தெனனபாவம்
வேதநாயகனைபாராயோஎன் — பரிதாபம் (சிந்தை.)

௨. இருதலைக்கொள்ளியிலிருக்குமெறும்புபோல
எக்காலுந்தொல்லையா — விசாரமே
ஒருசாணாகியஉதரக்குள்ளடைக்க
உலகில்படுங்கஷ்டம் — அபாரமே
தரணியின்வாழ்வென்பதுதானே — விஷவிருக்ஷம்
சார்வதாஇதில்வருமசங்கடம் — கோலக்ஷம்
தருமயோகாந்தநிலைசார்தல — உத்தமபக்ஷம்
சர்வானுகூலமுனக்கெல்லாம் — பிரத்தியக்ஷம் (சிந்தை)

௩. போர்க்களநடுவிலேகுடியிருப்பதுபோலப்
புலச்சத்துருக்களின்போ — ராட்டமே
சேர்க்குந்தசைவடிவாந்தேகமிதுபிணியுந்
தீவினைகளுமுவலர் — தோட்டமே

பார்க்கின் இதுவே ஆசா பாச கடலைதாலே
பாதுர்ப்பிரமைஇது படிபுமே போ வேலை
நீர்க்கவைதியைக்குத்தினமுங்கொடுக்கும்வேலை
நினைந்தேதையா சேர்ந்தேன் உன்திருக்காலே (சிந்தை)

உ௪-இராகம்-யமுனாகல்யாணி-ரூபகதாளம்.

பல்லவி.

சரணஞ்சரணம் நாதா-உன்
சரணம்தர ஒண்ணுதா.

அநுபல்லவி.

நிரணமாகிய காயமே இதில்
நிணம்புலாந்தம் அபாயமே
மரணம்வருமுன் னேயமே பெற
மகிழ்ந்தருள் சகாயமே கோடி (சரணம்.)

சரணங்கள்.

௧. பாவியேன்இரு தபமே பவ
பாதங்களின் மயமே
பேஷிக்ப்ராவி ஷயமே வினை
விலக்கி அருள்கன் னயமே
மாயவினைகளை மாற்றுவாய் எதிர்
வந்தென்சிந்தையில் தோற்றுவாய்
சேவைதந்தெனைத் தேற்றுவாய் இந்தத்
தீபக்கரை யேற்றுவாய் (சரணம்.)

உ. மதம்இராகது வேஷம் பொய்
வஞ்சகம்பல தோஷம்
எதிலும்நான் விசேஷம் எனக்
கில்லைபுண்ணிய விசேஷம்
மதனப்பேயை ஓட்டுவாய் நல்ல
மார்க்கத்திலெனைக் கூட்டுவாய்
விதனநகரைப் பூட்டுவாய் உன்
வீட்டுக்குவழி காட்டுவாய் (சரணம்.)

௩. தார்க்கிகர் பரிபாலா கண
சாங்கிய குணசீலா
கீதாகள் பிரதிகூலா சத்ய
நீதியுறு செங்கோலா
ஆறுமுகல் ஞாலனே ஆதி
வரஸ்டகோடிவு சாலனே
காரணிக மூலனே வேத
நாயகன்ஆறு கூலனே (சரணம்.)

உஉ-இராகம்-கற்கடா-ஆதிதாளம்.

பல்லவி.

சீலம்சீரா தேவநாதா
திரியன்மீது வாதா-அபேதா

அநுபல்லவி.

மூலகாரண பராபர வேதா
மோக்ஷசாம்ப்ராச் சியப்பிரதாதா (சீலம்.)

சரணங்கள்.

௧ நன்மைதுன்மைஇன்ன தென்பதுதெரியேன்
ஞானமார்க்கந்தனையே அநுசரியேன்
இன்மையாக்கத்தனை ஜெயம்புரியேன்
தீயனுனநான் பாபத்திற்பெரியேன் (சீலம்.)

உ. தாயிருக்கப்பிள்ளை தயங்குதல்சரியோ
சாமிநீயென்பணம் வாழ்வும்வரியோ
நீயிருக்கநாந்தன் துன்பம்உபரியோ
நீயேதாமதிக்க என்னுடல்கிரியோ (சீலம்)

௩. ஜீவசிருஷ்டிஸ்திதி லயஅதிகாரா
ஜென்மசாபல்லியப்பிர தானஉதாரா
தேவசேவகண பூஜிததீரா
திரியன்வேதநா யகன்உபகாரா. (சீலம்.)

௨௩-இ-ம்-உசேனி-ஆதிதாளம்.

பல்லவி.

நின்பதமே துணை ஐயா-யென்
துன்பம் அகல அருள்செய்வாய்.

அநுபல்லவி.

இன்பமகோததியே இனியதயாநிதியே
அன்பர்பரகெதியே அமரர்க்கதிபதியே. (நின்)

சரணங்கள்.

௧. என்மனம் இளகாத பொருப்பே மாயை
என்றைக்கு அதிற்குடி யிருப்பே
தன்மமே அதற்கரு வருப்பே கெட்ட
தாமசகுணமென்றால் விருப்பே
நன்மைகெடுக்கும் இச்சை நாசக்கொடு நெருப்பே
துன்மையெல்லாம் அகலத் திருவருட்கண் திருப்பே. (நின்)

௨. ஏதும் அறியேன் ஞான சாஸ்திரம் புவ
னேசா உனக்கு நான் எம் மாத்திரம்
சோதனைக்கெளியேன் அபாத்திரம் அதி
தூயனே என் இன்னம் க்ஷாத்திரம்
வேதனைமிகக்கொண்டு மெலிவுற்றேன் அகோராத்திரம்
சாதகமுறவே நீ தருவாய்மெய்ஞ்ஞான நேத்திரம் (நின்)

௩. நீசனுன் வினைக்கெல்லா மூலம் என்தன்
நெஞ்சஞ்செய்வதும் பிரதிகூலம்
பாசபந்தஉலக ஜாலம் தன்னில்
படிந்துநொந்தேன் பலகாலம்
ஈசனே கேளாயோ ஏழைநானிடும் ஓலம்
தாசன்வேதநாயகன் தனக்குநீயருள் சீலம். (நின்)

௨௪. இராகம்-முகாரி-ஆதிதாளம்

பல்லவி.

ஆள்வாயெனதுள மூள்வாயெனக்குன்றன
அடியிணையே துணையே.
நீள்சுகக்கனியனே நேசருக்கினியனே
நாள்வளர்தனியனே நயமறைத்தொனியனே. (ஆள்)

சரணங்கள்.

க. பேதைநான் பயனில்லாப் பேசிற்சண்டப்பிர சண்டம்
பிறரைமயக்குவதிற் பெரியஉற்பாத பிண்டம்
வேதவினைஎனக்கு விளைசருக்கரைக் கண்டம்
விரைந்தருள்புரிஉனக் காயிரங்கோடி தண்டம்
வேதனே-வரப்ர-சாதனே-ஆசிர்
வாதனே-சுரர்புகழ்கொள்-காதனே-நாதனே எனை. (ஆள்)

உ. மனமெனுங்குரங்குக்குக் கனஅறமே உபேக்ஷை
வாதனைநீக்கிடாமல் ஏதின்னமும் பரீக்ஷை
தினகரரூபனேதிவ்யமெல்லாஞ்ஞான தீக்ஷை
திடமுடன்கொடுத்தருள் அதுவேஎன தபேக்ஷை
தேவனே-மனோ-பாவனே-மறைசொல்
நாவனே-தயைநிறை-சுபாவனே-ஜீவனே எனை (ஆள்)

ந. நிகரில்கனதெய்வீக நின்மல சுலக்ஷணா
நித்தியம்நினையும்பக்தர் நெஞ்சப் பிரதக்ஷணா
சகலஜீவாத்மகோடி தாங்கும் சம்ரக்ஷணா
சாஸ்திரம்புகலும்சுரர் ஸ்தோத்திரா மிர்தபக்ஷணா
தாங்குவாய்-நெஞ்சில்-ஓங்குவாய் துயரம்
நீங்கவே-வேதநாயகன்-பாங்காய்-நின்றனுதினம். (ஆள்)

உ௰-இராகம்-ஆரபி-ஆதிதாளம்.

பல்லவி.

தேவநாயகனே என்மீதிலுன்
திருவுளம் இரங்குவையே.

அநுபல்லவி.

ஜீவன்முக்தியூர்ஜித சீலர்பிதுரார்ஜித
தாவில்அதிபூஜித சர்வசமயபோசித. (தேவ)

சரணங்கள்.

க. கரதலாமலகம்போல் உனக்குயாவுந் திர்ஷ்டாந்தம்
கர்த்தனே அறியாயோ நீஎனது விர்த்தாந்தம
பரவும்பகங்களென்றால் பாலகர்க்கும் ஆனந்தம
பலபதங்கேட்டுந்தயை பண்ணாயே தோசித்தாந்தம்
பற்பல-நற்பல-உற்றவ-வுறபன
கற்பனை-செப்பரும்-அற்புத-உற்பன (தேவ)

உ. தனமிதுவேண்டுவோர்க்குச் சல்லியோடு தனமோ
தாகமுள்ளோர்க்குக் கானல்ஜலமது பானமோ
கனசுகந்தேடெனக்குக்கவலேசன் மானமோ
கதியருள்வாயுனக் கதுபாய தீனமோ

கர்த்த-சமர்த்த-பிம்வர்த்தன
பக்தர்கள்-சுத்த-அகத்துறு-நிர்த்தன. (தேவா)

௩. தினமும் அனந்தபாவஞ் செய்வதென் சாம்பிரதாயம்
சிந்தைக்கரந்தசப்புசேர்வேப்பிலேக கஷாயம்
இனி வேதநாயகனென்றேற்றேன் உன் ஞமதேயம்
எனக்கல்லாவிடினும் அப்பெயர்க்கேனுஞ் செய்சகாயம்

எம்பர-உம்பரும்-அன்பரும்-நம்பிய
அம்பர-சம்பிரம-இன்பம்-நிரம்பிய. (தேவா

உகூ-இராகம்-அடாணு-ஆதிதாளம்.

பல்லவி.

ஈசாநின்பொற்பாத மலாநம்பினேன் என்னே
இக்ஷணமேவந்து ரக்ஷணஞ்செய்தருள்.

அநுபல்லவி.

தாசர்மனகம லாசனகேசர
சாசுவதயோக சாம்ராஜ்யகேசுர
ஆசைக்கினிய அவாங்மனேகேசர
அண்டபிரமாண்ட அகண்டசராசர (ஈசா)

சரணங்கள்.

க. எத்தனேயோபேர் விட்டில்சுகித்தமர்
எனக்கிடம்பூச்சியமா தயை
சித்தங்கொள்வாயெனப் பித்தனெனக்குத்
தினமனேராச்சியமா நல்ல

நித்தனே இன்ப மிகுத்தமித்தி நலன்
நீதரில்வானவ ரோதுவரோ கலன்
சலத்தில்வழக்கவர் பேசிஎன்ன பலன்
தாயேஉற்றதுணை நீயேபின்வேறி லேன் (ஈசா)

உ. மாகுணபாகசை யோகமின்றிப்புவி
வாழ்ந்தவர்தாமெவரோ எங்கும்
ஏகும்நெஞ்சுன்னரு காகவராதிதற்
கேகுறுக்குச்சுவரோ விஷ
நாகமாயைக்கெங்குஞ் சர்வ கொள்ளையோ
நான்பயனில்லாமற் பேசிடுங் கிள்ளையோ
ஆகிலுமென்புத்தி தான்சுத்த வெள்ளையோ
ஐயனேநானென்ன தாயிலாப் பிள்ளையோ. (ஈசா)

௩. வந்துன்தரிசனந் தந்தருளிலென்
மனக்குறைதீருமே உன்தன்
சுந்தரபாதமென் சிந்தையூன்றிற்
சுகக்கடல்சாருமே பெரும்
பந்தநெருப்புக்கென் சிந்தனை செத்தையா
பாவியென்றென்னைக்கை நீவிடில் சத்தையா
விந்தைநலந்தந்திடல் பெரு வித்தையா
வேதநாயகன்பங் கென்ன சொத்தையா (ஈசா)

உஎ. இராகம்-ஜுசாவந்தி-ஆதிதாளம்.

பல்லவி.

ஆதியே பரஞ்சோதியே எனை
ஆதரித்தருள்வாயே.

அநுபல்லவி.

ஓதிஉணரவொண்ணு தோங்குங்குணாகர
நீதிவடிவமுறு நின்மலசாகர (ஆதியே

சரணங்கள்.

க. உலககாரியத்தில் நான்வெகுதிராணி உன்னை
உண்ணுவதிற்கேவலம் அஞ்பிராணி
நலமென்பதெனக் குறுமோமாகாணை என்தன
நவையேற்றப்போதுமே ஆயிரங்கோணி
மலவசமாகிச் சோர்ந்தேன்
தலைவாஉனடி சார்ந்தேன்
மதிக்கும்அடியார்கள் துதிக்கும்ஆரிய
குதிக்கநானென உதிக்கும்வீரிய (ஆதியே)

உ. கண்ணுள்ளபோதல்லவோ கண்காட்சி சீவன்
கழியுமுன்னல்லவோ புண்ணியமாட்சி
மண்ணிலெனக்கு ஞானஅரசாட்சி மிக
வாய்க்கும்படிஐயனே நீகடாட்சி
எண்ணரிய பிரதாபா
நண்ணரும் சுப்பிரதீபா
இணங்கும்அமரர்கள் வணங்குபெருவர
மணங்குலாவு சுகுணங்கொள்குருபர. (ஆதி)

௩. தீதுபொறுத்தல் தெய்வகுலதர்மமே
செய்கைகளே மனுஷகுலதர்மமே
ஓதிவிட்டேனே உனக்கென்உள்மர்மமே-என்மே
ஓகோஐயனே இன்னஎன்வர்மமே
பாதகம்அணி வேதநாயகம்பணி
படர்ந்ததிருவருள் அடர்ந்திடும்பிரம
கடந்தஞானியர் தொடர்ந்தசம்பிரம. (ஆதியெ)

உஅ. இராகம்-கேதாரம்-ஏகதாளம்.

பல்லவி.

தேவனே உனைநம்பினேன்
அடியேனை ஆண்டருள்.

அநுபல்லவி.

தேவா-துரித-அபாவ-சுகுண-சுபாவ
மகானு-பாவா-வாவா (தேவனே)

சரணங்கள்.

க. ஐயாநிலைஅறு பொய்யாம்உலகினில்
கையாறுகைஅருள் செய்யாயோஉயர். (தேவனே)

உ. வாராயோமுகம் பாராயோ அருள்
கூராயோவினை தீராயோகன. (தேவனே)

௩. பெரியாய்கைவிடல் சரியாநான்வினை
புரியாவிதம்அருள் சொரியாயோஉயர். (தேவனே)

௪. கொந்தேன்வினையுட வெந்தேன்உனதிடம்
வெந்தேன்சுகநிலே தந்தேன் அருள்புரி. (தேவனே)

௫. தாதா அருள்ஒண் ணுதாமனம்இரங்
காதா அனுதினம் வேதநாயகன்பணி. (தேவனே)

உகூ. இராகம் காம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

பரனே-அடியர்மனோ-கரனே-நிமலதின
கரனே-நீயருள்-வரனே.

அநுபல்லவி.

உரனேமிருப்புவன தரனே அகண்டசரா
சரனேபரமசுககரனே தீரனே அரும். (பரனே)

சரணங்கள்.

௧. என்னைவந்திரங்கும்வழை தன்னைநான்தள்ளிவிடல்
ஈசனேகோபம்பண்ணுவாயோ தங்கை
அன்னையேஎனையிரக்கும் என்னைநீதள்ளில்எனக்கும்
அவ்விதமென்றே எண்ணுவாயோ
முன்னைநீஅநேகரை உன்பொன்னடியிற்சேர்த்தனை
இன்னமும்பலபேர்தமைப்பின்னும்வினைதீர்த்தனை
என்னவோநான்கேட்டுன்மீது சொன்னேன்பலகீர்த்தனை
பின்னையொன்றும்வேண்டேன்அருள் உன்னையீதென்பிரார்த்த
[னை.(பரனே)

௨. உத்தமனேநான்பெரிய பித்தனாயினும்உனை
அடுத்தவனெனஉன்னுவாயோ பாரில்
சித்தமிசைபத்திய மிகுந்தபாலகனைக்கை
விடுத்தலுவதாளாயோ
முத்தொழிலில்முதல்தொழில் கொண்டுசெய்தாயென்சடம்
மூத்தஞானம்அளித் தெனைக்காத்தருளாயேன்னுடம்
அத்தனேஅவவிரண்டாந் தொழிலில்என்சங்கடம்
அதுதரில்மூன்றாந் தொழிற்கஞ்சிடேன்இதுதிடம். (பரனே)

௨. பாடுகவியிற்கற்பனை தேடுவதல்லால்உன்னருள்
கூடும்வகைகுறியேனே-என்னை
நாடும்எவரோடுமே வாதாடுவதல்லால்என்வாயை
மூடும்வகை அறியேனே
வாடுதலிற்பாதமலர் சூடுபெரியோராக
வாசபுவனேச வுபாசனைமாரக்
கீடுதவுதிடாக அலையாடுகடற்பாராக
மீதுவேதநாயகன் எப்போதுவேகொள்தாரச். (பரகன)

௩௰ - இராகம்-பியாகடை-திரிபுடைதாளம்.

பல்லவி.

அம்புயப்பலம்நம்பினேன்ஐயா-பரலோகசாதக
சம்பிரமத்தைவிரும்பினேனை மெய்யா
கனதியாகக்கையா.

அநுபல்லவி.

தம்பமாம்அவலம்பம்வேறிலையே தேவாதிதேவர்கள்
சகிதமாகியசுகிதமாமலையே மெய்ப்போதகிலையே. (அம்புய)

சரணங்கள்.

௧. தினமும்அலையுமென்மனமேகிசகமா-அடியேனுன்பால்இஷ்ட
சித்திவேணடியே நித்தியம்யாசகமா
கனஅநீதனென்மீதேோசகமா-என்சொல்உன்காதுக்குக்
கடினமாகிய கொடியவாசகமா
நானொருமசகமா. (அம்புய)

௨ மண்ணின்வாழ்க்கையில் எண்ணியாதனையேஅதுநீங்கவேயருள்
மன்னிடாமலேன் இன்னஞ்சோதனையே
தின்னியம்பெறு புண்ணியசாதனையே-அடியேனுக்கேஸ்வா
தீனமாகச்செய்ஞானபோதனையே
செய்தேன்வந்தனையே. (அம்புய)

௩. எண்ணியகிழ்ந்திடு புண்ணியவிக்கிரகமே-பரிசுத்தசீலர்கள்
இஷ்டபூரண துஷ்டநிக்கிரகமே
விண்ணினோர்தினம் நண்ணுசுக்கிரகமே-இனிநீபுரிந்தருள்
வேதநாயகன் தனக்கனுக்கிரகமே
பணியார்உக்கிரகமே. (அம்புய)

௩௧-இராகம்-ஆகிரி-திரிபுடைதாளம்.

பல்லவி.

சம்மதியெனக்குமெய்யனே உனைநினைக்க
நன்மதிதந்திடில் ஐயனே.

அநுபல்லவி.

அம்மவென்றழ மேன்மேலும்
வெம்மனநோயே சூழ்ந்தாலும். (சம்மதி)

சரணங்கள்.

௧. தன்னை உன்னவே கூடாதென்மே தடைசெய்வோன்தான்
இந்நிலத்துண்டோ குணக்குன்றே

நின்னையே தொழுவிரதம்
நேர்ந்தனே அனவரதம்
உன்னவே என்மனோரதம்
உதவுவாய் கருணாமிர்தம்
ஒங்கிவளர்தனம நீங்கியொழியினும்
வீங்கியுடல்பிணி தாங்கியழியினும். (சம்மதி)

௨. பதமலர்மேல்ஆசைகொண்டேனே உலகவாழ்வு
சதமலவென்றுண்மைகண்டேனே

நிதமுனைப்பணியுமதி
நீதரஇல்லையோவிதி
அதற்குறையுமோஉன்நிதி
அண்டினனேஉன்சந்நிதி
அடரும்வறுமையோடிடர்கள்சூழினும்
படருமனந்துயர்க் கடலில்ஆழினும் (சம்மதி)

௩. உத்தமபிரமசைதன்னியமே சௌஜன்னியமேமெய்ப்
பத்தர்கள் அல்லாதார்க் கன்னியமே

சுத்தமதுரபாஷணா
சோபனகுணபூஷணா
வித்தகவிசேஷணா
வேதநாயகன்போஷணா
விலகியேஎனை உலகம்நகைக்கினும்
கலகமாகவே பாலர்கள்பகைக்கினும். (சம்மதி)

௩௨. இராகம்-கேதாரம்-ஆதிதாளம்.

பல்லவி.

ஐயனே-உயர்-மெய்யனே.

அநுபல்லவி.

உய்யவே அருள்புரி செய்யபதந்தந்தெனை (ஐயனே)

சரணங்கள்.

௧. ஈசனேநான்ஆத்ம இரக்ஷண்ணியமே பெற
இரங்கியருள்கடாக்ஷ வீக்ஷண்ணியமே
தாசன்நானுனக்கென்னுந் தாக்ஷண்ணியமே கொண்டு
தந்தருள்வாய்விவேக தீக்ஷண்ணியமே. (ஐயனே)

௨. இகஙினிஅழிந்து போமதில்லாது அதை
ஈந்தனம்போது மென்றுல்சொல்லாது
நிகழ்நித்தியசுகந் தந்தால்அல்லாது சற்றும்
நில்லாமல்நச்சும் என்வாய்பொல்லாது (ஐயனே)

௩. கோதைபாலைமைந்தர் முதற்பரிஜனமே சந்தைக்
கூட்டம்அவர்மேற் கொள்ளுந்தரிசனமே
வேதைதரும்இது நிதரிசனமே அருள்
வேதநாயகனுக்குன் தெரிசனமே. (ஐயனே)

---

௩௩. இராகம்-ஜயந்தஸ்ரீ-ஏகதாளம்.

பல்லவி.

நாதாநிரந்தர-விநோதா-உன்தன்
பாதாரவிந்தம்-எனக்-காதாரம்-தாதா.

அநுபல்லவி.

வேதாந்தசார நயபோத பஞ்ச
பூதாந்தகால விபரீதா பிரக்கியாதா ஜெக. (நாதா)

சரணங்கள்.

௧. பேசருஞ்சர்வ புவனேசா நல்ல
தாசர்மனாலயவாசா பாவநாசா ஜெக (நாதா)

௨. மாலந்தரலாகாதா வினை
போவெனநீசொலிற் போகாதா சாகாதா புவி (நாதா)

௩. மாயையின்சப்தமேநிசமா அந்தப்
பேயைக்கொல்வ துனக்கவசமா தாமசமா தெய்வ

௪. அடியன்மனங் கடினஇரும்பா அரும்
கொடியவினை அதற்குக்கரும்பா நானோர் துரு
[ம்பாஜெக (நாதா)

௫. ஆதிமத்திய அந்தரகிதா சுயஞ்
சோதிமய அமரர்சகிதா கனசுகிர்தாமகி ()

௬. மாயாந்தகாரம் அகில்கிரணு வேத
நாயகன்தொழுமலர்ச்சரணு அந்தக்கரணு தெய்வ (நாதா)

---

௩௪. இராகம்-புன்னாகவராளி-ஆதிதாளம்

பல்லவி.

காக்கவேண்டும்-கடவுளே-நீகாக்கவேண்டும்.

அநுபல்லவி.

காக்கவேண்டும் எனை அனபன் ஆக்கவேண்டும் என்கவலை
நீக்கவேண்டும பாவமெலாம் போக்கவேண்டும் தினமெனைக்

சரணங்கள்.

௧. பண்ணியவினையுமனம் எண்ணியவினையும்வாக்கில்
நண்ணியவினையுந்தீரக் கண்ணியவரந்தந்தெனைக் (காக்)

௨. ஆரணனேநீகொடுத்த தாரணிசெல்வத்தின்வனம்
பூரணமானேன்பவநி வாரணசுகந்தந்தெனைக் (காக்க)

௩. எந்தவேளைமரணமோ அந்தவேலைவந்துன்அர
விந்தமலரோங்கருஞ் சுந்தரஅடிதந்தெனைக் (காக்க)

௪. பூதமுதலானஜீவ பேதகாரணனேநாளும்
வேதநாயகன்பணிபிரக் கியாதபூரணனேஎனைக் (காக்க)

௩௫. இராகம்-கேதாரகௌளம்-திரிபுடைதாளம்.

பல்லவி.

ஈசனேமல நாசனேமல வாசனேபிர காசனே.

அநுபல்லவி.

பாசஇருளினை நீக்குவாய்உன்தன்
பாதத்துக்கெனைஉற வாக்குவாய். (ஈசனே)

சரணங்கள்.

௧. சிறியன்மதிவெறும் ஸ்தூலமே அதன்
செயலெலாம்அலங் கோலமே
குறிகொள்பாச நிர் மூலமே செய்து
குணந்தந்திட இது காலமே
அறியநாடும் ஓலமே செவிப்
பொறிகொண்டுதவனு கூலமே. (ஈசனே)

௨. அடருங்காமங்கொள் பேழையே நிகர்
ஆகும்உடலெனும் பாழையே
திடமென்றுன்னும்நான் ஏழையே குறை
தீரக்கற்றறி மோழையே
தொடுசிலேட்டுமங் கோழையே உயர்ந்த
திடுமுன்தொலைப்பவப் பூழையே (ஈசனே)

௩. என்னைக்கெடுத்திடக் க்ச்சையே இடை
இறுக்கிக்கட்டிக்கொண்ட டிச்சையே
முன்னைவருத்திடக் கொச்சையே கொண்டேன்
முன்வந்திரந்தனன் பிச்சையே
உன்னுமாவரத்தியாக மழைபொழி
பன்னும்வேதநாயகன்வெவ்வினையொழி. (ஈசனே)

---

௩௬. இராகம்-ஆனந்தபைரவி ரூபகதாளம்,

பல்லவி.

நிரந்தரனேமா துரந்தரனேகன
நிர்மலத்துவ தர்மகர்த்தத்துவ.

அநுபல்லவி.

பரந்தபொருள் சுரந்துகாத்தருள்
வரந்தந்தென்வினை விரைந்துதீர்த்தருள். (நிரந்தரனே)

சரணங்கள்.

க. சித்தமிரங்கிஎள் ளத்தனைநீதயை
செய்யிற்பிழையேனோ-கன
சித்தனேஎனபிழை எத்தனைஎண்ணினும்
நீங்கித்தழையேனோ-நல்ல
உத்தமமெனைவிடும் சுத்ததரித்திரம்
ஒன்றேபலவிதம் என்துர்ச்சரித்திரம்
சித்தமெனைநெஞ்சம் உடுத்தமால்வஸ்திரம்
நீக்கிஎனைச்சேர் செளபாக்கியசமுத்திரம். (நிரந்தரனே)

உ. உதிமதிகதிர்முதலெல்லாஞ்செல்லும்
உன் ஆணைவழியே-எந்தன்
கதியொன்றேஅந்த விதியைக்கடந்து
வளர்க்குமாபழியே-இந்தப்
பொதிமதிக்கேன் தனியரசாக்ஷியே
புனிதஞ்செய்குவ துன்பெயர்மாக்ஷியே
புதிதனுனென்பதற் கென்செய்கைசாக்ஷியே
பாவன்னீயென ஈவாய்அத்தாக்ஷியே. (நிரந்தரனே)

௩. பாரிருள்நீக்காத சூரியனுலேஅப்
பாருக்கென்னசாரம்-ஞான
ஆரியனேஉன்முன் சாரலாமோஎன்
அகத்தில்அந்தகாரம்-நாளும்
சாரமில்லாச் சமுசாரகோலாகலம்
சாருமெனக்கென்றுந் திராவியாகூலம்
வீரனேநீயறிவா யென்பலாபலம்
வேதநாயகனே நீதருவாய்நலம். (நிரந்தரனே)

௩௭. இராகம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

அப்போதுனைத்தொழல் அரிதையா
இப்போதேதொழ அருள்செய்யாய்.

அநுபல்லவி.

முப்போதும் உணரு முதலேசுரர்தொழும்
அப்பாமரணம்உற் றடியேன்உடல்விழும். (அப்போ)

சரணங்கள்.

க. இடமாய்கற்பாறைபோலே இரண்டுகோழைகள்மட்டும்
சிறிதும்பேசாதவண்ணஞ் சேர்ந்திறுகிப்பல்கிட்டும்
படர்ஜீவவாரிவெளிப் படஎங்கும்ஜடமுட்டும்
பாரிதுவேளையெனப் படிமாயைதொடைதட்டு
பலங்கொள்உணர்வது கலங்கிநிலைகெட
இலங்குடலை உயிர் விலங்கிமெலிவுறும். (அப்போ)

உ, மனைவிசேய்கடன்காரர் மண்டிவார்த்தைவிரிப்பார்
வகையெமக்கென்னவென்று மணல்கயிறுத்திரிப்பார்
மனையிற்பொருளையெல்லா மாவலைபோட்டரிப்பார்
வஞ்சமென்றுமின்றேற்கையால்மணித்தொண்டையைநெரிப்பார்
மடங்குகழல்கர முடங்குசெயலொடு
திடங்கொள்காலமும் அடங்கிமாறுறும். (அப்போ)

௩, அழுகைக்குரலும்பல முழக்கமும்நானுபேதம்
ஆர்ப்பலபக்கத்தும் அடக்குமேகடனுதம்
விழுகையுறும்உடலின் வேதனையும்பிரமாதம்
வேதநாயகனே அப் போதுனைஉன்னவேதம்
விரிக்கும்இடர்பல தரிக்கும்உடலினை
முரிக்கும்இசிவொடு மருக்கும்வேளையில். (அப்போ)

---

௩௮ இராகம்-காம்போதி-ஆதிதாளம்

பல்லவி.

எவ்வகையிலும் நானே-நல்வழிபற்றி
உய்வகை அருள் கோனே.

அநுபல்லவி.

செல்வழிநிற்போர்மனத் தேன்கள்வளரும்பூவே
பௌவமாகப்பேரின்பம் பழுக்குங்கற்பகக்காவே (எவ்வ)

சரணங்கள்.

க. வறியாக்கிடவென்றாலென் குறையகைகளிற்சூலை
வாங்கநீட்டினஉலகும் வானமும்எந்தமூலை
பிறர்நோய்செய்யில்எனக்குப் பெருங்கோபாக்கினிச்சுவாலை
பேனதானம்பிறமழைபூ திடகோணடுங்கோடியோலை (எவ்)

௨. நால்வழிநடக்கவென் றால் இருகாற்குந்தளை
நாளுந்துர்வழிநடப பதில்எனக்குண்டோகளை
புல்வினையேனசெவி பொய்கள்நுழையும்வளை
புண்ணியோபதேசமென்றால் புகவுதில்லதுகளை (எவ்)

௩. உன்னைத்துதிக்கவென்றால் உலகில்என்வாய்க்குநோயே
ஊர்வம்புபேசஎனக் குடம்புமுழுதும்வாயே
மின்னேநிகாபிரபஞ்ச வேதனைநீக்குவாயே
வேதநாயகனுக்குச் சாதகமானதாயே (எவ்)

---

௩௧. இராகம்-செஞ்சுருட்டி-ரூபகதாளம்.

பல்லவி.

கதியிதென்முகம் பார்ஐயா
கதிநீயன்றி ஆர்ஐயா.

அநுபல்லவி.

மதியுள்ளோர்கள் சிகிக்கும்அமிர்த
வாரியே அருள் மாரியே. (கதி)

சரணங்கள்.

௧. உனக்கென்எண்ணம் அந்தரங்கமா
உதவிதான்செய்யிற் பங்கமா
எனக்கிங்கக்ஷய அங்கமா
இன்னமென்ன ஆடங்கமா
தனக்குநிகரில்லாத-ஞானசாகரா-குணாகரா. (கதி)

௨. அகஞ்செய்யும்வினை கற்கண்டோ
அதைத்தொலைப்பதென பலங்கொண்டோ
நிதம்நான்செய்வது விண்தொண்டோ
நீயல்லாற்கதி வேறுண்டோ
பாதகமலங்கள் பாவும்பத்தர்கள்-பாக்கியமே மனோக்கியமே. (கதி)

௩. அனைக்குபிள்ளைமேற் குரோதமா
அருள்செய்வது பிரமாதமா
வினைக்குநான்முதற் பாதமா
விலக்க இன்னம் விவாதமா
நினைக்கும்வேதநாயகன் பணிநீதனே-பிரபோதனே. (கதி)

சமு. இராகம்-கமாஸ்-ரூபகதாளம்.

பல்லவி.

ஜாலஞ்செய்ததேதோ—ஐயா
சீலம்-ஈயொண்ணுதோ-மெய்யா.

அநுபல்லவி.

ஞாலமெல்லாந் தாங்குகையா
நற்குணமில் லார்க்குவெய்யா. (ஜாலம்)

சரணங்கள்.

க. பெண்டுபிள்ளை யோ டினமே
போய்ச்சுரை படர் வளமே
அண்டும் இவரால் தினமே
ஐயையோ நொந்தேன் மனமே. (ஜாலம்)

உ. பாழுமனமே மற் கடம்
பண்ணும் அகட விகடம்
ஊழ்வினை தரும் சங்கடம்
ஒழிந்துநீ யருள்வாய் திடம் (ஜாலம்)

ரு. நீதிவழுவரச் செக் சோலா
நித்திய சங்கித லோலா
வேதியர் பரவுஞ் சீலா
வேதநாயகன் சேர் காலா (ஜாலம்)

சக. இராகம்-காமா-திரிபுடைதாளம்.

பல்லவி.

வேதநாயகனே-எவ்விதமும்-உன்
பாதமலர்-அருளே.

அநுபல்லவி.

போதநாயகனே பொய்நீங்கிய
புனிதநாயகனே மெய்தாங்கிய (வேத)

சரணங்கள்.

க. எண்ணுமனமேதுர்க் குணங்கள்கொள் பாண்டம்
ஏதும்அறிகிலேன் ஞான காண்டம்
பண்ணும்பாவங்களே பிர மாண்டம்
பசரும் வார்த்தைகளே அபாண்டம் (வேத)

௨. மண்ணில்அறு திணம்பூத தேகம்
வளர்ப்பதெனக் ககலாஉத்தி யோகம்
புண்ணியஉடல் வளர்ந்திடும் வைதீகம்
பூண்டிலேன் அருள்வாய் விவேகம் ()

௩. விதரவிஷகரு கிரகஸ்தாச் சிரமம்
விரும்புவோர்க்கிதில் விலகிடாச் சிரமம்
நிதங்கொண்டேன் இந்தவாழ்விலே பிரமம்
நீங்கவேதகாயகனே அருள் கிரமம் (வே)

---

௪௨. இராகம்-காம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

எனக்குக்கட்டியவீட்டை—எனக்குக்கொடாதிருப்ப
தென்னஞாயம்ஸ்வாமி.

அநுபல்லவி.

இனிக்குர்அவ்வீடு செய்தெங்கள்நித்திடமே
என்றுநீசெய்யவில்லைதயாவாக்குதத்தமே
உனக்குநான்பிள்ளையென்ப துலகப்பிரசித்தமே
உவந்துகேளாயோ என்பிரலாபசத்தமே. (எனக்கு)

சரணங்கள்.

௧. சித்தவிகாரமூறு நரர்க்குச்செய்பிவ்வுலகம்
சிறப்புள்ளதெனின்கோனே நல்ல
உத்தமர்க்கமைத்தநித்தி யானந்தமுத்தியின்பம்
உணர்வதெப்படி நானே
சுத்தமணிபொன் அங்கேதுரும்புகள்கூட்டமே
தொல்லுலகின்பமெலாந் துன்பம்போல்ஓட்டமே
அந்தமிபாலித்திய சூரியர்அன்பர்கூட்டமே
அநுதினம்எனக்கந்த வீட்டினில்நாட்டமே. (எனக்கு)

௨. முகமுகமாகஉனைத் தரிசிக்கும்பாக்கியத்தை
மொழியநினைக்க ஒண்ணுமோஇந்த
இகமிசைமனமொடு புலன்கட்கெட்டாதஅந்த
இன்பம்எப்போது நண்ணுமோ

அகப்பிணைஉடன்படன்ன ஆனந்தம்பொங்குமே
ஆயிரங்கோடி சூரியர்ஒளியன்குமே
சிகாமணிதே விநோதங்கள்ளன்குமே
சிர்திசையானந்தம் பேரின்பந்தங்குமே. (எனக்கு)

௩. இகபரமெட்டுகைக் குடிப்பப்பிரதிஷ்டை செய்த
இவ்வாரமுமனக்கமேய சித்திய
ஈசுவரனே தன்னில் பிரவேசிக்கவேகல்ல
கைக்குறாமல் அருள்வாயே
அகிலலோகப்பிரபஞ்ச காடகருக்திரனே
அற்புதபாமசித்தி யானந்தசேஷத்திரனே
சிகாமணிசொற்ப்த்ர நாமதகாத்திரனே
திருவேதநாயகன்தொழும் குணபாத்திரனே. (எனக்கு)

---

௩௩. இராகம் செஞ்சுருட்டி - ஆதிதாளம்.

பல்லவி.

ஐயனே - உன் - அழகைக்கான
ஆசைநான் - கொண்டேனே. (ஐயனே)

அநுபல்லவி.

வையமீதுடல அழகையும்
வகைவகையா வகுத்துக்காட்டும். (ஐயனே)

சரணங்கள்.

௧. உதயசூரியன் சோமன்தாரகை
உன்முகனே மின்மினியே
சித்திரவமணி பொன்னும்குப்பைகள்
திகருமோஉனை இனியே. (ஐயனே)

௨. கனியுந்தேனும் பாலும்சீனியும்
கண்டுங்கரும்பும் சிறுமை
இனியஉனது தரிசனத்தின்முன்
இவைகள்யாவும் வெறுமை. (ஐயனே)

௩. செழுமையாகிய வண்ணமலர்கொள்
சிங்கார வனக்காட்சி
அழகின் ஆலயமான உன்முன்
அற்பமெத்தனைபோ தாட்சி. (ஐயனே)

௪. அதிசவுந்திர மயில்குயில்கிளி
யாதிபறவைக் கூட்டம்
விதயின் அனைய செய்யின்னழகின்முன்
வெட்கிப்பறுசுபோ லோட்டம். (ஐயனே)

௫. சத்தஸ்பரிச ரசரூபகந்தந்
தான் அல்லாத பொருளே
எத்தன்மைஉன திருவென்றறிய
இன்பக்காட்சி யருளே. (ஐயனே)

௬. பதியில்நீசெய் பலபொருள்களைப்
பார்க்கபார்க்க வடிவே
அதிசயந்தரும் உனதன் அற்புத
அளிகினுக்குண்டோ முடிவே. (ஐயனே)

௭. பிறந்தநாள்முதல் தாயைக்காணாப்
பிள்ளைதன்னை ஒத்தேனே
சிறந்தவேத நாயகா உன்மேல்
சிந்தையாவும் வைத்தேனே. (ஐயனே)

௪௪. இராகம்-மாஞ்சி-ரூபகதாளம்.

பல்லவி.

என்னைநீ ஆளுவாய்-ஏகனே-யோகனே-என்னை.

அநுபல்லவி.

பொன்னைமாதைப்பூவை எண்ணம்
பூண்டுநான்கெடாத வண்ணம். (என்னை)

சரணங்கள்.

௧. யாதனுசரீரமே யாதுமில்லைசாரமே
வாதபித்தவிகாரமே வாதனைகள்அபாரமே
மலவாரணா வடிவபூரணா
நலஉதாரணா ஞானகாரணா. (என்னை)

௨. எந்தநாளுங்கிலேசமே என்னெஞ்சிற்பிரவேசமே
பந்தவினையைநாசமே பண்ணிநீசெய்வாசமே
பதிதபாவனா பரமஜீவனா
அதிகசோபனா அகிலஸ்தாபனா. (என்னை)

௩. அன்னை தந்தைநீ அலவோ ஆயிரந்தரஞ்சொல்லவோ
என்னைமாயைகொல்லவோ எங்குநான்இனிச்செல்லவோ
ஏகபேதகா இனியசாதகா
வேதநாயகா விமலநாயகா. (என்னை)

——()——

௩௫-இராகம்-சைந்தவி-திரிபுடைதாளம்.

பல்லவி.

ஏழைக்கிரங்கலுண்ணுதா-இந்த-ஏழை.

அநுபல்லவி.

ஆடக்கடல்உலகை ஆளும்விநோதா. (ஏழை)

சரணங்கள்.

௧. சாடும்பிரசண்டக் காற்றாலே-திசை
தப்பியேஅலைபடும் கப்பலைப்போலே
நாடும்பிரபஞ்சமாலே-என்னை
நைவிக்கவாடினே னுனபுவிமேலே. (ஏழை)

௨. நீசெய்வதெல்லாம்சகாயம்-இங்கே
நிரந்தரம்என்செய்கை யாவும்அன்னியாயம்
ஈசனேநின்பத நேயம்-எனக்
கெள்ளளவுமில்லை ஈதெனனமாயம். (ஏழை)

௩. அற்பசுகத்துக்குழைத்தேன்-பாரில்
அனுதினம்ஆயிரம் பொய்சொலவிப்பிழைத்தேன்
பற்பலதீவினை இழைத்தேன்-துன்பப்
பாரம்பொறுமலே பரிந்துன்னை அழைத்தேன். (ஏழை)

௪. அன்மபத்தினிமணவாளா-அகி
லாண்டபிரமாண்ட அகண்டகோளா
வான்மகிழ்தீனதயாளா-தினம்
மகிழ்வேதநாயகன் வணங்கும்பொற்பாதா. (ஏழை)

சகூ-இராகம்-தன்யாசி-ஆதிதாளம்.

பல்லவி.

கருணாகரப்பரம்பொருளே-அடியனைக்
கண்பார்த்தருள்வாயே (கருணா)

அநுபல்லவி.

இருளஞ்செயும் இரவிசமான
தெருளுடைய தேஜோமயம் ஆன. (கருணா)

சரணங்கள்.

க. தோன்றினநாள்முதல் சுகுணமொன்றறியேன்
சொப்பனத்தன்னிலுந் துர்க்குணம்பிரியேன்
நன்றவநீயென என்றுமேதறியேன்
என்னசெய்வாயோ வென்றேக்கிலன்சிறியேன். (கருணா)

உ. தரணியில்நானொரு தருவெனமுளைத்தேன்
தமகுணம்பாவமே சாகைபரக்கிளைத்தேன்
கருமமாகியவிஷக் கனிகளேவிளைத்தேன்
கண்டனைசெய்வை யென்றஞ்சியேகளைத்தேன். (கருணா)

ந. நிகிலலோகக்கட் கெல்லாம்நீயதிகாரி
நிச்சயமானவன் மனம்நினக்கொருபகாரி
அகிலத்தனிலே அந்தமனம்அகங்காரி
அடக்கிஆளாவிட்டால் அழியாளோசபரி. (கருணா)

ச. அழுக்காலயமான அமிர்தசுக்தாமே
அன்பருக்கன்மழை பொழியுங்கர்த்தாமே
தொழுதிடும்வேதநாயகன் சுதக்தாமே
துணைநீஉனை நம்பினேனிரங்குமே. (கருணா)

சள-இராகம்-மோகனம்-ஆதிதாளம்,

பல்லவி.

ஏனின்னம் தாமதமையா
என்னிடம்வர. (ஏனின்)

அநுபல்லவி.

நானேஉமக்குமுத்தித் தலமொன்றுமில்லையோ
வானமுத்தனைவிட்டு வரமனமில்லையோ. (ஏனின்)

சரணங்கள்.

௧. சூரியனைத் தூண்ட... அசக்கின்றீரோ - அந்தச்
சோமனுக்கொளிதரச் சென்றீரோ
பாரினைப்புரட்டியே பின்றீரோ — அதில்
பகலிரவுண்டாக்க முயன்றீரோ
காரிலிருந்து கனமழைசொரிக்கிறீரோ
கர்ப்பத்திற்சிசுக்களையே புரிக்கிறீரோ
சாரும்பல்லுயிர்க்குயிராய் விரிக்கிறீரோ
சர்வலோககாரியஞ் செய்துநிற்கிறீரோ. (ஏனின்)

௨. அண்டகோடிகளைத் தூக்கினீரோ - நவம்
ஆகச்சில அண்டம் ஆக்கினீரோ
கண்டகர் உலகை நீக்கினீரோ — கடல்
கரையைக்கடவாமல் தேக்கினீரோ
அண்டம்பல்லுயிர்க்குழு தூண்டுகிறீரோ
ஐம்பூதங்கட்கும் வேலைகாட்டுகின்றீரோ
மணமுங்கனிக்குச் சுவைகூட்டுகின்றீரோ
மலருக்குடலவண்ணந் தீட்டுகின்றீரோ. (ஏனின்)

௩. மரஞ்செடிபயிர்கள் நிறைத்தீரோ - அவை
வளரவேதண்ணீரை இறைத்தீரோ
சுரர்கள் இசைகேட்டுக் களித்தீரோ - நல்ல
தொண்டர் இதயத்திற் ஒளித்தீரோ
பரமகிருபாகர பரவிதநேசரோ
பரமதகண்டன பாபவிநாசரோ
சருவவிநோத சராசரவாசரோ
தாசனவேதநாயகன் தன்பிராணேசரோ. (ஏனின்)

௨௮-இராகம்-மத்தியமாவதி-ரூபகதாளம்.

பல்லவி.

இவளவுதான் ஐயனே-அதிகம் அல்ல
இரங்கியருள்செய்யனே.

அநுபல்லவி.

அவனியில்வளரும் மூவாசையைப்பரிகரி
எவளவுமேதுஅபம் இல்லாமல்ஆதரி
இதயமலர்தரி விதனமதுபிரி
நிதமும்அருள்புரி இதுவேசரிசரி. (இவளவு)

சரணங்கள்.

௧. என்னை எந்நாளும் நீ நீங்காதே - நான்போம்
இடமெங்குங் கூடவா பின் வாங்காதே
வினையென்றென் மேற்கோபம் வீங்காதே - மன
வேதைசுமக்க என்னால் தாங்காதே
நினைவிலும் தீமை நான் நினையாமற் பார்த்திரு
நித்திரை செய்யும்போதென் பக்கத்தில் காத்திரு
நெடியவினைபெரு கொடியபிழைபொரு
அடியன் மனமுறுகடி துயர் அறு. (இவளவு)

௨. மாயையில் மனம்புக ஒட்டாதே - என்னை
வஞ்சனைக்காளென்று சுட்டாதே
ஆயிரம் தண்டம் என் சொல் தட்டாதே - உன
தனுக்கிரகமின்றி நலங்கிட்டாதே
நாயேன் விரும்பிய நல்லவர்கள் கொடு
நரகையடைத்து மோக்ஷ நாட்டைத் திறந்துவிடு
நனவு கொடு கொடு-சினமும் விடுவிடு
தினமும் மகிழ்வொடு-கனசுகுணம் இடு. (இவளவு)

௩. நலமன்றிக் குறைய ஆராயாதே-பெரு
நன்மைகள் கொடுப்பதில் ஓயாதே
பலவேலையிட்டேனென்று காயாதே-அற்பப்
பாக்கியம் நான் கேட்கினும் ஈயாதே
புலனில் வேதநாயகன் புகழுமசுகுணசீலா
பூதபவிஷ்யவர்த்தமானமெனுந் திரிகாலா
போதமழை பொழி-மாதர் மயலழி
பாதகமதொழி-எமமறவிழி (இவளவு)

௪௬-இராகம்-சாரங்கா-அடதாளசாப்பு.

பல்லவி.

ஆதரித்திட நல்ல தருணம்-என
தையாவுனக் கனந்தஞ்சரணம். (ஆதரி)

அநுபல்லவி.

பாதசனுசனு-பரமகிருபாசனு
சாதகமேசனு-தர்மப்பிரயோசனு. (ஆதரி)

சரணங்கள்.

க. என்பழிமறைப்பதில் யானையதப் பாதாளம்
இதரர்பழிதூற்றிலெ என்வாய்பெரியமேளம்
அன்பின்மனப்பேராசை ஆம்புலியினும்நீளம்
அண்டபவசமானாலும் அடங்காப்பெரும்வேதாளம்
ஆட்டிமயல்வலை-பூட்டு அநுதினம்
கோட்டிசெயும்வினை-ஓட்டி அடியனை. (ஆதரி)

உ. ஓடிஅலையநெஞ்சிச் சூலகமுமவானமும்அற்பம்
உன்னிடம்வரவென்றால் ஒழியாதஅசநதர்ப்பம்
தேடிநற்கருமங்கள் செய்வதுங்கஜகர்ப்பம்
தீவினைசெய்வதேஎன் சிநதையின்சங்கர்ப்பம்
திருத்தமுடனேஎன் கருத்துநலமிசைப்
பொருத்தமுறச்செய்து வருத்தந்தொலைக்கவே. (ஆதரி)

ங. என்குறைகாணவென்றால் என்னிருகண்ணும்ஊனம்
இதரர்பிழைகாணக்கண் இரவிகோடிசமானம்
வன்கண்மொழிகளுக்கென் வாயேமுக்கியஸ்தானம்
மதுரச்சொல்பேசவென்றால மாறாததீர்க்கமோனம்
வாதமொடுபல பூதகாரண
வேதநாயக நீதனேஎனை. (ஆதரி)

—••••—

௫௰. இராகம்-நாதநாமக்கிரியை—திரிபுடை தாளம்.

பல்லவி.

உன்னைநம்பினேன்ஐயனே-எனையாதரி. (உன்னை)

அநுபல்லவி.

உன்னைநம்பியஏழை தன்னைமுகம்பாராமல்
அன்னைபிதாவேநீ கைவிடலாமா
நான் கெடலாமா
துன்பப் படலாமா

சரணங்கள்.

க. தனமுமின்னார்கள் புவனமும்உலகவாழ்வின்
கனமுமவேண்டிலன் இதுநேராயோ
தினமுமஉனைக்கருது மனமும்உனதுதரி
சனமும்வேண்டினன் அருள்கூராயோ
மருள் தீராயோ
பொருள் தாராயோ. (உன்னை)

௨. படிமீதில்என்ன முடியாஉதவிகள்
அடியேனுறச்செய்த பெரியானே
கொடியேனஉனை அரை நொடியாகிலுந்தொழும்
படியேஅருள்நலம் பிரியானே
தூயாக் சூரியானே
தீயர்க் கரியானே (உன்னை)

௩. அயமேபெருங்கல்லின் மயமேயெனும் இரு
தயமேவெழுமென உருகாதோ
ஸ்வயமேபரமாகி சயமேவேதநாயகனை
நயமேவினைதெய்வம் பருகாதோ
துன்பு கருகாதோ
இன்பு பெருகாதோ

---

௫௧. இராகம்—பந்துவராளி-ரூபகதாளம்.

பல்லவி.

கடைக்கண்ணாலெனைப்பாராய் உன
துடைக்கலம்வினை தீராய் (கடைக்)

அநுபல்லவி

இடைக்கொண்ணுப் பதந்தாராய் நலம்
படைக்கவே அருள்கூராய் அருட்
கொடைக்குநானென்னவே யவதரித்த
கோலாகல-லீலா-அநு-கூலா குண-சீலா-நிதம் (கடைக்)

சரணங்கள்.

௧. வஞ்சகமாயையில் ஆழ்ந்தேன்-ஒரு
தஞ்சமென்றுன்னடி தாழ்ந்தேன்
அஞ்சலென்றேனனை ஆதரித்தாளுவாய்
ஐயாமிகு-பொய்யால்மனம்-நையாதருள்-மெய்யா-ஒரு (கடைக்)

௨. ஐயனே தீரா யென்பாபம் அருள்
செய்யஉனக் கென்னலோபம்
வையகமாதி வளர் அண்டம்யாவினும்
வாசாபூவ-தேசாமற-நாசாபிர-காசா-ஒரு. (கடைக்)

அஞ்சலெனில் உன்வாய் நோமோ ஏழை
நெஞ்சம்வருந்திட லாமோ
பஞ்சமோகைப்பொருள் கொஞ்சமோபூபரி
பாலா அது-கூலா ஒரு-மோலாமுதல்-நூலா ஒரு (கடைக்)

ச. இத்தரைமீதினில் நீயே நல்ல
பத்தரைக்காக்கவந் தாயே
சித்தமுவந்தெனை நித்தமும் ஆளொளிர்
தேகாகன-யோகா அதி-தியாகாதனி-ஏகாகுளிர் (கடைக்)

ரு. பூதலம்போற்றும்பொற் பாதா அரு
மாதவர்ஞானப்பிர சாதா
வேதநாயகன்பாடுந் தமிழ்க்கருள்
வேதா உயிர்-நீதாகன-தாதாநய-போதா உன் (கடைக்)

ருஉ. இராகம்-அசாவேரி-திரிபுடைதாளம்.

பல்லவி.

பாசத்தால் மனைவாடினேன்-உந்தன்
வாசத்தால் மலர்கூடினேன்.

அநுபல்லவி.

தேசத்தோர்கள்கை வல்லியமே உயர்
நிர்மலாதித்த துல்லியமே கன
மாசற்றோருங்கும் பிரபல்லியமே ஜெகம்
மகிழும்பக்தவாற் சல்லியமே மல (பாசத்)

சரணங்கள்.

க. நினைவிலேன் பிழைபாவுமே எண்ண
நினைக்குந்தானென்ன சாத்தியமா
எனைவருத்தம் இந்திரியப்பேய்தனக்
கித்தனை ஆகாத்தியமா
வினை எனக்கு விரோதியா என்றும்
விலகிடாக்கர்ம வியாதியா கொடு
மனமுமே பிரதிவாதியா கெட்ட
மாயை யென்ன தாயாதியா ஐயா (பாசத்)

உ. இருத்தலைக்கொள்ளி எறும்புபோலெனைக்
இடைவிடாமன வாட்டமே
மருவும்பங்கப்பசாசு தன்னோடு
மாறிடாத போராட்டமே
கருமமாயா விகாரமே செய்யும்
கலகஜாலம் விஸ்தாரமே நல்ல
தருமம் எனக்குத் தூரமே பின்னும்
சற்புகள்கற்பக யாரமே ஐயா(பாசத)

௩. வளர்கல்யாணத்தில் தாலிபூட்டிட
மறக்குமூடர்கள் போலவே
தளர்பிரபஞ்சவியாபாரத்தால் உன்தன்
தாள்மறந்தனன் சாலவே
உளவியாதிக்கா ரோக்கியமே நிதம்
உணனுவோர்கள் மனோக்கியமே நலம்
விலைபமாமறை வாக்கியமே தொழும்
வேதநாயகன் பாக்கியமே பந்த (பாசத்)

௫௩. இராகம்-கன்னடகௌளை-ஆதிதாளம்.

பல்லவி.

ஆதிபரமநாதா-ஞான-ஜோதிதர ஒண்ணுதா.

அநுபல்லவி.

பூதலம்பரவும விநோதனேகன அ
நீதமாய் இருள் பேதமாகவே. (ஆதி)

சரணங்கள்.

௧. காமக்குரோதமதம் லோபம் அகங்
காரம்பொய்மாற்சரியங் கோபம் இன்னும்
பூமியிற்பலபல பாபம் செயயும்
புல்லன்மனம் அவித்யா ரூபம் நல்ல. (ஆதி)

௨. பெண்டுபிள்ளைகள் சமுசாரம் முதற்
பேசும்லௌகிக வியாபாரம் தன்னில்
மண்டுமேமோகாந்த காரம் துயர்
மாற்றியருள்வை நிர்விகாரம் நல்ல. (ஆதி)

ங. பாவக்கடல்கடக்குங் கலமே தொண்டப்
பயிர்கள்வளருந்தெய்வ நிலமே கன
நாவலர்போற்றிடும் நிர்கலமே வேத
நாயகாநானுன் அடைக்கலமே. (ஆதி)

ருச. இராகம்-கரகரப்பிரியை-ரூபகதாளம்.

பல்லவி.

இந்தவரந்தருவாய் எனக்
கெந்தவரங்களு மில்லையென்றாலும்.

அநுபல்லவி.

சுந்தரமாகத் துலங்குந்தெய்வீகனே
சந்ததமும்புவி தாங்குந்நிர்வாகனே. (இந்த)

சரணங்கள்.

க. காமிகநிமித்தங் கலங்கி நையாமல்
கண்டவர்க்கெல்லாம்நான்தொண்டு செய்யாமல்
மாயாப்பிரபஞ்சத்தில் மாட்டி வையாமல்
மாதர்கண்ணம்பென் மனதில் தையாமல் (இந்த)

உ. எங்கெங்குமேஉன்னுருவாய் மின்ன
எண்ணம்வேறின்றி உனைமன் முன்ன
மங்களநாமமென் வாய்நிதம் பன்ன
வார்த்தைகள்யாவுமுன் வார்த்தையாய் மன்ன. (இந்த)

ங. சுத்தசைதன்னிய நிலைமையில் சார
தோஷகர்மானுபந் தங்களுந் தீர
அத்தனேநித்த மூனக்கன்பு கூர
ஆனந்தவீட்டிலே நான்வந்து சேர (இந்த)

ச. சூதுபொறாமைபொய் கோபமில்லாமல்
சோரமுலோபந்துன் மார்க்கமில்லாமல்
வேதநெறியை விலகில்லாமல்
வேதநாயக விளம்பஞ்சொல்லாமல். (இந்த)

௫௫. இராகம்-கமாஸ்-ரூபகதாளம்.

பல்லவி.

ஏகபராபரனே-கருணைப்பிர
வாகயனேகரனே.

அநுபல்லவி.

தேசமுறும்பல மோகஉபாதிகள்
ஏகஎனக்கு விவேகமருந்தருள். (ஏக)

சரணங்கள்.

௧. சஞ்சலமானேனே-மனம்நொந்து
தளர்ந்துபோனேனே
அஞ்சலெனத்தானே-அடியேனை
ஆண்டருள்வாய்கோனே
பஞ்சபூதாதிபிரபஞ்சமெலாஞ்செய்து
தஞ்சம்செயும்நிஷ்பிர பஞ்சப்பொருளான. (ஏக)

௨. சங்கடமாற்றாயோ-எளியேன்
தன்முனந்தோற்றாயோ
இங்கிதஞ்சாற்றாயோ-தமியனை
யேகரையேற்றாயோ
அங்குமிங்கும்புவி-எங்குமடையிரெனத்
தங்கும்படிஅருள் பொங்குங்குணாகர. (ஏக)

௩. நேபர்சகாயனே-அருமறை
நீதிசொல்வாயனே
தூயவியாகனே-அமரர்கள்
சூழ்சமுதாயனே
மாயவியாதி-நோயணுகாமலே
தாயெனவேவேத நாயகனேஆளும். (ஏக)

---

௫௬. இராகம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

கருணாகடாக்ஷஞ் செய்வாயோ-சுவாமி

அநுபல்லவி.

மருணாசமாகவே மகிழ்வாகநீயே. (கருணா)

௧. அசீயாயம் உலகவிர்த்தாந்தம் இதில்
அழிபாதவண்ணம்நீ அருள்வைஉபசாந்தம்
தனுஉன்றனோடு மேகாந்தம் கொள்ள
சார்வதாகாலமு மௌனதுசித்தாந்தம் (கருணா)

௨. நாமரூபகமாம் பிரபஞ்சம் ஆன்ம
நன்மையைஅழிக்கும் எந்நாளும்இதுநஞ்சம்
காமவிஷயாதிகளில் நெஞ்சம் நாளும்
சலங்கினேனின்பாத கமலமேதஞ்சம் (கருணா)

௩. போகாந்தநிலைமை யுறுதேவே நல்ல
புவனகோடிகள்செய் தளிக்கின்றகோவே
வேதாந்தரச மொழுகுகாவே நிதம்
வேதநாயகன்இதய வண்டுவளர்பூவே. (கருணா)

௫௭-இராகம் காம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

ஆதிபரமநாதா-நல்ல
அற்புதநற்பதம்பெறப் பொற்பதம்எனக்கருள்செய்

அநுபல்லவி.

ஓதரும்உயிர்க்குயி ரோங்கியெங்குமநிறையும்
பூதசராசரப் பொருள்கள்எல்லாம்உறையும் (ஆதி)

சரணங்கள்.

௧. ஜீவன்பிழைக்கும்வழி அறியேனே நான்
தெற்குவடக்கறியாச் சிறியேனே
பாவலசரிகொண்ட வெறியேனே பந்த
பாசக்களையவெட்டி எறியேனே
ஆவலுடனேஎங்கும் அலைந்தகம்வெம்பினேன்
தேவநாயகனே உன்திருவடிநம்பினேன் (ஆதி)

௨. ஐயனேஎனக்கருள் ஊட்டாயோ கெட்ட
அகங்காரமெனும்பேயை ஓட்டாயோ
உய்யவழியெனக்குக் காட்டாயோ எந்தன்
உள்ளத்தில்உன்பதத்தை நாட்டாயோ
பொய்யுலகநடையைப் பொருளெனநாடினேன்
மெய்யறிவில்லாமலே மிகமிகவாடினேன் (ஆதி)

௩. அண்டங்கள்படைத்தளித் தழிப்போனே கணம்
ஆகப்பல்கோடிகாலங் கழிப்போனே
தொண்டர்மனத்துயரம் ஒழிப்போனே நல்ல
சுகமுத்தரோடுகூடிச் செழிப்போனே
அண்டும்வேதநாயகன் ஆகத்தொளிர்ஜோதியே
மண்டும்வினைகளெல்லா மாற்றுதல்நீதியே (ஆதி)

---

௫௫ இராகம்-பரசு-அடதாளசாப்பு.

பல்லவி.

ஜெகநாதா-வினை-அகலாதா

அநுபல்லவி.

பகலோனென அரும் பவஇருள்நீக்கும் (ஜெ)

சரணங்கள்.

௧. பரிதாபம்பரிதாபம் ஐயாஎன்னிலைமை
பஞ்சப்புலாதியர்க் கார்தந்தார்தலைமை
தரையிசைஎன்செய்கை யாவுமேபுலைமை
தத்தருளினிஞான சாஸ்திரப்புலமை (ஜெக)

௨. அநுகூலசத்துரு வாகுமென்னுள்ளம்
அநுதினஞ்செய்வதெல்லாம் பெருங்கள்ளம்
தினமுமேபடித்திடுந் தீவினைப்பள்ளம்
தீர்த்தெனையாட்டுவை திருவருள்வெள்ளம். (ஜெக)

௩. ஈசனேஅறநெறி எனக்கென்றும்விலக்கம்
என்பிழைகளைஎண்ண இல்லையேஇலக்கம
கூசிபோனாமிகக் கொண்டேன்கலக்கம்
குணவேதநாயகா கொடுத்தருள்துலக்கம். (ஜெக)

---

௫௬. இராகம்-மத்தியமாவதி-திரிபுடைதாளம்.

பல்லவி.

இரக்கஞ்செய்வாயோ-ஐயாஎன்மேல்.

அநுபல்லவி.

இரக்கஞ்செய்வாயோ புரக்குமெங்காயே
ஏகமாகிய-யோகபூரண-பாவமேபெற-மோகனே அற. (இரக்)

௧. தேகநிமித்தம் செய்வதநர்த்தம்
ஏகபிரசித்தம் ஏங்கினேன்சித்தம்
இன்படமேவிய நின்பதாம்புய
அன்புதங்கிட துன்பமங்கிட (இரக்)

௨. நானொருமூடன் காயினுங்கேடன்
ஈனர்கள்சீடன் என்றும்பொய்வேடன்
ஈனமும்அவமானமுங்கெட
ஞானமுங்கன மோனமுந்தொட. (இரக்)

௩. உலகவியாபாரம் ஓயாவிசாரம்
கலகஅபாரம் கர்மவிசாரம்
கஷ்டமுங்கன நஷ்டமும்பெறு
துஷ்டனானுன் தஷ்டனாகவே. (இரக்)

௪. தாசர்கள்நேசா தர்மவிலாசா
பாசாவிநாசா பாக்கியப்பிரதேசா
பாதமேதொழும்வேதநாயகன்
மீதருள்மற வாதநாதனே. (இரக்)

௬௰. இராகம்-சங்கராபரணம். ரூபகதாளம்.

பல்லவி.

பரனேபகர்தசுதந்-தரனேநாளும்
பக்ஷம்வைத்தென்னைசம்-ரக்ஷணைசெய்தருள்

அநுபல்லவி.

இரவிகோடிபோல் ஒளிவீசிடும்
ஏகஅநேகவைபோகநிர்தேகதம். (பர)

சரணங்கள்.

௧. உன்னையல்லால்கதி பின்னையிலையென்
றுனக்குத்தெரியாதா நாளும
ஊற்றதன்பிள்ளையைப் பெற்றதாய்தள்ளின்
உலகஞ்சிறியாதா மேகம்
தன்னைப்பயிர்வேண்டு முன்னே அருமழை
தானேசொரியாதா அந்தத்
தன்மைபோல்நீஉயர் நன்மையுதவிலென்
தாபம் மரியாதா

இங்கிலமீதினிலென்னைப் போலோர்ஜடன்
இல்லையேபைங்கிளிச் சொல்லைபற்றுருடன்
மன்னிமோகக்கடல் தன்னில்விழும்விடன்
மாளுமுன்னாளும் வந்தாளுவதுனகடன் (பர)

௨. நீவியஅண்டங்கள் மேவியஆகாயத்தில்
நிற்கச்செய்வதாய்நீயே எந்தன்
நெஞ்சம்உள்தாளிணைக் கஞ்சம்பதிந்திட
நீவரம்ஈவாயே உனக்
கோவியமோஇது காவியங்கொள்ளரும்
உத்தமனந்தாயே எனக்
குணைத்தருமட்டும் நின்னைஅலட்டா
தொழியுமோ என்வாயே
தீவினைநாசனெனப் புகழ்மாலையே
சேர்ந்தஉனக்கென்ன சாந்தர்கண்வேலையே
பாவியென்பாலுண்டு வேலைபல்காலையே
பட்டேன்பொய்விட்டேன் கும்பிட்டேன்உன்காலையே (பர)

௩. திகலும்பஞ்ச பூதம்வளர்சர்வ
சாதகபூமியே வினை
தீர்ந்திடவேஞானக் காந்திசொரியுஞ்
சர்வாந்தரியாமியே என்றும்
வேதநாயகன்மீ தருள்மறவாத
ஸ்வாமியே உண்மை
விளங்கவேடல வளங்கள்சாரும்நிஷ்
களங்க நேமியே
போதனேநீங்காயென் பாதகவெட்டையே
பொய்யுருவாகிய மெய்யனுங்கட்டையே
மாதவேனீக்குமுன் சாதகநிட்டையே
நண்ணிடப்பண்ணுவாய் புண்ணியப்பிரதிஷ்டையே (பர)

---

௩௧. இராகம்-யதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

இன்னம்பராமுகம்-ஏன்தோ எந்தன்
முன்னம்வந்தாள-ஒண்ணாதோ

அனுபல்லவி.

தன்னவரைரக்ஷிக்கத் தானேகங்கணமே
தரித்தவனேஎனை ஆதரித்தல்வங்கணமே. (இன்னம்)

௧. யார்க்கோசொல்வதுபோல் நீஅசட்டைசெய்யில்
எப்படித்துலைப்பேன் என்கன்மக்கட்டை
மார்க்கமுடனேநீ மெஞ்ஞானநிஷ்டை தரும்
மட்டுமொன்விடுவேனே என் அசட்டை
மூர்க்கவினைகளுக்கு நானொருபையோ
மூடமனமுமாயையும் ஒருகையோ
தீர்க்கமாகஉனைநான அடுத்ததுபொய்யோ
தெய்வமேநீகைவிடில் என்செய்வேன் ஐயோ. (இன்)

௨. தீனருக்குதவுவதே தியாகம்பெருஞ்
செல்வருக்கீவது துர்விநியோகம்
மானமுள்ளோர்க்குன் அருள்பிரவாகம்பின்னும்
நலமவர்க்கீவதில் என்னுபயோகம்
ஈசனுனைஎனக்கு ஞானசையோகம்
ஈவதுவேநல்லதி யாகப்பிரயோகம்
நானுன்சந்நிதி அதிலென்னசந்தேகம்
நானவிடேன்விடேன் பூர்வார்ஜிதபாகம். (இன்)

௩. பிள்ளைக்கும்தாய்க்கும் உண்டோபிணக்கு மிகப்
பெருகும்உனகருணைக் குண்டோகணக்கு
கள்ளமயலுறு மென்மனக்குணக்கு
கனங்கொள்நன்மார்க்கத்தில் எனைஇணக்கு
தள்ளரியதாகிய பரமசத்துவமே
சாக்ஷாதுலகெங்கும் விளங்குந்தத்துவமே
விள்ளரிதாகிய சர்வஞ்ஞத்துவமே
வேதநாயகன் தனக்குரியசொத்துவமே. (இன்)

௩௨. இராகம்-ஸ்ரீராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

வேதநாயகா-நம்பினேன்-உனை

அநுபல்லவி.

ஏகமும்விப ரீதமுங்கெட
நீதமுங்கன போதமுங்கொடு. (வேத)

அ

சரணங்கள்.

௧. தினமும்உன்பணி விடையே நான்மறவாமல்
செயஅருள் நன்னடையே
இனமாகும் அருட்கொடையே வழங்கிட
ஏனின்னமுந் தடையே
கனமுமேலவர் இனமும்நிர்மல
மனமுஉன்தரி தரிசனமுமேயருள். (வேத)

௨. பொய்வளர்மெய்க் கும்பமே உடையமுன்
போதிபுண்ணி யாரம்பமே
தெய்வநி ராலம்பமே என்கவிகளைச்
செவிகொண்டு இரக்கம்பமே
செய்குவாயுளம் வைத்துவாயருள்
பெய்குவாய்வினை எய்குவாயுயர். (வேத)

௩. தயைசெய்யிற் பொல்லாங்கா எந்தனையாளத்
தாமதஞ்செயல் பாங்கா
பயன்உதவிடில் தீங்கா வேதநாயகன்
பரவுங்குண தராங்கா
நயமும்ஆணவ ஜெயமும்நாளும்அ
பயமும்பாதபங்கயமுமேயருள். (வேத)

௬௩. இராகம்-ஆகிரி-ரூபகதாளம்

பல்லவி.

நாதனே தயைபுரிவாய்-எனக்குமெய்ப்
போதமா-மழைசொரிவாய்

அநுபல்லவி.

நீதகல்பரம்பர திவ்யகுணாடம்பர
ஓதருஞ்சுயம்வர உலகமுடன்அம்பா (நாத)

சரணங்கள்.

௧. நண்ணிநல்வினைகளைப் பண்ணியறிகிலாத
நான்நரன்போலியா இந்த
மண்ணின்மிசைஎனக்கும் புண்ணியமென்பதற்கும்
மத்தியில்வேலியா என்தன்
எண்ணமெல்லாங் கறுப்பே
எனக்குன் னடிவெறுப்பே
பண்ணாதே நீமறுப்பே
புரிந்தாண்ட தன்பொறுப்பே. (நாத)

உ. என்பாட்டில்இரங்காமல் உன்பாட்டில்சேம்மா
இருந்திடில்அதுதகுமா என்றும்
தன்பாட்டில்மகிழ்ந்தோனே இன்பூட்டுங்கதியுந்தன்
தயையின்றிக்கைபுகுமா எனதன்
ஆன்மெல்லாம் வெறும்பேச்சே
அறமென்பதுமேற் பூச்சே
துன்பப்பிரளயம் நீச்சே
தொல்புவி எங்கும்வச்சே. (நாத)

ந. இனையளவும்நன்னெறி தனையறியாதநான்
தீவினைக்கேயிலக்கா பாரில்
நினையன்றிமற்றெவையும் நினையும்என்னெஞ்சுக்கு
நீமாத்திரம்விலக்கா நன்மை
புனையும்நீதிப்பிரமாண
புவனகோடிநிர்மாண
வினயநித்தியகல்யாண
வேதநாயகன்பிராண (நாத)

கூச. இராகம்-பியாகு-ஆதிதாளம்.

பல்லவி.

தஞ்சம்நீயே தயைபுரிவாயே-தஞ்சம்.

அநுபல்லவி.

அஞ்சலென்றேதினம் ஆளும்எந்தாயே. (தஞ்)

சரணங்கள்.

க. தினமனவேதை சேர்ந்தநான்பேதை
உனதடிப்போதை உறஅருள்பாதை. (தஞ்)
உ. பாதகபஞ்சனு பண்டிதாஞ்சலே
போதககஞ்சனு புண்ணியநிரஞ்சனு. (தஞ்)
ந. தருமசிங்காரா சருவசங்காரா
வரும்வேதநாயகன் மனஅலங்காரா. (தஞ்)

௬௫. இராகம்-பரசு-ஆதிதாளம்.

பல்லவி.

நீயேகதினனக்குன் அருள்கூரே தந்தை
தாயேயினை அல்லது துணையாயே.

அநுபல்லவி.

ஆயகருணைமழை சொரிகாரோ
சொலஅரு-நலமுறு-தலமிஞ்ச-நிலவெனு
மலஇருள்-செலஅருள்-அலரும்உதாரா. (நீயே)

சரணங்கள்.

௧. முத்தியென்பதேவர்க்குஞ் சமுதாயம் அது
முத்தர்மட்டுக்கும்என்ப தென்னஞாயம்
நித்தியனேவிடுவேனே என்தாயம்
நீதியின்படிசெய்குவாய் விதாயம்
சத்தியனேவதோ அபிப்பிராயம்
தகவெண-தகமிசை-மிகமதி-புகஉரும்
இகபர-சுகமருள்-அகலஜகநாதா. (நீயே)

௨. வாழ்மனை தந்திடில் வேண்டாமே என்று
மாங்கலத்துண்போ மறுப்பவர்தாமே
ஆழவே நீயென து மனைப்பூமேல்
ஆகிடின் உனக்கென்ன குறைவாமே
சூழநீகுடியுறில் வினைபோமே
துதிபுரி-விதியினர்-சதியெனும்-நிதிபெற
அதிதயை-பதிவுறும்-அதிசயயோகா. (நீயே)

௩. சாகனேஎன்துயர் தெரியாயோநல்ல
சர்வாந்தர்யாமியெனும் பெரியாயோ
பாதகம்அறஅருள் புரியாயோ பரி
பக்குவஞானமழை சொரியாயோ
வேதநாயகன் மனந்தரியாயோ
மிடலுறு-சுடரவன்-உடுபதி-தடவரை
கடவிட-மூடன்இடர்-கெடஅமர்-தேவா. (நீயே)

௬௬. இராகம்-பூபாளம்-ரூபகதாளம்.

பல்லவி.

தேவாதிதேவே திருவருள்
செய்யென்னை-நீகாகவே. (தேவா)

அநுபல்லவி.

ஜீவசம்ரக்ஷணை செய்யுங்கிருபாநிதியே
தினந்துஷ்டர்கள் இனஞ்சுட்டலர்
முனஞ்சிஷ்டர்கள் இனஞ்சுட்டமர். (தேவா)

சரணங்கள்.

௧. பாழுமனமேசுத்த பாஷாணம்-பெரும்
பாவமென்றால் அதற்குக்கலியாணம்
வாழும் இந்நாளொழிந்து நிரியாணங்கிட்டி
வருமுன்னம் அருள் புண்ணியப்பிரமாணம்
ஏழையென்செய்கையுன்னில் ஏனகருமேவரும்நாணம்
இழைக்குஞ்சுகம் அழைக்குந்தகை
தழைக்கும்படி பிழைக்கும்படி (தேவா)

௨. அருள்செய்யின் அலதுனைவிடுவேனோ-உனை
அன்றிமற்றோரைக் கும்பிடுவேனோ
மருவுபயலிற்சிக்கித் தோடுவேனோ-உன்பால்
வழக்கிட்டிரக்கப்பயப் படுவேனோ
மருள்செயும்பொருளோநீ வழங்கினுந்தொடுவேனோ
மனந்தந்திடும் அனந்தத்துயர்
முனைஞ்சிந்திடு கனந்தங்கிட (தேவா)

௩. சிஷ்டபாலநங்கண காரணனே-பெரும்
தீ பசாசகண மாரணனே
துஷ்டகண்டன் மந்திரோச்சாரணனே-நாளுந்
சுபபிரகாச கிருதிகாரணனே
இஷ்டன்வேதநாயகன் ஏதநிவாரணனே
இணங்கண்டார்கள் கணங்கண்டடி
வணங்கும்படி குணங்கொண்டுயர் (தேவா)

௨. கிஷ்டன்போல்யாவர்க்குந் திவ்யப்பிரசங்கம்
செய்வதிலேபெணைப் போலெவர்சிங்கம
சட்டமாய்நடப்பதே சர்வவில்லங்கம்
சாமிநீஆழியாயே தமியன் அந்தரங்கம் (கருணை)

௩. எத்தனையோசெய்வதேன் உனக்கபராதம்
இதுநிமித்தம்உனக் கென்மேலவிரோதம்
அத்தனைபிழைபொருத் தாள்வதேநீதம
அருள்புரிய இனி வேண்டாம்விகாரம் (கருணை)

௪. தலைவன் இல்லாவிடில் தழைக்குமோராஜ்யம்
தரையிலேநீயல்லால் சகலமும்பூஜ்யம்
விலக்கிடாதருள்உயிர் விமலாசம்பிராஜ்யம்
வேதநாயகா இன்னந் தாமென்னவியாஜ்யம் (கருணை)

௭௰ இராகம் தோடி ஏகதாளம்.

பல்லவி.

தயைபுரிய இன்னந்தாமசமோ.

அநுபல்லவி.

பயநிவாரணா பாக்கியபூரணா
உயரும்ஆரணா உலககாரணா (தயை)

சரணங்கள்.

௧. அத்தனேஒருசா ணுகியகுக்ஷிக்
காரகநான்உனரெல்லாம் அலைந்திடும்பக்ஷி
நித்தமும்பேசுவேன் ஆயிரங்கக்ஷி
நீதிநெறியில்நா ஸிரக்ஷைரகுக்ஷி (தயை)

௨. தத்துவஞானத்தைத் தள்ளியேபோட்டேன்
சாமிநான இந்திரிய வாசலைப்பூட்டேன்
உத்தமம்எனக்கருள் பலதரங்கேட்டேன்
உதவிசெய்யாவிடில் உனைவிடமாட்டேனே (தயை)

௩. சர்வவிநோத விசித்திரநிர்மாணா
சாசுவதமங்கள் சத்தகல்யாண
பரமநித்தியானந்த பாக்கியஉக்கிராணா
பாலவேதநாயக பிரமாணா (தயை)

எக. இராகம்-முகாரி-ரூபகதாளம்.

பல்லவி.

காத்தருள்வாய் எனைக்-காத்தருள்வாய்.

அநுபல்லவி.

சாஸ்திரவேதம் ஸ்தோத்திரமேசெய்யப்
பாத்திரனேதயை நேத்திரனேதினம். (காத்தருள்)

சரணங்கள்.

க. ஆனாலும்என்பாபம் அநியாயம்அநியாயம்
ஞானியைப்போல்நான்காட்டும் நடைமுழுமாயம்
ஈனமுறுந்தமகுணங்கள் என்தனக்கேகர்தாயம்
தீனனென்மேல்நீகோபஞ் செய்யிலென்ன ஆதாயம்.(காத்)

உ. மாதாநீஉன்மகனுன் மன்னவநீ அடியேனே
தாதாநீயாசகநான் ஸ்வாமிநீஅடியேனே
சாதகஞ்செய்தற்குநீ தமியேன்சிஷன்தானே
ஆதாரமாகஉனை அடுத்துவந்தேன்சுரர்கோனே.(காத்)

ங. வாக்குமனம்எட்டாத வாசமகோசனே
பாக்கியபலதான பரிபாலபரமேசுரனே
தேக்குமலவிருள்நாசஞ் செயும்உதயபாஸ்கரனே
ஆக்குவேதநாயகனுக் கனுகிரகதயாபரனே. (காத்)

எஉ. இராகம்-தோடி-ரூபகதாளம்.

பல்லவி.

வாவாஜகநாதா.

அநுபல்லவி.

பாவங்களை நிர்மூலகாமப்
பரமாத்தர்கள் கொண்டுத்துக்காக்க. (வாவா)

சரணங்கள்.

க. சர்மாதர்மந் தெரியேன் ஜெப
தபசாதிகள் புரியேன்
கர்மம்அனு சரியேன் உனைக்
கண்டால்இனிப் பிரியேன். (வாவா)

௨. எனைநீ விடலாமா பல
இடர்நான் படலாமா
வினையே தொடலாமா எனை
வினை கெடலாமா. (வாவா)

௩. வர்மஞ்செய்தல் முறையா என்தன்
வாழ்நாள்வளர் பிறையா
தர்பந்தரிற் குறையா இன்னுஞ்
சலஞ்சாதித்தல் பொறையா. (வாவா)

௪. ஆலோலித முகனே நித்ய
அமலானந்த சுகனே
மேலோர்கள் சமுகனே தயை
மிகும்வேத நாயகனே. (வாவா)

---

௭௩. இராகம்-சஹானா-ஆதிதாளம்.

பல்லவி.

கருணைநீசெய்யவேண்டுமே சுவாமி

அநுபல்லவி.

சரணாகதியென உனையடைந்தேனே
சாதகம்வேண்டிய உனைத்தொடர்ந்தேனே (கருணை)

சரணங்கள்.

௧. மாயவாழ்வெனும்பெரு வாரிதிச்சுழலே
மாட்டியேஅலைபடும நானொருவிழலே
காயமாகியசிறு காற்றனைசுழலே
கழியும்போதுகற் கதிமலர்க்கழலே. (கருணை)

௨. சலந்தையல்லாது தாமரைக்குண்டோநிலையே
தரையில்உவன்றுப்பயிர் எடுக்குமோதலையை
நிலத்திலேநீயலால் நிலையெனக்கிலையே
நீமுகம்பார்த்தருள் நிரஞ்சனமலையே. (கருணை)

௩. சந்திரசூரியர்உள்ள மட்டும்வாழ்நாளா
சாவையேஜெயித்திட என்கையில்வாளா
தந்தையேபுனிதசோ தனைக்குநான்ஆளா
சர்வசாதக பரமதயாளா. (கருணை)

ச. அகணிதகுண அகிலாண்டவிலாசா
அபரிமிதானந்த கரமாமேசா
விகசகிருபாகர விமலம்பிரகாசா
வேதநாயகன இதயநிவேசா. (கருணை)

எச. இராகம்-ஈசமனோகரி-ரூபகதாளம்.

பல்லவி.

அபயம்நீயருளுவாய்-ஆதியே-அநுதினம்

அநுபல்லவி.

உபயபாதம் நம்பினேன் ஓஅநாதியே அநுதினம். (அபய)

சரணங்கள்.

க. அலைகடற்சிறிதுரும்புபோல் அலைந்துவாடினேன்
உலைமெழுகெனஉள்ளமுருகி உன்னைநாடினேன் தினமும் ()

உ. நீர்க்குமிழினையொக்கும் வாழ்வைநிலையெனவெண்ணினேன்
மூர்க்கமாகக்கொடிய பாவமுழுதும்பண்ணினேன் தினமும். ()

ங. பாசக்கயிற்றிற்பஞ்சுபோலப் பறந்துதபங்கினேன்
ஆசைக்கடலில்மூழ்கிமூழ்கி அறிவுமயங்கினேன் தினமும் ()

ச ஆண்டவநீஅடியைநான் எனை ஆளவொண்ணாதோ
நீண்டவுலகம்ஏழையெனவென்னைநிந்தப்பண்ணுதோ தினமும். ()

ரு புவனரக்ஷணகார ஞார்த்தபுருவேஷனே
பவவிமோசன வேதநாயகபலவிசேஷனே தினமும். (அபய)

எரு. இராகம்-பியாகடை-ஆதிதாளம்.

பல்லவி.

ஏகசோதனை-இன்னமென்சாதனை

அநுபல்லவி.

ஏந்தசோதனை-இன்னமென் சாதனை
ஏகாதிபதியே-நிதியேஎளியன்மேல்

அநுபல்லவி.

போதோதசுர பூஜிதபாதா
பூதபேற் சாரணசுகதாதா. (ஏதோ)

சரணங்கள்.

க. தந்தைதாயொடு பலதனையரையெடுத்தால்
தாரங்கள்மூலர்க்குச் சாசுவதம்கொடுத்தாய்
சொந்தமாகியஉடற் சுகத்தினைக்கெடுத்தாய்
ஸ்வாமிநீயிந்த வாறுகைவிடுத்தாய் (ஏதோ)

உ. ஒருகையாலஅடிப்பாய் ஒருகையாற்பிடிப்பாய்
உதவியில்லாமலே உன்னெண்ணமுடிடிப்பாய்
பெருமலைகளையும்மே பிடுங்கிப்பந்தடிப்பாய்
பிரம்மாண்டங்களைப் பிளந்திட இடிப்பாய். (ஏதோ)

ங. துன்பஞ்செய்வதுபோல் சுகங்களைக்கொடுப்பாய்
துஷ்டர்கள்மீதில் எப்போதுங்கையெடுப்பாய்
அன்புள்ளதாயைப்போல் அடியரைஅடுப்பாய்
இவர்களைத்துபராணுகாமலே தடுப்பாய். (ஏதோ)

ச. அதுலஅக்ஷபகுந பரநாவேஷா
அமிர்தவருஷ துல்லியமிருதுபாஷா
விதூரநிதோஷ நிர்விகற்பவிசேஷா
வேதநாயகவந் திதகுணபூஷா. (ஏதோ)

எசு. இராகம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

ஏதுபராமுகம்-ஏழையென்மீது
ஏகனே-யோகனே-மாகனே-தியாகனே

அநுபல்லவி.

வேதபோதக-அநாதரக்ஷணனே
மேகவாகன தெய்விகலக்ஷணனே. (ஏது)

சரணங்கள்.

க. அநித்தியசுகந்தந்தாய் அதைநான்கேட்டேனே
ஆனந்தரித்தல் அநுபவிக்கமாட்டேனே
இனித்தஉன்பாதத்தில் இதயம்நாட்டேனே
ஈனமாரம்பையை எதிர்த்துவாட்டேனே. (ஏது)

௨. ஐயனேஎன்னைக் கேளாமல்முன்நீயே
அரியமானிட ஜன்மந்தாயே
வையகமீதுநான் உனக்கொருசேயே
மதியருள்வாய்பெற்று வளர்ந்திடுந்தாயே.(எது)

௩. முந்திநீபலருக்குக் காட்டினையுனையே
முக்தர்க்குக்கொடுத்தனே மோக்ஷமாமனையே
பந்தியிலாகுமோ ஓரவஞ்சனையே
பக்ஷமாயெனக்கருள பரசுகந்தனையே.(எது)

௪. அகடநாடகன்சா மர்த்தியப்பிரதாபா
அச்சுகஜநவாற் சல்லியநிஷ்கோபா
சகலசுலக்ஷண தத்துவசொரூபா
தாசன்வேதநாய சன்மனேதீபா.(எது)

எ. இராகம்-கமாஸ்-ஆதிதாளம்.

பல்லவி.

ஆரணமயநயபூரணனே
உனதமல அடிசரணம்.

அநுபல்லவி.

பாரகோரபரி காரகுணகர
வீரதீரஉப காரமனோகர (ஆரண)

சரணங்கள்.

௧. உனைநிதம்நினைவுறுமெனை அடர்வினை ஆகலாத -நாதா
உலககலகமயல்விலகஇலகருளை நீதா
களைஉலகஜநகஅகநிகரபெய்
காவலா-அடியர்-ஆவலாயருள்செய் (ஆரண)

௨. துரிதராஹிதகுண சரிதசுகிர்தபரமேசா-நேசா
சுஜனபஜனமிர்து வசனரசனஇதிகாசா
சரதவரதஅனவரதவிரததர
சாபமோசனபிர-தாபவிலாசன (ஆரண)

௩. கனககனபுவன பவனசவனபரிபாலா-மூலா
கரணசரணகுண கிரணபரணஅநுகூலா
விநயநிலயஸ்வயவிஜயமயஅபய
வேதநாயகன்மனோதய அதிசய (ஆரண)

௭௮. இராகம்-ரீதிகௌளை-ரூபகதாளம்.

பல்லவி.

சரணஞ்சர்வேசா-எனைரக்ஷிக்கத்
தருணமிதுபிரகாசா.

அநுபல்லவி.

கருணாலயபரகாயப்பிரவேசா
பரமசுபோதயபாபவிநாசா (சரணஞ்)

சரணங்கள்.

க. நீயேகுருமூர்த்திஉனக்குச்சிறு
காயேனவிர்த்தியாத்தி
தூயாஉபதேசஞ் சொலிலிஷ்டபூர்த்தி
ஈயிற்குருசிஷர் இருவர்க்குங்கீர்த்தி (சரண)

உ. நீதான்பரஞ்சோதி-எனஉலகின்
மீதேபெருங்கியாதி
வேதாமலவிருள்விலக்குதல்நீதி
ஆகாரமாகஎன்னருளைப்பிரசாதி (சரணஞ்)

௩. ஆதிகாரண நாதபரமஞான
ஜோதிமய அபேதா
பாக்கமோசனபாக்கியப்பிரசாதா
நீதமேவநாயகநித்தியசங்கீதா (சரணஞ்)

---

௭௯. இராகம்-லலிதா-ரூபகதாளம்.

பல்லவி.

இன்னந்தாமசம்வந்து-ஜகநாதா

அநுபல்லவி.

நன்னயமதாக-உனை-நம்பினவனும் அலவோ (இன்ன)

சரணங்கள்.

க. சிலர்அருளிம் செலவோ
சேயுனக்குநான் அலவோ
மேலுமென்னதான் சொலவோ
வேலையுனக்குப் பலவோ (இன்ன)

உ. சாதுஜன ரக்ஷணனே
தாசர்கள்பிர தக்ஷணனே
கீதாமிர்த பக்ஷணனே
கீர்த்திகொள் சுலக்ஷணனே.(இன்னந்)

ங. ஈசனேநான் உன்னடிமை
எப்பொருளும் உன்னுடைய
நேசமுடன் என்மடமை
நீக்கிடுவ துன் கடமை.(இன்னந்)

ச. சாதக குணபரணா
சர்வபுவ நாதரணா
வேதநாயகன் ஸ்மரணா
வேகதுரி தஹரணா. (இன்னந்)

அ௰. இராகம் கெங்காதரங்கணி ஆதிதாளம்.

பல்லவி.

உனைநானே தொழவரம் அருள்கோனே
விநயசுஜன சேவிதபெருமானே

அநுபல்லவி.

வேதமுடிவில் நடனம்புரிவோனே. (உனை)

சரணங்கள்.

க. சிந்தைமீதுனது பாதமேதியானம்
செய்யநீயருள்வாய் திவ்யஞானம்
தந்தைநீயறியுமே சமஸ்தானம்
தநயன்மீதில்லையோ அபிமானம் (உனை)

உ. ஈசனேயெனது வார்த்தைகளபொய்யே
இந்தவார்த்தையொன்று மாத்திரமெய்யே
பாசமூடுமனம் வெயிலுறுநெய்யே
பாவம்நீக்கும்படி தயைசெய்யே.(உனை)

ங. அடருமலசலாதிகள் நிறையேழை
ஆனமாயஉட லாகியபாழை
திடமென்றெண்ணிநிறைப்பேன் அதிற்கூழை
சினஞ்செய்யாதேநான் மிகவேழை.(உனை)

௪. சகலலோகம் அடங்காதபர்காத்ரா
சமமிலாக்கபட நாடகசூத்ரா
சுகப்பிரதாயக கிருபாகரநேத்ரா
துதிவேதநாயகன் மனசோத்ரா. (உனை)

௮௧. இராகம் பூரிகல்யாணி ரூபகதாளம்.

பல்லவி.

கருணாகரமூர்த்தி-காப்பதுனெ கீர்த்தி.

அநுபல்லவி.

அருணோதயமாசரீர
அற்புதநராவதார. (கரு)

சரணங்கள்.

௧. தேகம்வளர்ப்பதே என்விர்த்தி
தினந்தர்க்குணமே பிரவர்த்தி
ஏகமான சக்கரவர்த்தி
எனக்குநீ அருள் பாபநிவர்த்தி. (கரு)

௨. அற்பமானமோக போக்கியம்
அழிந்துபோம் இதுவேதவாக்கியம்
தற்பராநினைக்காணும் பாக்கியம்
தந்திடில்அது சர்வ சிலாக்கியம். (கரு)

௩. பாதகந்தனைச்சர்வ நாசம்
பண்ணுவதில்உண்டோ பிரயாசம்
வேதநாயகா நின்னேசம்
விளங்கிட அருள்வாய் பிரகாசம். (கரு)

௮௨. இராகம் பரசு திரிபுடைதாளம்.

பல்லவி.

சித்தம்எப்படியோஐயா நின் சித்தம்எப்படியோ

அநுபல்லவி.

உத்தமனுகளனை உயர்த்திடுவாயோ
கர்த்தனேநீயென்னைக் கைவிடுவாயோ. (சித்)

சரணங்கள்.

க அருள்புரிவாயே அருந்தவப்
பொருள்சொரிவாயோ
கருமலானும்படி தான்தெரிவாயோ
இருள்மூடமயாவியென்றனைப்பிரிவாயோ சித்
௨ பாதஞ்சேர்ப்பாயோ என்தன்மனக
கேதந்தீர்ப்பாயோ
ஆதன்செய்வினை அடியோடேபேர்ப்பாயோ
ஏதுகதியில்லானென்றிரங்கிப்பார்ப்பாயோ சித்
௩ வாடிநொந்தேனே மெய்ஞ்ஞானக்கண்
மூடிநைந்தேனே
நாடியாள்வாயென்று நம்பிவந்தேனே
டாம்பவேதநாயகன் பருகுஞ்செந்தேனே

௮௩-இராகம்-சஹானா-அடதாளசாப்பு

பல்லவி-

எப்படியும்பரமே நலம்பெற
ஈந்தருள்வாய்பரமே

அநுபல்லவி-

செப்பருமாணிக்க தீபசொரூபனே
தேவேமனமேநொந்தேன் காவேயெனவேவந்தேன் எப்

சரணங்கள்.

௧. கேவலம்வாடினேன் கேள்விமுறையில்லையோ எந்தன்
சீவன்பிழைக்கச்செய்யவல்லவனீயல்லவோ
பாவனைஞானப்பானுநல்பரமோ
பரகேசனியேசத்தேஜகோசனியனித்தே எப்
௨. அம்பனானாலும் அனைக்குப்பிள்ளை அல்லவோ
பறபலவாயபடித்துபபடித்துச்சொல்லவோ
கற்பகோடிகாலங்கண்டுமுடிவில்லாக்
கண்ணேமணியேபொன்னே
விண்ணே அணியேசொன்னேன் எப்

௩. இன்பதுன்பங்கள்இரண்டிற்கும்சிக்கமேதந்து
நினைப்பதசேனைவந்தலைக்கு செய்வயத்தமே
ஆனைப்பணிவேதநாயகன் அகத்தேயணி
ஆணிப்பொருளெழுத்தேகொண்டுபெறுவோர்சொத்தே எ

௪௯-இராகம்-கல்யாணி-ஆடதாளசாப்பு.

பல்லவி.

உன்னைப்போலக்குக்காட்டையா காட்டாமல்சும்மா
ஒளித்தென்னவிளையாட்டையா

அனுபல்லவி.

தன்னைப்பாராமலே தன்பிள்ளைகண்மூடி
தனம்ஊட்டுந்தாயுண்டோசாமிநீதயைகூடி. உன்னை

சரணங்கள்,

௧. கறவையைப்பிரிந்தகன்றுகதறல்போலும்
கணவனானதைப்பிரிந்தலங்குப்உத்தமிபோலும்
இறகுகள்பறிகொடுத்தேக்கும்பறவைபோலும்
இருகண்ணுந்தெரியாதகண்க்குருடர்போலும்
ஏங்கினேன்சுகமீங்கினேனதுயர்
தாங்கினேன்மனம்வீங்கினேன்நீ உன்னை

௨. நினைக்கநினைக்கஎன்றநெஞ்சமெல்லாமுருகிக்கும்
நின்னைப்புகழும்வாயெனித்தியாமிர்தம்புசிக்கும்
களக்கும்நின்னடிகாணக்கண்கள் இடம்பிடிக்கும்
சர்த்தனைஉனைக்கண்டாக்கலேயெல்லாநசிக்கும்
சனத்திலேனுங்கணத்திலேனுமென்
மனத்திலேனுஞ்சொற்பனத்திலேனும்நீ உன்னை

௩. பின்னேவினையல்லமல்லேனென்றொன்றைத்தொடுவேனோ
மெஞ்ஞானியென்றுக்கேட்டுயேதனைப்படுவேனோ
கனைமணமணியேநினைக்கண்டாற்கவன்விடுவேனோ
கட்டிக்கொண்டானந்தங்கலக்கப்பிணணிவேனோ
காருத்திலபடிவன வருத்தமபோகுவன்
திருப்பாதத்தேயன் சிருஷ்டபையன் உன்னை

௨. தேவனேஉனைக்கண்டால் நிட்டைபோதந்தொலைமோ
திவ்யதேஜோமயாவென்றேகந்தனைச்சுகமோ
கூவுங்கோழிமிதித்தால் குஞ்சுமுடம்படுமோ
கொல்லுஞ்சிங்கமானாலும் குட்டிகள் அஞ்சிடுமோ
கோலனே அநுகூலசீபதி
பாலனேகனலுலனே நீ — உன்னை

௩. ஆணல்லபெண்ணல்ல ஐம்பூதஞ்சடமல்ல
அரியயசிவனல்ல அதலக்ஷணநிறைவல்ல
காணருமுன்திவ்யசுதிவிரியங்களல்ல
கனவமவினைக்காலக் காதக்கொண்டேனல்ல
காரணக பூரணத்தை
தாரணகன ஆரணனே — உன்னை

௪. தேனேகனியே தெவிட்டாதசெள்ளமுர்தமே
சீனியேகரும்பேதித்திக்குமிரசமே
வானேபுவியசுக வாழ்வேபெரும்பதமே
மதிக்கும்வேதாந்தமன்மகிழுமனோரதமே
வாடினேன்கவிபாடினேன்உனை
நாடினேன்தினந்தேடினேன் நீ — உன்னை

—:*:—

௮௬-இராகம்-பங்களா-ஆதிதாளம்.

பல்லவி,

சஞ்சலமாய்நெஞ்சமிகஉடைந்தேனே இனித்
தஞ்சமெனஉன்சரணம் அடைந்தேனேஸ்வாமி — சஞ்

அநுபல்லவி,

வஞ்சகப்பிரபஞ்சமெனும்
நஞ்சதிலழுந்தியே — சஞ்

சரணங்கள்.

௧. இட்டவலைபட்டமருள்மான்போலேவெயில்
சுட்டசலம்விட்டகலும்மீன்போலேஸ்வாமி — சஞ்

௨. பொய்யுலகைமெய்யெனவே தமோதிநாளும்
ஐயமோகோணமையெல்லாங்கேளீர்ஸ்வாமி — சஞ்

௩. கொட்டுமத்திற்பட்டிடையுந்தயிர்போலேசலத்
தட்டுவாக்கெட்டுவரும்பயிர்போலேஸ்வாமி — சந்

௪. பாய்புலியின்வாயில் உறுபசுப்போலேபெற்ற
தாய்கரமவிட்டேஅலறுஞ்சிசுபோலேஸ்வாமி — சந்

௫. ரூபமேசகாயமென்றுக்கிடையாதோநல்ல
தூயமனமகிழருளத்தடையேதோஸ்வாமி — சந்

௬. மாயமலநோயகலுமவிசுவேசாவேத
நாயகனன்னேயமனக்குகைவாசாஸ்வாமி — சந்

—:*:—

அசு-இராகம்-சுற்றசாவேரி-ரூபகதாளம்.

பல்லவி.

கருணைக்கருணைத்தயைசெய்வாயையாஓ
தேவதேவா — கருணை

அனுபல்லவி.

ஒருவனேஜன்மலயஅபாவா
ஓமகாநுபாவா — கருணை

சரணங்கள்.

௧. சித்தஞ்சேற்றில்நட்டகம்பம்
ஜெகதலத்தில்இதற்குத்தினமுங்கம்பம்
நித்தங்கலைநிறைந்தசொரூபம்
நீயேயினியெனக்கவலம்பம் — கருணை

௨. சோதனைக்குநான்பாத்திரவானோ
துன்பமூட்டைசுமக்கநானோ
சாதகஞ்செய்யிற்பழுதுதானோ
தள்ளினாலுநான்போவேனோ — கருணை

௩. வெயிலளைப்பதேனென்மேலே
மற்றநேரம்விஷயலீலே
உயிருக்குயிரேஞானப்பாலே
ஊட்டுவாய்தொழுதேன்உன்காலே — கருணை

௪. ஸப்தஸ்பரிசரசசுகந்தா
தர்மரூபபிரமானந்தா
வித்தகசஜநானுபந்தா
வேதநாயகப்பிரபந்தா — கருணை

அஎ-இராகம்-தேவமனோகரி-ஏகதாளம்.

பல்லவி.

இன்னமுமிந்தாமதமேன் என்ஸ்வாமி   இன்ன

அனுபல்லவி.

உன்னதமாகியதுரியாதீசா
உலகாதிசர்வகாரணபூதா   இன்ன

சரணங்கள்.

க. மழைமுகங்காணும் பயிர்போல்வாடி
மாதாதனைவிட்டசேய்போலோடி
தழையும் உன்குணசரித்திரங்களைப்பாடி
சாமிநானுனையடைந்தேன் கதிதேடி   இன்ன
உ. பத்தனைப்போலநான் போடுவேன்வெளிச்சம்
பாவத்தின்கடலுக்கு நனெருமச்சம்
அத்தனேமுனியாதே கொண்டேன் அச்சம்
அருவினைபோக்கிநீ அருள்வாய்ஸ்வச்சம்   இன்னம்
ங. அரசே நீயெனைக்கைவிடலாமா
அருளேசெயில் உன்கைப்பொருளேபோமா
திருவரப்ப விடில்வினைசாமா
தேவமனோகரதிவ்வியசோமா   இன்னம்
ச. அனவரதசுகிர்த ஆத்மசொரூபா
அனந்தகல்யாணகுண அனகப்பிரதாபா
தினகரதினகர ஞானியதீபா
சிறியன்வேதநாயகன் இதயசல்லாபா   இன்னம்

அஅ-இராகம்-சாமா-ஆதிதாளம்.

பல்லவி.

உன்னைத்தவிர வேறென்னைத்தாங்கிடப்
பின்னைத்துணையில்லை மன்னர்க்கரசே   உன்னை

அனுபல்லவி.

அன்னைக்கிணையாகிய கனபிரபுவே
உணற்கரிதாகிய மாவிபுவே   உன்னை

சரணங்கள்.

௧. நீமுகம்பார்த்திடில் அஞ்ஞானம்பேர்வதுமே
நீமுனிந்தால்பெருமலைகளும் அசலே
தாமரைநீசயித்தமறைபரிந்தவிதமே
தயைநீபுரிய இச்சமயமுசிதமே உன்னை

௨. நீரை அடுத்தவர்க்கில்லைசலனம்
நின்னையடுத்தவர்க்குண்டோகஷ்டம்
ஆரையடுத்திலுமுண்டோஅதிட்டம்
ஐயாவுனக்கமனுக என்விஷ்டம் உன்னை

௩. ஊரார்மெச்சிடப்பாடுவேன்பாட்டு
உன்புகழ்பாடவென்றால் வாய்பூட்டு
சீராகியபெரியோர சபை திட்டு
நீயோருடன் எனைக்கனிந்துகூட்டு உன்னை

௪. ஆதிமத்தியாந்த அபாவப்பிரகாரா
அண்டசராசர அகிலாதாரா
பூதநிர்மாண நிர்வாகசங்காரா
ஸ்ரீபாதவேதநாயகர் புண்ணியசரீரா உன்னை

அசு-இராகம்-சுத்தசாவேரி-ஆதிதாளம்.

பல்லவி.

நானேஉனைநம்பினேனேசகம்
தானே அருள்சனவானே நானே

அநுபல்லவி.

வானே என்சுகத்தேனே பொழிந்திடும்
மன்னுயிர சன்னுதினம் என்னுவுறம் முன்னுநிதம் நானே

சரணங்கள்.

௧ காயம்பலதுவாரக் கந்தல் அதைக்
காக்கநான்போடுவேனை வாய்ப்பாந்தல்
மாயவலைபிற்பட்டு மதியும்விதியும்கெட்டு
மண்டுவினைகொண்டுமிக அண்டிதுயருண்டுதினம் நானே

அருணைகோடிப் பிரகாசகர்த்தா அறி
அற்புதவேதாகம கர்த்தா
கருணைக்கு தேகதிராபணைக்கஜனன்சேர்த்திரா
காப்பாய்புகைப்பாய் மாய் விளைந்திட்டபாய்ப்பு சேர்ப்பாக்கிதம் கா
விபுகரணை இக்கவ-காரணா ஹும்
வேதாபாலன அங்கதனே
கபாலனை காரணாநந்தா ஹூதா ஜெ
ஆபாலகோபாபுகிதராயான சக உகிதம் காரேண

கூ-இராகம்-கமாசு-ஆதிதாளம்.

பல்லவி.

இந்தவேளை வந்துன் அருள் தந்தருளாய் இந்த

அநுபல்லவி,

வந்தனே சிற்பரம் புரிந்தேன் ஐயனே இந்த

சரணங்கள்.

க. அன்னை தந்தை உன்னையன்றிப் பின்னையாரையா
மன்னவ கிருபை நாடு விளைத்தவன் தீதையா
பின்னுமின்ற பொய்யுலகத்தில் வாழ்மெய்யா இந்த
உ. பூதலத்தின் ஆசைவிடாத இனையே
போதகமோயுமென்றன் கோபமுமிலையே
நீதயுந்தரமக்கவிபத நிலையே இந்த
ங. நீயல்லாமலின்றுயாய உமக்கேயிலையே
மாயையுறுபேய்ச்சொப் ஆசையுமிலையே
தேயன் வேதமாயகனுக்காய்விலையே இந்த

கஉ-இராகம்-சாமந்தா-ஆதிதாளம்.
பல்லவி.
மெய்ஞ்ஞானம் கொடுப்பாய்ஸ்வாமி
அஞ்ஞானம் தவிர்ப்பாய்ஸ்வாமி மெய்ஞ்
அநுபல்லவி.
பொய்ஞ்ஞானிகள் அண்டாமே காத்தெனை
புண்ணியனே ஆண்டவனே நீ மெய்ஞ்

சரணங்கள்.

௧. ஆஸ்திகள் பாஸ்திகள் யாதையும் வேண்டேன்
அநித்தியப்பொருள் நீ அருளினும் தீண்டேன்
சாஸ்திரஞ்சொல்லும் வழி இனித்தாண்டேன்
தருவென நீ கண்டேன் திருவடி பூண்டேன் மெய்ஞ்

௨. அகமேகட்டுக் கடங்காக்காளை
ஐயே வினை ஒழித்தது நாளை
இகமேலே நாயினேன்மலர்த்தாளை
என்னவோ நாளை இது நல்லவேளை மெய்ஞ்

௩. அந்நியர்க்குரைப்பேன் உபதேசம்
அடியேன்செய்கைகளோ ஆபாசம்
என்னசொல்வேன் என் இதயப்ரசாதம்
இதற்குமேல்நேசம் இல்லவலேசம் மெய்ஞ்

௪. அத்தனைஎளியர்கன்னமும் ஊட்டேன்
அறுத்தகைக்குச் சுண்ணாம்புமே நீட்டேன்
உத்தமார்க்கத்தில் உள்ளத்தில்நாட்டேன்
உனைவாங்கெட்டேன் இனிவிடமாட்டேன் மெய்ஞ்

௫. அவன் அவள் அதுவென அடங்காமூலா
அகண்டாதிக அபேதவிசாலா
சிவன் முதுவேதநாயகன்-அநுகூலா
ஜெகபரிபாலா சுகமுறுசீலா மெய்ஞ்

௩௨-இராகம்-பரசு-ஆதிதாளம்.

பல்லவி,

தேவாதிதேவபவ ஜீவாதிகாரணாஉன்
சேவடியை நம்பினேனை தேவா

அநுபல்லவி.

நாவாரநானே பலதேவாரம்பாடவே
நாதாவரமீதாகண தேவா

௧. அகந்திருள்மூடினேன்மிகமிகவாடினேன்
அஞ்சாதேயென்றுசொல்லிஆளொண்ணுதோ
இகம்பரநாடினேன்சுகநிலைதேடினேன்
என்றமேலிரக்கம்உனக்கொண்ணுதோ
பங்கவானேநீயெனதுமுகம்நோக்கியேதய
பண்ணியருள்புண்ணியர்தொழும் தேவா

௨. அன்னையும்பிதாவும்நீ ஆவியும்உடலும்நீ
ஆசாரியன்கடவுள்யாவும்நீயே
முன்னும்நீபின்னும்நீமுத்திசித்திநீ
மூலாதிகாரணமூர்த்திநீயே
நின்னைச்சாரியில்நான்எந்நேரமும்பாடிய
நித்தியம்பலசித்தியருள் தேவா

௩. ஏழைநான்அல்லவோஎன்னதான்சொல்லவோ
ஈசாவென்மீதுதயைஎன்றுவாயோ
பாழுமுடலைநம்பிவீணாய்த்தாழுமனம்வெம்பினேன்
பாசாந்தகாரம்அறப்பண்ணுவாயோ
சூழும்அடியார்கள்மனம்வாழும்வேதநாயகா
சுத்தமுனுசித்தம்அருள் தேவா

(*)

௬௯-இராகம்-பல்ஹம்சா-ஆதிதாளம்.

பல்லவி.

ஞானமார்க்கம்நாதனேசா
நல்வரம்அருளையனே

அநுபல்லவி.

ஈனஅசேதனஇருள்வழிநீங்கத்
தானமுமோனமுந்தர்மமுமோங்க ஞானா

சரணங்கள்.

௧. நீசனானும்உன்தாசனன்அல்லவா
நின்னைஅல்லால்தெய்வம்இன்னமும்பலவோ
ஈசனேஎன்குறைஎவரிடஞ்சொல்வோ
எனைமொழிகாட்டுமேலாரித்திலவோ ஞானா

௨. கர்த்தனேஒழியாக்கவலைப்பிரபஞ்சம்
கண்ணியிற்படுமவைபோற்கலங்கினேன்நெஞ்சம்
உத்தமகுணந்தரஉனக்குண்டேபஞ்சம்
உன்னையல்லால்இனிவேறிலைதஞ்சம் ஞான

௩. அமரர்நரர்சோபனஅமிர்தபக்ஷணனே
அனந்தபேதகஜீவாத்மரக்ஷணனே
சமரசஞானசற்குணலக்ஷணனே
தாசன்வேதநாயகன்பிரதக்ஷணனே ஞான

௯௪-இராகம் சஹானா-ரூபகதாளம்.

பல்லவி.

உதவிசெய்யலாகாதா--ஜெகநாதா

அநுபல்லவி.

நிதம்நிதம்உனதிணையடிகளை
நெஞ்சில்நினைந்திடலாம்நீ உதவி

சரணங்கள்.

௧. அடியேன்துயர்படவேதகுமா
சுடர்முன்இருள்தானேபுகுமா
கொடியாகியவினையால்நிலை
குலைந்தேன்மனம்மலைந்தேன் உதவி

௨. மனைவாழ்வுறுதுயர்தான்மலையே
உனையல்லதுகதிவேறிலையே
அனையேகொடுவினையால்மனம்
அயர்ந்தேன்தினம்பயந்தேன் உதவி

௩. சுரசேவிதபரமேயுரனே
நரபோஷககருணாகரனே
வரவேதநாயகனேகுண
தரனேபரம்பரனே

---(*)---

௯௫-இராகம்-சாளங்கபைரவி-ஆதிதாளம்

பல்லவி.

உனைமறவாமல்எனக்கருள்வாமே
பரமேசுகபரமே

அனுபல்லவி.

பொன்னைநாடொளியர் போலும்எக்காலும்
அன்னைதன்னைமறவாப்பிள்ளைபோலும் உன்

சரணங்கள்.

௧. மங்களமாகப்பெருவாழ்வுவந்தாலும்
சங்கடமுடன் கனவாழ்வுவந்தாலும் உன்
௨. பூமண்டலம்எங்கும்புகழ்ச்சிவந்தாலும்
ஈமங்கொள்மாலையெனஇகழ்ச்சிவந்தாலும் உன்
௩. மகிழ்வுறவேவெகுமானம்வந்தாலும்
இகழ்வுறவேமனஈனம்வந்தாலும்
௪. தலைகீழாகஇத்தரைபுரண்டாலும்
அலைகடல்பெயர்ந்ததன்கரைபுரண்டாலும் உன்
௫. அருமையாகியசதானந்தநிலையே
மருவும்வேதநாயகன்மகிழ்கலையே உன்

௯௬-இராகம்-கண்டா-ஆதிதாளம்.

பல்லவி.

வாவாவாதேவேவந்தெனைக்
காவாயோகோவே

அனுபல்லவி.

காவார் பூவேகலையோர்பாவே
ஓஒவேதாவே வாவா

சரணங்கள்.

௧. வனவேடன்வலையேமாட்டிமனநோயுறுங்கலையே
எனவேதுயர்அலையேசார்ந்தஎன்இடர்யாவையுந்தொலையே
வனமார்நிலையேமதியோர்கலையே
கனமார்குணமலையே வாவா

௨. உடலிற்பிரக்கிருதிமுன்னமேபரனேஉனையே அறிவனே
திடமானமனமேவினைக்கரம்செய்யேஅருள்வனமே
அடியார்தனமேஅயலார்மனமே
படியார்தமக்கினமே வனை

௩. வினையாளன்மதியேஉலகில்நிகழும்செய்யுஞ்சதியே
வினைநீர்இருதகதியேபரவும்ஞானநாயகன்நிதியே
அனைவோர்நிதியேஅருள்வாரிதியே
தனைச்சேர்பரகதியே வனை

—————(*)—————

௬௭-இராகம்-உசேனி-ஏகதாளம்.

பல்லவி,

தருணமீதையா இக்காலஞானம்வாதையா

அனுபல்லவி.

கருணையால்உலகினைத்துக்காக்குமாதிராஉதாரா
காணும்பிரபஞ்சந்தனில்சிக்கிக்
கோணும்என்னெஞ்சம்அதுதினம்
பேணும்பொய்வஞ்சம்-இனிஉன்தன்
மாண்டிதஞ்சம்எனநான்தொடர்
கருமந்தனைமீக்கதருமந்தனைநிலையாக்க தரு

சரணங்கள்.

௧. ஆண்டான்அடிமையைவேண்டாமெனத்தள்ளின்
ஐயாபுகலினியாதுமிக
நீண்டநின்கால்களைப்பூண்டுகொண்டேன்விடேன்
நீஇங்கினிச்செல்வதோதுசற்றும்
நீண்டாதென்னைத்தள்ளினாலும்விடுவேனோ
திருவேகுருவேகுருவே
நீநன்னெஞ்சுமீதுநிதம்
மானமிடாதுதினமதி
ஈனஞ்செய்திடுகாலம்ஒழிந்து
ஞானம்நீஓதுபழுதற
நிக்கும்அருள்கோவேசர்க்கத்துவழுமுறையே தரு

௨. நீயெனைநீக்கிடலெனக்குமுன்சோனெனும்
நின்பெயர்க்குக்குறைவாமே அழுந்
சேயர்தமக்கழுதியா திருப்பரோ
சிறந்தஅன்னையர்தாமேவரம்
ஆயிரந்தரங்கேட்டுங்கொடாயிது
அழகாகுழகாபழகா
தற்றபொன்போலேதடையின்றி
முற்றமேன்மேலேபளகலே
பற்றும்பொய்மாலேகொண்டேன்என்தன்
சிற்றறிவாலேனைநிதம்
ஆளாய்பலபுவிநாதாமாளா நலமுறுநீசா கருணம்
௩. எத்தனைசொல்லினுஞ்சித்தம்நன்மார்க்கத்தில்
என்றும்பதிந்திட இல்லைமிக
இத்தரைரெங்கும்பிரபித்தனேநீசற்
றிளகச்செய்வாயித்தக்கல்லேஉயர்
விந்தகனேவேதநாயகன்போற்றிடும்
வேதநாதஅபேதா
மின்னும்பிரக்கியாதாஅடியேன்மேல்
இன்னமும்வாதாஎனை அஞ்சல்
என்னஜென்ணுதாரிகைகாதில்அன்
சொனனுமையாதாஅநுதினம்
வேதத்தமர்சர்வேசாதீதற்றவர்மணவாசா கருணம்

௯௮-இராகம்-பூரிகலியாணி-ஆடதாளச்சாப்பு.

பல்லவி.

நம்பினேன்உனையேதற்காத்தருள்
வெம்பியஎனையேஅநுதினம்நம்பினேன்

அநுபல்லவி.

அம்புவிபெருந்திரம்பும்பலஉயிர்க்
கின்பம்பொழிபுயலேஉன்தன்செயலே
உண்டோஅயலேஅநுதினம் நம்பினேன்

சரணங்கள்.

௧. புலனகாரணபலநிவாரணநல்உதாரணனே
சம்பூரணனேமெய்பூரணனேஅநுதினம் நம்பினேன்

௨. கோரவினைப்பரிகார அகிலவிஸ்தாரஅதிகாரா
உபகாரா அதிதீரா அநுதினம் நம்பினேன்
௩. சுகுணசேகரமிகுமனோகரசுகிர் தசாகரனே
பராபரனேதயாபரனே அநுதினம் நம்பினேன்
௪. பஜிக்கும்தொண்டர்கள்புசிக்கப்புசிக்கருசிக்கும்
தேனமயமேஅதிசயமேஅருள்நயமேஅநுதினம்நம்பினேன்
௫. வேதநாயகன்போதமுறப்பிரசாதப்அருள்பொருளே
மனஇருளேதொனுத்தருளேஅநுதினம் நம்பினேன்

—— (*) ——

௯௯-இ-ம்-நாதாதொனி-பந்திரம் திரிபுடைதாளம்,

பல்லவி.

தேவாதிதேவனேஜீவனேபிரபாவனே

அநுபல்லவி,

ஜீவாதிகாரனேதீரனேசூரனே
ஜெகத்திதேமனம்வாடிநொந்தேன்
மகத்துவேஉனைநாடிவந்தேன் தேவாதி

சரணங்கள்,

௧. எங்கும்நிறையும்நீஎனக்குன்னைக்காட்டாய்
ஈதென்னகண்கட்டுமாயமோ
அங்கும்இங்குமேஉனைத்தேடி
அலையவைத்தாயிதுநாயமோ
தங்குபதேசம்செய்யாயின்னம்
தான்அடியேன்சிறுபிராயமோ
எங்குலதெய்வமேதாயேதந்தையே
இதுதானபுத்திரநேயமோகன தேவாதி
௨. எத்தனையோபிழைசெய்தேன்அப்பிழை
எண்ணஉன்னாலும்கூடுமோ
கர்த்தனேநீஅருள்செய்தால்என்னொடு
கருமப்பேய்போராடுமோ
அத்தனேஎனபால்நீவரில்உந்தன்
அடிகள்வருந்திவாடுமோ
இத்தலநீவரில்மூத்தர்கள்சமூகம்
எங்கேஎன்றுனைத்தேடுமோஉயர் தேவாதி

அருவிற்பெரியனியருவிற்பெரியனுன்
ஆதரிப்பதுன்பாரமோ
பொருளிற்சிறியனுமிருளுக்குரியனுப்
புரிந்தேனைதூர்வியாகாமோ
ஒருமைப்பாடுமனைதிக்கேதினம்
உடலெல்லாஞ்சஞ்சாரமே
திருஅற்புதனேவேதநாயகனே
செய்வாய்நீஉபகாரமே — தேவாதி

ஈ-இராகம்-குந்தளவராளி-ஆதிதாளம்,

பல்லவி.

நிதம்நிதம்உன்னையேதொழுதேனே
பதமலர்அருள்கோனே

அநுபல்லவி,

சத்தவைபோகா சகலநிர்வாகா
மதுரப்பிரவாகா வரகுணயோகா — நிதம்

சரணங்கள்;

அறம்வளரஇல்லையேஅகம்அறவில்லையே
மறம்ஒருமல்லையேமனமொருச்சில்லையே
புறமயல்வல்லையேபுகுமதிகல்லையே
துறவுறநில்லையேதுயர்வினைதொலையே — நிதம்

மலம்வளர்தீயேவனமொருபேயே
பலமொருநாயேபுவிகொடுமாயை
பலவிதமாயேபடர்வுறுங்கோபே
தலமிசைநீயேதயைபுரிவாயே — நிதம்

அடியவர்இனமேஅருள்மலர்வனமே
கொடியவர்சினமேகுறையுறுதணமே
முடிவுறுதினமேமுறையுறுகனமே
அடிதொழும்வேதநாயகன்தரிசனமே — நிதம்

௱௧-இராகம் சஹானா-ஆதிதாளம்.

பல்லவி.

என்னசொன்னாலும்நீ-இரங்காதிருப்பது
ஏதோர்குணக்கடலே

அநுபல்லவி,

உன்னதஏகனே-உலகநிர்வாகனே என்ன

சரணங்கள்;

௧. இகசுகம்அநுசிதம்என்பதென்அபிமாதம்
தகவுறும்உயர்பதம்தாவெனவேகிதம் என்ன
௨. இன்னமும்என்சினம்எனக்குநின்தரிசனம்
மன்னஎன்கண்ணுறனம்வாவெனவேதினம் என்ன
௩. மாயைபடர்ந்திரமாந்தந்திரம்
நிருட்சுதந்தம்விட்டெனதிறந்தரம் என்ன
௪. உலகவியாபாரமேஒழியாதவிசாரமே
கலகசம்சாரமேகவலேஅபாரமே என்ன
௫. அருமறைவாசகாஅடியர்பிரகாசகா
தருமப்பிரதாயகாதனிவேதநாயகா என்ன

௱௨-இராகம்-இந்துஸ்தான்-காபிதாளம்.

பல்லவி.

நாதாஅடியேன்மீதேன்கோபம்

அநுபல்லவி,

ஆதாரமாகவே அகிலத்தைத்தாங்கும் நாதா

சரணங்கள்,

௧. தாரம்சுதர்இல்லாச்சனியாசிஎன்றேனோ
சீருமில்லாப்பரதேசியென்றேனோ நாதா
௨: தந்தைதாயில்லாததனியர்என்றேனோ
எந்தஉயிரும்பெற்றஜனியர்என்றேனோ நாதா
௩. மன்னும்கைப்பொருள்இல்லாவறியர்என்றேனோ
சினஅனுவும்நாடிச்சிறிடர்என்றேனோ நாதா

ச.	உரியஆண்பெண்ணல்லா விரிபலயுகங்கண்ட	ஒருத்தர் என்றேனே விருத்தர் என்றேனே. (நாதா)
ரு.	ஆதிஅந்தம் இல்லா ஜாதிகுலமில்லா	அநாதியென்றேனே நிர்ஜாதி என்றேனே. (நாதா)
சு.	வீடுவாசல் இல்லாத ஈடன்னம்துணியில்லா	வெளியர் என்றேனே எளியர்என் றேனே. (நாதா)
எ.	மனம்புகுந்தொளிக்கின்ற உனும்நெஞ்சுக்கெட்டா	மாயர் என்றேனே உபாயர் என்றேனே. (நாதா)
அ.	சகல உலகைச்சுமை மிகநாள் அன்புக்கு	தாங்கியென்றேனே வீங்கி என்றேனே. (நாதா)
கூ.	மற்றோர்கண்ணிற்படாத முற்றும்வாய்பேசாத	மாணியென்றேனே மோனி என்றேனே. (நாதா)
ய.	குணமில்லாக்களைக்காயும் அணி அங்கமில்லா	கோபி என்றேனே அரூபி என்றேனே. (நாதா)
கக.	சீர்பேர் இல்லா அநாம ஆரும்துணை இல்லா	தேயர்என்றேனே அபாயர் என்றேனே. (நாதா)
கஉ.	மாதின்றி உலகீன்ற வேதநாயகா இன்னம்	பாயம்சொன்னேனே வேறென்சொன்னேனே. (நாதா)

ககரு. இராகம்-பியாகு-ஆதிதாளம்.

பல்லவி.

உன்னைப்போல எனக்குற்றபேர்கள் இந்த
உலகந்தன்னில் உண்டோ

அநுபல்லவி.

அன்னைதந்தைகுருதேவ-இந்த-அகிலகாரணபிதாவே. (உன்)

சரணங்கள்.

க.	தந்தைதாய்க்கு சாற்றுவார்கள் எந்தநேரமுமே எனக்குநீசெய்வது	மனஸ்தாபம் வரில் பலசாபம் பண்ணில் பாவம் செய்யும் லாபம். (உன்)

உ. அண்ணன்தம்பிக் குண்டுபாகம் அதை
அடையுமட்டும் அவர் ஸ்நேகம்பின்பு
எண்ணுவார்கள் பல துரோகம் நீ
ஈவதுன்மைகள் அநேகம். (உன்)

ங. மனைவிபாலர்க்கன்ன வஸ்திரம் தரும்
மட்டுமே அவர்கள் மித்திரம் பின்பு
நினைவர்செய்வாபல க்ஷுத்திரம் என்றும்
நீ நிம் உன்னருள் சமுத்திரம். (உன்)

ச. ஏவல்மன்னர்க்குண்டு திறையே அதை
ஈந்திடாதவர்க்குச் சிறையே உனை
மேவினோருக்கில்லை குறையே தொழும்
வேதநாயகன்தன் இறையே. (உன்)

கக௪. இராகம்-காப்பி-ரூபகதாளம்.

பல்லவி.

நாளேநலலநாள்-புண்ணியம்செய்யும்.

அநுபல்லவி.

ஆளும்வேதநாயகன் தாளிணைபூசிக்கும் (நாளே)

சரணங்கள்.

க. பாபமில்லாதகால க்ஷேபமும்சுஜனசல்
லாபமுமேபரம லாபமாகக்கொள்ளும் (நாளே)

உ. வேதமும்பெரியவர் போதமும்தேவசங்
கீதமும்முதலான நாதங்களுடனெசெல்லும். (நாளே)

ங. ஞானமும்ஜீவாபி மானமும்பரன்பத
தியானமுமேசெய்து மோனநிலையில்நிற்கும். (நாளே)

ச. பத்தினிசுதர்குடும்பத்தவர்யாவரும்
சித்தநிர்மலமுடன் பக்திபுரிந்திடும். (நாளே)

ரு. கூனர்குருடர் அங்கஹீனர்பிணி உடையோர்
தீனமுதலியோர்க்குத் தானதருமஞ்செய்யும். (நாளே)

௯௫. இராகம் சாவேரி-ஆதிதாளம்.

பல்லவி.

ஏதோ இன்னம்வாதோ இரங்காதோ உன்மனமே.

அநுபல்லவி.

வேதவரோதய விமலச்சந்திரோதய
வித்தகநாயகுண உத்தமசிரேஷ்டா
பத்தர்கள்பழுதறு சித்தஅபீஷ்டா. (ஏதோ)

சரணங்கள்.

க. ஐம்புலவேடர்வேட்டை ஆடித்திரியுங்காட்டை
வெம்பாசப்பேய்வாழ்வீட்டை விரும்பியேதுன்பமூட்டை
மேவிவனம்அயர்ந்தேன் நிலைமையில்லாப்
பூவின்சுகம்வியந்தேன அநுதினமும்
பாவவழிநயந்தேன் இனிமேல்வரும்
சாவையெண்ணிப்பயந்தேன் நிரந்தரமும்
தரைமுதலாகயெங்கும் விரியும்சுந்தரமே
அரியகருணைமழை சொரியுங்கந்தரமே. (ஏதோ)

உ. தீயமனோவியாபாரம் தீர்ந்திடவேஇந்நேரம்
நீயருள்பரிகாரம் நின்பதமேஆதாரம்
நேசஅபிமானம் சற்றும்இல்லாமல்
பேசுமேவன்ஞானம் எனக்குலவ
லேசம்அநுஷ்டானம் இல்லையேஉப
தேசன்மானம் கொடுத்தருள்செய்
தினமனமகிழ்வுறு கனதிரவியமே
அனவரதமும்ஒளிர் தினகரமயமே (ஏதோ)

௩. நீர்க்குமிழியெனவே நிலைபாவாழ்வுகனவே
பார்க்குள்உனைவினவே பரிந்தருள்வாய்நனவே
பாசகுலைபாதா எனக்குமோகா
வேசம்கலையாதா உலகம்செய்யும்
மோசம்தொலையாதா உன்மீதுகன
நேசம்நிலையாதா நிலைமைபெறு
நீதநிரஞ்சன அபேதசுகுணமே
வேதநாயகருமனப் போதமர்மணமே. (ஏதோ)

௱௬. இராகம்-பந்து ஆதிதாளம்.

பல்லவி.

நீயேசர்வசக்தன்-நல்ல
நிச்சயனேகனே அக்ஷயனே

அநுபல்லவி.

தாயுந்தந்தையுந் தமருமற்றோய
மாயுந்தொழிலறு வாழ்வுபெற்றோயே. (நீயே)

சரணங்கள்.

௧. பாலாயிரம்அண்டம் படைப்பாய்உடைப்பாய்
எல்லாஉலகமும் எள்ளினுள்அடைப்பாய் (நீயே)

௨. அஸ்திவாரந்தூண் அருஞ்சுவரிலையே
பத்தியாநீசெய்த பகிரண்டநிலையே. (நீயே)

௩. பலபொருள்தாங்கிடும் பர்வதம்போலே
தலையண்டகோடிகள் தாங்குவாய்மேலே. (நீயே)

௪. திரிநெய்செப்பில்லாத் தீபங்கள்போலே
பரிதிசந்திரன்மீன் பலசெய்ததாலே. (நீயே)

௫. அண்டம்அகண்டம் அடங்காதசரீரம்
தொண்டர்கள்மனமலர் சுமக்குமோபாடம. (நீயே)

௬. பார்பூதங்கள்உன பணிசெய்யுஞ்சரியே
சூரியன்உனதுடற் சோதிமுன்கரியே. (நீயே)

௭. யுகம்பலகோடிகள் உனக்கரைக்ஷணமே
நிகழுமுக்காலமு நினக்குக்கிரகணமே. (நீயே)

௮. சகலர்க்குமூட்டிநீ தானொன்றுமுண்ணாய்
நிகழ்பெருங்காவலால் நித்திரைபண்ணாய். (நீயே)

௯. தினகரசந்திர தீபமேற்றிடுவாய்
வனமுகிற்கடத்தால் மழையூற்றிடுவாய். (நீயே)

௰. நடவாவறவாய் நாடெங்குமிருப்பாய்
உடலாய்உயிராய் உயர்வாய்பொருப்பாய். (நீயே)

௧௧. மரங்களினுழைந்தே மலர்வாய்கிளைப்பாய்
கரங்களில்லாதே கருமங்கள்விளைப்பாய். (நீயே)

௰௨. கண்ணுயப்பொருள்களைக் காட்டுவாய்பார்ப்பாய்
அண்ணசகலமும் ஆட்டியேதீர்ப்பாய் (நீயே)

௰௩. கனைகடல்உனதருட் கடலிலோர்திவலை
இனிவேதநாயகா எனக்கென்னகவலை (நீயே)

௱௭. இராகம்-தோடி-ரூபகதாளம்.

பல்லவி.

ஞானசூருபாவடிவே அருமறையின்முடிவே (ஞான

அநுபல்லவி.

மோகனசுகாசனப்பிரம முத்தியளித்திடும் நித்தியபரப்பிரம. (ஞான)

சரணங்கள்.

பரமானுனன்மீ துனக்குக்கிருபையில்லையா என்தன்
பாவந்தொலைத்தென்னை ஆள்வதுனக்கொருமலையா
தாமதம்நீசெய்யதேகம் எனக்கென்னவில்லையா நிதம்
தஞ்சம்பத கஞ்சப்பிர பஞ்சந்தரு நஞ்சந்தொலை (ஞான)

௨. தினகிருபாநிதியென்று பேர்கொண்டநீஅலதா அருள்
செய்தென்னை ஆள்வதினால் உனக்கியாதொருசெலவா
ஆணமலர்பதம்அண்டம் நான்கிள்ளைநீஇலவா புவி
அஞ்சும்புலவன்-அஞ்சுப்பகைகெஞ்சச்செயும் வஞ்சந்தொலை. ()

௩. நின்மலநித்திய நிரஞ்சனதீதவிநோதா நாளும்
நிகிலசராசரம் யாவையுந்தாங்கும்பிரக்கியாதா
தன்மவிலாச சுகாநுபாவானந்தநீதா எனைச்
சாடும்வினை வாடும்வழி பாடும்பா வீடுங்கொடு. (ஞான)

௪. நம்பும்அடியவர் துன்பம்அகற்றுங்குணாளா பல
நாசமகேசபிர காசவிலாசதயாளா
அம்புவியில்வேதநாயகன் போற்றும்பொற்றாளா இங்கும்
அங்கும்புவி எங்கும்புகழ் தங்கும்படி ரங்கம்பெறு. (ஞான)

௱அ இராகம் ஈசமனோகரி ஏகதாளம்.

பல்லவி.

மெய்யிது மெய்யிது மெய்யிது தேவே (மெய்)

அநுபல்லவி.

ஐயையோவென்னசெய்வேன் அருள்புரிகோவே (மெய்)

சரணங்கள்.

க. மலர்ந்துனைப்போற்றாத வாயனும்நானே
கலந்துநின்பணிசெய்யாக் காலனும்நானே. (மெய்)

உ. கண்டுநீர்பெருகாத கண்ணனும்நானே
அண்டும்பாவியர்க்கெல்லாம் அண்ணனும்நானே. (மெய்)

ங. நிதம்உனைநினையாத நெஞ்சனும்நானே
மதங்கொண்டுதிரிகின்ற வஞ்சனும்நானே (மெய்)

ச. கனிந்துனைசேவியாக் கர்த்தனும்நானே
தினந்தினம்வணங்காத சிரத்தனும்நானே (மெய்)

ரு. கருதிஉன்புகழ்கேளாக காதனும்நானே
கருதியைமறுத்திடும் சூதனும்நானே (மெய்)

சு. கடுகஆலயம்செல்லாக் காலனும்நானே
முடுகியவினைக்கெல்லாம் மூலனும்நானே (மெய்)

எ. போதஅபேத புநிதநிஷ்கோபா
வேதநாயகன்தொழும் விமலசொரூபா (மெய்)

——()——

௱க௯ இராகம்-சாமா-ரூபகதாளம்.

பல்லவி.

பரபிரமமே திருவருள் தால்கிரமமே அநுதினமும்.

அநுபல்லவி.

வரகுணசுகானுபாவ
சுரகுணபூஜிதவைபவ (பரபிரம்)

சரணங்கள்.

க. செய்வதெல்லாம் நீவினையே
தினையளவும்உனை நினையேன்
தெய்வமேநம்பினேன் உனையே
தீர்த்தருள்வாய்துயர் தனையே (பரபிரம்)

௨. அறியேன்மேற்குக் கிழக்கு
அன்புமில்லேன்நின் கழற்கு
சிறியேன்மேல்ஏன் வழக்கு
ஜெபதபத்தில்லனைப் பழக்கு. (பரம)

௩. பாழ்மனமோவல் விருப்பு
பாவம்அதற்குக் கரும்பு
தாழ்வுறுநான்சிறு துரும்பு
சாமிஎன்மேல்மனந் திரும்பு. (பரம)

௪. நினையேன்தர்மம் அதர்மம்
நிலமிசைநான்மூட ஜென்மம்
அனையேஎதின்னம் வர்மம்
அகற்றிடுவாய்எனது கர்மம். (பரம)

௫. அகண்டமண்டலாதி பத்திய
ஆதியந்தரகித நித்திய
மிருந்தகுணபரண சத்திய
வேதநாயகன் ஸ்துத்திய. (பரம)

௫௰. இராகம்-பியாகு-ஆதிதாளம்

பல்லவி.

பாதம்நம்பினேனே-போதம் அருள்கோனே

அநுபல்லவி.

வேதமுதலோனே மாதவர்பிரானே. (பாதம்)

சரணங்கள்.

௧. ஆதரவுநீயே ஐயனேஎன் தாயே
வாதைமலநோயே மாற்றிஅருள்வாயே. (பாதம்)

௨. தீங்குகள்அனேகம் செய்திடும்எனது துரோகம்
நீங்கிடவிவேகம் நீஅழில்ஆமோகம். (பாதம்)

௩. முத்தர்கள்சமூகனே முக்கியபிரமுகனே
உத்தமசுமுகனே ஓவேதநாயகனே. (பாதம்)

ககச. இராகம்-கனவசந்தம்-ஆதிதாளம்.

பல்லவி.

நீயே துணைபரனே-துன்பம்
நீங்கிட-அருள்வரனே.

அநுபல்லவி.

மாயாதிமிர விஜயதினகரனே
தாயாகியசர்வ சாதககரனே. (நீயே)

சரணங்கள்.

க. அடியேன்செய்வதெல்லாம் அரும்பாவம்
கொடியேன்மீது கொள்ளாதேகோபம். (நீயே)

உ. பண்ணேன் துதியே படியேன்விதியே
கண்ணேமணியே கதியேநிதியே. (நீயே)

ங. உனையேநம்பிடில் உண்டோபயமே
அனையேவினைதீர்த் தருள்வாய்ஜெயமே. (நீயே)

ச. மாதவம்உடையவர் மகிழ்மலரகிதா
வேதநாயகன்தொழும் விபுதர்கள்சகிதா. (நீயே)

ககரு. இராகம்-பைரவி-திரிபுடைதாளம்.

பல்லவி.

நாதாகன-மேதாதினம்-நீதாவரமே.

அநுபல்லவி.

போதாசுக-தாதா அதி-கியாதாபிரசாதாபுவி. (நாதா)

சரணங்கள்.

க. நித்தியம்அநித்திய சுகத்தினைமதித்திடு
பைத்தியம்விடுத்தினிய சத்தியம்உதித்திடவே. (நாதா)

உ. சுந்தரமடந்தையர்கள் சந்திரமுகந்தனை
நினைந்தெனது சிந்தைசெய் தந்திரம்ஒழிந்திடவே. (நாதா)

ங. சொப்பனமேஒப்பனைகொள் அறபஉடலைப்பொருள்என
னப்பிரியம் வெப்பதற் கற்பலன்உறப்புவன. (நாதா)

௪. மாதர்நிதிபூதலமேல் ஆதரம்உறுதபடி
சாதகப்பிரயோதமருள் வேதநாயகன்புகழும் (நாதா)

ககஙு. இராகம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

வேதநாயகனே-மெய்-மெய்-மெய்-மெய்.

அநுபல்லவி.

பாதகஞ்செய்துழலும் பாழ்மதியே ஐயன்
பாதகங்கள்அன்றி நமக்கார்கதியே
பூசலவாழ்வினொடு புகழ்நிதியே வெறும்
பொய்-பொய்-பொய்-பொய். (வேத)

சரணங்கள்.

௧. அத்தமியாதொளிர் திவாகரனே அதி
அற்புதமான சிவாகரனே
சித்தமிசைஒளிர் சுதாகரனைத் துதி
செய்-செய்-செய்-செய். (வேத)

௨. பூதலம்எங்கும் இசைபோனவனே அதி
புனிதனே உயிர்க்குயிர் ஆனவனே
மாதவர்காணுகின்ற மானவனே உன்னுள்
வை-வை-வை-வை. (வேத)

௩. நாதபூதபௌதிகஸ் தாபகனே வேத
நாயகன்மீதில்என்றும் ஞாபகனே
ஓதரிதானசர்வ வியாபகனைப் பணிந்
துய்-உய்-உய்-உய். (வேத)

ககச. இராகம்-கௌளிபந்து-ஆதிதாளம்.

பல்லவி.

ஓஓஜெகநாதா-ஒருவரம்-உதவிடல்ஆகாதா.

அநுபல்லவி.

தேவேதினம்பல பாவிபாடிஎன்
நாவேயிளைத்தேனே. (ஓஓ)

சரணங்கள்.

க. மனவிஷயப் பிரியம் சகலமும்
வாசா கைங்கரியம்
சிஷ்மதம் மாற்சரியம் பூண்டஎன்
செய்கைகள் ஆச்சரியம்
இனமாகியபக்த ஜனமுடன்ஐக்கியம்
கனவிலும்நீங்காமல். (ஓஓ)

உ. பொய்யைமெய் யெனநாடி அநித்தியப்
பொருள்களை யேதேடி
வையகம் எங்கும் ஓடி நான்செய்த
வஞ்சகம் பலகோடி
மையற்கரி இடர்கள்-செய்யவேதொடருதே
ஐயோ-கூ-கூ-கூ. (ஓஓ)

நேசர்சிந்தா மணியே அடியேன்
நெஞ்சகம்பூண் அணியே
ஆசையில்வரும் பிணியே தொலைந்துநல்
அறமேவிடப் பணியே
ஈசனேஉனைத்தொழும் தாசன்வேதநாயகன்
பாசவலைஉறுமல். (ஓஓ)

கக௬. இராகம்-தேசமுகாரி-ஆதிதாளம்.

பல்லவி.

போதம்தரஎன்ன விவாதம்-எனக்கபல
போதம்தரஎன்ன விவாதம்

அநுபல்லவி.

வேதம் உணர்ந்தொழுகும்
நீதம் உடையவர்க்குப்
பேதம் அறவரப்பிற
சாதம் அருள்தெய்வமே. (போ)

சரணங்கள்.

க. மோகம்பெருகியலெள
கீகஎனும்பெரும்பிர
வாகந்தனில்அழுந்தி
ஆகம்மெலிந்தேன்ஐயா. (போ)

௨. நெஞ்சோர் புறம்புலன்கள்
அஞ்சோர் புறம்மின்னார்கண்
நஞ்சோர் புரம்வருத்தும்
என்சோர் வெலாம்அகலப் (போதம்)

௩. பெண்ணாசை யாலும்வளர்
மண்ணாசை யாலும்நிதி
எண்ணாசை யாலும்மனம்
புண்ணாகி வடிவானேனே. (போதம்)

௪. ஏதும் அறிவில்லாஎன்
மீது வர்மஞ்செய்தல்த
காதுபரமபக்தர்
ஓதும் வேதநாயகா. (போதம்)

ககசு. இராகம்-கௌளிபந்து-ஆதிதாளம்.

பல்லவி.

சருவேசாசரணம்-எனக்குன்-தாளேஆபரணம்.

அநுபல்லவி.

இரவும்பகலும் உனையேஅனுசரணம்
இசைந்திடச்செய்யிது நல்லபிரகரணம். (சரு)

சரணங்கள்.

க. நீயேசெய்வதெல்லாம் உபகாரம்
நின்மேற்சொல்லஉண்டோ விவகாரம்
தீயேன்புரிந்திடும்பிழைகள் அபாரம்
தேவரதிசெய்இதற்கோர் பரிகாரம் (சரு)

௨. புண்ணியம்செய்திலன்கடுகுப் பிரமாணம்
பொய்யன்நான்ஆயினும்இது பிரமாணம்
எண்ணிடில்எனக்குமினார் விழிபாணம்
என்சரித்திரம்பெருங்கதா புராணம். (சரு)

௩. பேசுவதெல்லாம்வாசா ஞானம்
பெரும்பாவியர்க்கெல்லாம்நான்பிர தானம்
நேசாசகலமும்உனதா தீனம்
நீயருள்எனக்குக்கிருபாரச பானம். (சரு)

ச. ஈமேல்தொடுக்கின்றபாணப் பிரயோகம்
எனநீமுனிந்திடில்எது நிர்வாகம்
மாமோகாதியில்மயங்கி னேன் ஆகம்
வரவேதநாயகா அருள் பரிபாகம். (சரு)

ககஎ. இராகம்-நாதநாமக்கிரியை-ரூபகதாளம்.

பல்லவி.

சமயம்ஈதையா-நலம்எனக்-கமையலுதையா.

அநுபல்லவி.

அமர்செய்தீவினைச் சுமைதொலைந்தெனை
அமலன் ஆக்கிடல்நேர்த்தி-ஒரு
சமமிலா அருட்பூர்த்தி-உறு
நிமலகாரணமூர்த்தி. (சம)

சரணங்கள்.

க. இன்னந் தாமசமோ வினைசுமந்
திடஎன்னால் வசமோ எனக்
கின்னல் சகசமோ உனக்கருள்
ஈய அவசமோ
அன்னமென்னடை-மின்னல்நேரிடைக்
கன்னியர்விழி இணையே மனம்
தன்னில்பாய்ந்திடும் கணையே இனி
எனசெய்வேன்நீ துணையே. (சம)

உ. கருணை கூராயோ எனதுளக்
கவலை தீராயோ இந்தத்
தருணம் வாராயோ எளியேன்
தன் முகம் பாராயோ
இரணியப்பெண்கள்-தரணிமீதந்தக்
காணமேவமேல் துறந்தேன் சடல்
திரணம்போலெங்கும் பறந்தேன் அன்றன
சரணபங்கயம் மறந்தேன். (சம)

ங. மாயை நீக்காயோ எனைமுகம்
மலர்ந்து நோக்காயோ வினைத்
தீயைப் போக்காயோ எனைவிதி
சீலன் ஆக்காயோ

நீயலாதுசகாயம் எதினித்
தீயவர்பயக்கரனே-மல
நோய் அற அருள்வரனே-வேத
நாயகன்தொழும்பரனே. (சம)

கக௮. இராகம்-இந்துஸ்தான்காபி-ஆதிதாளம்.

பல்லவி.

வாவா-வாவா-என் இருதயந்தனில்
வந்தேமலரடி-தந்தே ஆண்டிட. (வாவா)

அநுபல்லவி.

சாவால்வருந்துமுன் காவாகாத்திடில்
தாவா-பூவார்-ஜீவா-தேவா. (வாவா)

சரணங்கள்.

க. மின்னார்கள்விழிவலை தன்னால்தயங்கினேன்
உன்னாதரவில்லாமல் பன்னாள்மயங்கினேன் (வாவா)

உ. பொய்யானவாழ்வுதனை மெய்யாகநம்பினேன்
ஐயாநின்னடிக்கன்பு செய்யாமல்வெம்பினேன் (வாவா)

ந. சிந்தாகுலங்கெட விரைந்தாளில்திண்மையா
எந்தாயே நீயெனை முனிந்தேகல்நன்மையா (வாவா)

ச. வேதநாயகன்தொழும் சீதமலர்ப்பாதனே
ஆதவன் எனப்புவி மீதில்வரும்நாதனே (வாவா)

கக௯. இராகம்-இந்துஸ்தான்காபி—ஆதிதாளம்.

பல்லவி.

இன்னமும் என்மீதுனக்-கேன்பராக்கு
நின்னருள்தந்தே-யெனைநீகைதூக்கு. (இன்ன)

அநுபல்லவி.

பன்னரியபுவன மனோகரா
உன்னதப்பிரதாப கிருபாகரா. (இன்ன)

சரணங்கள்.

க. ஏதுங்கதியில்லா ஏழைநானே
என்னசெய்யும்சலம் நீங்குமீனே
பாதவனஜமலரே நம்பினேனே
பாகே அமுதே பசுந்தேனே (இன்ன)

உ. கானலெனும்காயசுக போகம்நாடிக்
கர்த்தனேசெய்தேன் வினைகோடிகோடி
வேனில்வெயிலுற்ற புழுப்போலவாடி
வேதனைவந்தேன் உந்தன்பாதந்தேடி (இன்ன)

ந. அண்டபகிரண்ட சர்வாயகாரா
அவ்வியக்தமய அசகாயசூரா
தொண்டன்வேதநாயகன் மனேசஞ்சாரா
தோஷபரிகாரா உதாரதீரா (இன்ன)

கஉ௰. இராகம்-சுருட்டி-சாப்புதாளம்.

பல்லவி.

இப்படிபட்டநான்-எப்படி உன்முகத்
தேவர்துவிழிப்பேன்-ஐயா (இப்ப)

அநுபல்லவி.

தப்பறியாதவர் தமதறிவினைத்தூண்டும்
தாயேதந்தையே என்மேல் நீயே இரங்கவேண்டும். (இப்ப)

சரணங்கள்.

க. பாதாதிகேசபரியந்தமும் நான்விடம்
பகலும் அரவும்மாயைபண்ணும் என்நெஞ்சில்நடம்
ஏதம்அற அந்நெஞ்சம்ஏகா இடம்எவ்விடம்
எனினும் உன்னிடம்வரவெனில் அதுமுழுமூடம் (இப்ப)

உ. கர்த்தனேஎன்மேல் அற்பக்காற்றடிக்கினும்பொறேன்
காசினியெல்லாங்கேட்டுங் கலங்கினும்துயருறேன்
எத்தனைபொருள்பிறர் எனக்கீந்திடினுமறேன்
எச்சிற்கையாலுங்காகம் ஓட்டிநான் இழிவறேன் (இப்ப)

௯. இகமிசைநான் சுமந் திடுவதுபழிச்சுமை
எனினும்பிறர்செய்யற்ப இடருக்கும்செய்யேன்க்ஷமை
மிக அற்பர்தமைச்சேர்வ தல்லால்மேலவர்தமை
வேதநாயகனேநான் மேவி அறியேன் இமை. (இப்ப)

௧௨௧. இராகம்-மோகனம்-திருபுடைதாளம்.

பல்லவி.

எந்தவிதமும் உன்-சுந்தமலர்ப்பதமே-அடியேன் அடைந்திடச்
சிந்தைமகிழ்ந்துநீ-தந்தருள்வாயிதமே. (எந்த)

அநுபல்லவி.

அந்தரமெங்கும்-அமர்சர்வசாக்ஷியே
வந்தனைசெய்பவர்-மானசக்காக்ஷியே. (எந்த)

சரணங்கள்.

௧. சகசமானிடர்தமக்குப்பாவமே-பிழையாவும்பொறுத்துத்
தயைசெய்தாள்வதுநின் சுபாவமே
தகவே உன்சரித்திரப்பிரபாவமே அநுதினமும்பாடிச்
சாகம்பெற என்மனோபாவமே
தந்தைநீதானே-உனக்கொரு
மைந்தனும்நானே-இவ்வாறுநான்
சொந்தமானேனே-தரிசனம்
தந்தருள்கோனே-புவிதனில்
நிகரில்லாத நியாயப்பிரசுத்தனே
சகலலோக சராசரகர்த்தனே. (எந்த)

௨. மணல்அன்னத்தில்கல்லாய்க்கிடும்வகையே-எனைச்சோதித்திடில்
மனத்தில் உள்ளதெல்லாம் வினைத்தொகையே (என்
குணம்உண்டோபுவிவாழ்வுவெறுபுகையே அதைவிரும்பிஎன்மனக்
குரங்கு ஐம்புலன்களும் செய்யும்பகையே
கோதையர்மோசம் தனில்வரும்
வாதைஅநேகம் எவர்க்குமே
ஈதநுபோகம் எனக்கினிப்
போதும் இப்போகம் அநுதினம்
புணருமஆநந்த பொக்கிஷசாலையே
மணமிகுந்தருள் மலரும்சோலையே. (எந்த)

ங. தாதைபிள்ளையைத்தள்ளல்பார்ந்தமா இதுநான்குபேரும்
சரியென்றொப்புக்கொள்ளும் சித்தாந்தமா
நாதனே எனைமுனிதல்சார்ந்தமா எனதுள இரும்பையென்
நாளும் இழுக்கும்விஷயம்காந்தமா உனையேகதியென

நண்ணியசித்தர் பெருந்தவம்
பண்ணியசித்தர் நிகராறு
புண்ணியபத்தர் முதலிய
எண்ணிலாமுத்தர் அடையுமுன்

பாதநிதி அவர்க்கேயிதிராஸ்தியா
வேதநாயகன்பங்கென்னநாஸ்தியா. (எந்த)

---

௧௨௨. இராகம்-பைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

ஏகாகனயோகா-அநுதினம்-எனையாண்டருள்வாயே.

அநுபல்லவி.

சேகரகுணதிவ்ய தேஜோமயகாத்திர
பாக்கிய்த்தியானந்த பாக்கியபரமக்ஷேத்திர (ஏகா)

சரணங்கள்.

௧. கண்டுநிகர்மொழியும் வண்டுநிகர்விழியும்
தண்டுநிகர்புயமும்கொண்டமயக்குமந்தப்
பெண்டுபிள்ளைகட்குழைத் துண்டுறங்கிநிதமும்
மண்டுவினையலாதுன் தொண்டுசெய்தறிகிலன். (ஏகா)

௨. நாடேன்பெரியரொடு கூடேன்புண்ணியந்தன்னில்
நீடேன் உனதருளைத் தேடேன்உனதுபுகழ்
பாடேன் அநுதினங்கொண்டாடேன்பதமலரைச்
சூடேன் அருவினையைச் சாடேன்சுரர்புகழும். (ஏகா)

ங. நாதா திவ்யவரப்பிரசாதா அகண்டசமூ
கீதாநினைவினுக்கதீதா அடியர்கள்ச
மேதாநிலையொன்பஞ்ச பூதாதிரிகர்மவி
னோதாதினந்தினமும் வேதநாயகன்புகழ். (ஏகா)

க௨௩. இராகம்-மோகனம்-ரூபகதாளம்.

பல்லவி.

இன்னம்பராமுகமாமோ-வினை
யின்னருள்தானின் றிப்போமோ.

அநுபல்லவி.

மின்னல்உறுபுகழ் நன்னலமேவிய
வேதார்த்த-கன-போதார்த்தா-ஓ (இன்)

சரணங்கள்.

௧. வன்பிழைஒப்புக்கொண் டாலே க்ஷமை
மன்னர்செய்வார்புவி மேலே
என்பிழையைப்பல காலே ஒப்பி
னேனேமுனிவேதென் பாலே
அன்பெனும்தெப்பம் இல்லாமலும்வினைக்கடல்
ஆழ்ந்தேனே-துயர்-சூழ்ந்தேனே-ஓ. (இன்)

௨. தன்பதியெப்பகை யோரே கொள்ளத்
தான்பார்த்திருப்பவன் யாரே
நின்பதிஎன்பதி தேரே அதில்
நீங்காமல்உன்கண்முன் நேரே
உன்பகையோரெனும் காமக்குரோதிகள்
உற்றாரே ஜெயம் பெற்றாரே ஓ (இன்)

௩. நெஞ்சங்கவலைக்கு விடா ஐயா
நின்சோதனைக்குநான் ஈடா
அஞ்சாதேநீ இங்கு வாடா என்
றருளாதின்னம்வேறு பாடா
தஞ்சமெனவேதநாயகன் போற்றிடும்
தாதாவேபெற்ற மாதாவே ஓ. (இன்ன)

க௨௪. இராகம் உசேனி திரிபுடைதாளம்.

பல்லவி.

ஏகநாதா அரும்பரம் போகம்நீதா.

அநுபல்லவி.

பாகவிகசித கற்பகாரண்ணிய
பதிதபாவன பரமகாருண்ணிய

தேகம்நிறையதி ரூபலாவண்ணிய
  தீயர்தமைச்சிறைசூழ செயும்கிர்த்தா சுதண்ணிய (ஏக)

சரணங்கள்.

௧. நாளுமுழ்கினன் பாபதுக்கணம்
  காடினேன்பெரி யோர்கள்வக்கணம்
ஆளும்படிதரித் தனேகலக்கணம
  அன்போடெனைச்சேர் நல்லோர்கள்தங்கணம்

நீளும்அகண்டித மாகியோங்கி
மாளுந்தொழிலுறு மாசுநீக்கிய (ஏக)

௨. அடியன்மீதுனக் கென்னபிணக்கமே
  அகற்றுவாயெனை தகங்கள்உனக்கமே
நெடியநின்பதி மலர்க்குவணக்கமே
  நிதமும்நான்செய்ய அருள்நல்லிக்கணமே

கடியதுயர்கடல் கடக்கஉனதிணை
அடியலாதினி அயலுண்டோபுவை (ஏக)

௩. உதிர்க்கும்பலகதிர் நிகரும்விதாரனே
  உயிர்சித்தியானந்த ககரச்சதாரனே
துதிக்கத்துதிக்கவே இனிக்கும்மதுரனே
சூழும்சீவராசிகள் தம்பிதிரனே

குதிக்குமர்யையைக் கொன்றுதாழ்விக்கும்
மதிக்கும்வேதநாயகனே வாழ்விக்கும். (ஏக)

---

௧௨௫. இராகம்-புன்னாகவராளி-ரூபகதாளம்.

பல்லவி.

தயைபுரியே எனதுளத் துயர்பிரியே. (தயை)

அநுபல்லவி.

உயரும்தர்மசம் வர்த்தனு
  உத்தமர்தம்மனை கிர்த்தனு
அபவர் இழிகுல பர்த்தனு
  கருதரும்புண்ய பத்தனு. (தயை)

சரணங்கள்.

௧. புண்ணியம்நாயேனுக் கெட்டி
பொய்சொல்லாம் வெல்லக்கட்டி
திண்ணியமெய்ஞ்ஞான திட்டி
சித்தியில் என்னைநட்டி
சின்மயமே மெய்வேத நன்மயமே என்னையுந்
தீமைப்பழிபோட நன்மைவைப்பவனிட
உன்மெய்ப்பதம்நாட கன்மப்பயிர்வாட (தயை)

௨. என்குறை பாராட்டாதே
இளைப்பனென்னை வாட்டாதே
நிலைகோபங் காட்டாதே
நிபங்கள்ளன்மேற் சாட்டாதே
நிச்சயமேநிலைபெறும் அச்சயமேகனமுறு
நேசத்திடமோங்க பாசத்திடர்நீங்க
மாசற்றறம்வீங்க வாசத்தைதாங்க (தயை)

௩. அண்டசராசர ரூபா
அகதிகளுக் கருதாபா
விண்டமைமண்டல பூபா
வேதநாயகன் லாயா
விண்மணியே எனதிரு கண்மணியே பழிசெய்யும்
வேகப்பகைமோட்டி மோகப்பகைவிட்டி
பாகப்பதம்நீட்டி யோகப்பதிகாட்டி. (தயை)

---

௧௨ ஆ. இராகம் ஜங்கலா ரூபகதாளம்

பல்லவி.

நல்லவரந்தாருவாய்
காதலனே அபேதனே. (நல்ல)

அநுபல்லவி.

அல்லும்பகலும் உன்னைநாடி
அற்புத பரமார்த்தந்தேட (நல்ல)

சரணங்கள்.

௧. அன்பருடனேகூடவும் அநுதினம்துதிபாடவும்
இன்பசாகரம்ஆடவும் ஈனரைக்கண்டால்ஓடவும். (நல்ல

உ. பஞ்சபுலனை அடக்கவும் பாவக்கடலைகடக்கவும்
நெஞ்சம்ஒடுங்கிக்கிடக்கவும் நீதிநெறியில்நடக்கவும். (நல்ல)

௩. தீனர்களையேதாங்கவும் சிந்தைத்துயரம்நீங்கவும்
ஞானவழியில்ஓங்கவும் நாளும்அடியில்தூங்கவும். (நல்ல)

௪. பத்தர்பரவுந்தேவனே பரமதிவயசுபாவனே
ஸித்தகமனோபாவனே வேதநாயகன்ஜீவனே. (நல்ல)

௧௨௭. இராகம் பூரணச்சந்திரிகை ஆதிதாளம்

பல்லவி.

இன்னம்தான்பராமுகமோ இதுதகுமோ ஸ்வாமி

அநுபல்லவி.

சந்நிதானதரிசனம் அருளாமல் (இன்னம்)

சரணங்கள்.

உ. செந்தாமரைப்பதமே சேரேன்நானிதமே
கொந்தேன்பலவிதமே நோய்தீர்த்தருள்ஹிதமே
சிந்தைதனிற்பிரமை கொண்டேன்
தீமைகள்செய்து கைகண்டேன்
சந்ததமும்நலம விண்டேன்
சஜ்ஜனசங்கமும் அண்டேன்.(இன்னம்)

உ. பூண்டேன்அபசரிதம் புகழேனின்சரிதம்
ஆண்டோய்என்துரிதம் அறவேசெய்துரிதம்
நீண்டபெருந்தகை பூணேன்
நீதிதனையுமே பேணேன்
மூண்டபெரும்பழி நாணேன்
முத்திபெரும்வழி காணேன்.(இன்னம்)

உ. அடியார்திரவியமே அமலோதயஸ்வயமே
வடிவார் ஆலயமே வளர்த்தேஜோமயமே
திடமுறு புவனாதாரா
தினகரகோடி சரீரா
விடயமுறு அதிகாரா
வேதநாயகன் உபகாரா (இன்னம்)

கஉ௮. இராகம் பிலகரி ரூபகதாளம்.

பல்லவி.

கருணாலயநிதியே-தினமும்உன்
சரணம்புயம்கதியே (கருணாலய)

அநுபல்லவி.

சருவபேதவிநோதகாரண
பரமசாதகபவநிவாரண. (கருணாலய)

சரணங்கள்.

க. நிதம்வெளுக்க வெளுக்கவென்றாசு
நிமிஷந்தோறும் நிறையுமேமாசு
அதுபோலஎன்தன் அகமுறும்ஆசு
அகலவேஉன் அருள்ஒளிவீசு
அகிலகோடி விசாலகற்பித
சகலஜீவதயாள அற்புத. (கருணாலய)

உ. இங்கென்செய்கைகள் யாவும்நிகிர்ஷ்டம்
எனக்குப்புண்ணியம் என்றும் அநிஷ்டம்
பங்கம்தீர்க்கில் உனக்குண்டோநஷ்டம்
பரமனேயருளாயோ உதகிரிஷ்டம்
பாரமாகவே பண்ணும்பாதகம்
தீரவேநீசெய்வை சாதகம் (கருணாலய)

ங. அமலபாஷ்கரா கோடிசொரூபா
அகண்டசச்சிதானந்த பிரதாபா
நிமலவேத வேதாந்தநிரூபா
நிர்விகற்ப நிசுஞ்சனதீபா
நீதபூரண நிலயமஞ்சித
வேதநாயகன் இதயரஞ்சித (கருணாலய)

கஉ௯. இராகம் அமீர்கல்யாணி ரூபகதாளம்.

பல்லவி.

நாதா இடையாதா வாமேஜெகநாதா

அநுபல்லவி.

பாதாரவிந்தம்நம்பும் பாவியமேதாவியாக்க (நாதா)

சரணங்கள்.

௧. எந்தநாளுமுடைவிர்த்தி இல்லையேநிரிகரணசுத்தி
மங்கமானஎன்துர்ப்புத்தி மாறவே அருளாயோசித்தி. (நாதா)

௨. அவமேமனமதயானைஎன்வசம் ஆகவேயருள்ஞான அங்குசம்
சுகதுக்காதிகளில்சமரசம தோன்றவே அருள்வாய்தயாரசம்

௩. அபபவரதகாரநிர்வாக ஆபத்பாந்தவ அருட்பிரவாக
விபவசார்வகௌமயோக வேதநாயகன்ஸ்வாநுபோக. (நாதா)

௧௫௰. இராகம் அபூர்வம்.

பல்லவி.

சருவவிநோதா திருவருள்தாதா-சருவ

அநுபல்லவி.

இரவுபகல்உனதிணையடிநாடவும்
தருமநிர்மலசுக சாகரம் ஆடவும் (சருவ)

சரணங்கள்.

௧. பசிதாகசோகரோக பாபசரீரம்
கசிவுறுமலஜல காமபண்டாரம்
சுசிஅறும்இதில்வினை தோஷம்அபாரம்
நிசமயனே அருள் நீபரிகாரம் (சருவ)

௨. கடல்நடுவேகரை காணுதகாகம்
இடர்உறல்போலவே ஏதுநிர்வாகம்
மடம்அற அருள்செய்நிர் மலபரிபாகம்
கடவுளைநாடினேன் கருணைப்பிரவாகம் (சருவ)

௩. சுரகணசேவித துரிதவிநாசன
சருவசுபாபர சாபவிமோசன
கருமநிவாரண கருணவிலோசன
வரவேதநாயகன் மனகமலாசன (சருவ)

௧௫௧. இராகம் சுரசாங்கி ரூபகதாளம்.

பல்லவி.

எத்தனைகவிபாடினும் பலன் ஏதுமில்லையே. (எத்தனை)

அநுபல்லவி.

சித்தம்வாக்குக்கிரியை அத்தனையும்நிதம்
உத்தமமார்க்கத்தில் ஒத்துநில்லாமல் (எத்தனை)

சரணங்கள்.

௧. சந்ததமும்பரன் சுந்தரபாதத்தை
அந்தரங்கம்தனில் சிந்தனைசெய்யாமல் (எத்தனை)

௨. மோகஞ்செயும் ஆசாபாசங்களென்னுமபி
சாந்தனைச்சர்வநாசஞ்செய்யாமல (எத்தனை)

௩. கோபம்பொறாமைபொய் லோபம்மதமுதற்
பாபங்கட்கேமனஸ் தாபங்கொள்ளாமல் (எத்தனை)

௪. மும்மலபாசத்தை நிர்மூலமேசெய்து
நிர்மலசித்தனாய் தர்மம்செய்யாமல் (எத்தனை)

௫. தாயாகனும்வேத நாயகன் தினர்ச
காயன்தனைநெஞ்சுள் நேயம்பண்ணாமல் (எத்தனை)

---

௧௩௨. இராகம் ஹம்சத்வனி ஆதிதாளம்.

பல்லவி.

ஞானோதயவரம் அருளே

அநுபல்லவி.

பானோதயபரம்பொருளே.

சரணங்கள்.

௧. மாயவிகாரசெகமே தேயாமல்அருள்சுகமே
தூயர்நேசனே ஸ்வயம்பிரகாசனே
தீயர்நாசனே சித்விலாசனே. (ஞானோ)

௨. தேகாபிமானம்அறவே யோகாநுசாரம்உறவே
பாகம்நீட்டுவாய் பாதம்காட்டுவாய்
மோகம்ஓட்டுவாய் முத்திகாட்டுவாய். (ஞானோ)

௩. ஆகாரம்ஏதுமில்லையே பாதாரவிந்தம்இல்லையே
போதத்தாயகா புண்ணியஆயகா
வேதநாயகா விமலதாயகா. (ஞானோ)

கசுந. இராகம் நீலசங்கராபரணம் ரூபகதாளம்.

பல்லவி.

ஆதிமூலனே நீதிநூலனே நித்ய ஆதி

அநுபல்லவி.

வேதபோதசாதகம்பெற நீதயைபுரியாய் நித்ய ஆதி

சரணங்கள்.

க. திட்டமாகமர்யைக்கே அஷ்டதிக்கும்விஜயமானான்
துஷ்டன் ஆதலால் உனக்கும்என்கிட்டவரப்பயமா
கெட்ட இதயமே அதில்கஷ்டம்உதயமே
சிஷ்டரோடணைக்கூட்டிஞானநிஷ்டன் ஆக்குவாநித்திய ஆதி

உ. துணைஉன்பாதஇணையலாது சொல்லவேறுண்டோ
இணையிலாயொருதிணையிலாய்தெய்வம்எனகருத்தான் இரண் [டோ
குணம்தருவாயே அருள்மணம்தருவாயே
உணரொண்ணாதநின்துசேவைபுணரவே அருள்வாய்நித்திய ஆதி

ந. மனையைச்சுத்தஞ்செய்தினி துறல்மனிதர்க்கும்சகசமே
நினதகமெனும் எனதுநெஞ்சம்நிலமதவசமே
புனிதம்செய்வாயே அதில்இனிதமர்வாயே
தநயன்வேதநாயகனுக்குன் தரிசனமருள்வாய்நித்ய ஆதி

கசுச. இராகம் பியாகு ரூபகதாளம்

பல்லவி.

பிக்ஷை அருளாயோ ஞான பிக்ஷை

அநுபல்லவி.

அக்ஷயநிர்மல லக்ஷணனே ஜீவ
ரக்ஷணனே அதி பக்ஷமுடன் ஞான பிக்ஷை

சரணங்கள்.

க. சத்தியுமாறுதபுக்தியும்ஓயாத
பத்தியுமெஞ்ஞான சித்தியுமுத்தியும் பிக்ஷை

உ. நேசருடன்சக வாசமும் ஞானபிர
காசமும்என்விசு வாசமும்நேசமும் பிக்ஷை

௩. தானம்பொறை அருள்-மாதம்·இதராபி
மானம்விதானமும்-மோனமுந்தியானமும் பிணைசுஷ

௪. ஆகமெல்லாம்விசாரித்தும்உருமலே
ஆகாவுசெய்யும்-வேதாசபனே பிணைசுஷ

—)(*)(—

௱௩௫-இராகம்-சௌராஷ்டிரம்-சாப்புதாளம்.

பல்லவி.

இந்தமனம்கெட்டதையா
பந்தவலேப்பட்டதையா

அநுபல்லவி.

சந்ததம்புண்ணியந்திரண்ட
சுந்தரதேகாநான்கொண்ட இந்த

சரணங்கள்.

௧. சொன்னபடிகேளாச்சண்டி
தோஷமுட்டைதூக்கும்பண்டி
உன்னிடம்வரவேநொண்டி
ஓடும்விஷத்தை அண்டி இந்த

௨. இதரர்வாழக்கண்டால்வாட்டம்
எவருங்கெட்டாலோகொண்டாட்டம்
மதனநெருப்புக்குக்காஷ்டம்
வாயுவினும்வேகம்ஓட்டம் இந்த

௩. சுகதுக்கபேதம்போதிக்கும்
சூழ்நலமெல்லாம்போதிக்கும்
பகல்இரவென்றுசாதிக்கும்
படுவிஷம்உண்டுசோதிக்கும் இந்த

௪. காடுங்காரையும்சஞ்சாரம்
காமப்பசாசுக்காகாரம்
நாடும்பிரபஞ்சவியாபாரம்
ஞானம் இதற்கெட்டாத்தூரம் இந்த

௩. பாதகக்கட்டெல்லாக்குரு
பாசம்பிரிவிக்குங்குரு
ஏதுவில்லாவிஷகுரு
எனக்கநுகூலசற்குரு இக்க

௪. பஞ்சபூசாதிகிரியானு
பக்தர்கள் இதயவானு
விஞ்ஞைபரஞ்சாஸ்திரபுராணு
வேதநாயகப்பிரியானு இக்க

௯௰௯-இராகம்-மனோகரம்-திரிபுடைதாளம்.

பல்லவி.

எந்தையே உனக்கும் அடியேனுக்கும்
எத்தனை பேதம் ஐயா எந்தை

அநுபல்லவி.

சந்தசர்வசாம்பிராஜ்யபிரபுத்துவ
சாசுவத்தேவதேவமகத்தும் எந்தை

சரணங்கள்.

௧. தேவாதிசகலபுவனேசன்
பிரியனுன் உன்தன்தாசானுதாசன்
காவலானநீஸ்வயம்பிரகாசன
கசடனான அந்தகாரப்பிரவேசன் எந்தை

௨. சத்தியமாகநீதயசொரூபி
தரணிமீதிலேநான்பெரும்பாவி
நித்தியனானநீசுத்த அரூபி
நிச்சயமாகநான் மெத்தக்குரூபி எந்தை

௩. தமயில்லாதநீபேமலாகிதன்
சகடன் உலகில்மலசகிதன்
சமீகாதல்லபிராணிகள்விகிதன்
விமலேசீயும் எவர்க்குமே அதிதன் எந்தை

காலைஸ்தோத்திரம்.

௱௩௭-இராகம்-தேசிகதோடி-ஆதிதாளம்.

பல்லவி.

உனக்கேநமஸ்காரமையா-இடா
ஒன்றுவாராமலே-நன்றுசெய்தாயே — உனக்கே

அநுபல்லவி.

தனக்கோர்நிகரென்றுமிலாத
தயாகாருணபராபரனே — உனக்கே

சரணங்கள்.

௧. நேத்திரங்களைநீயெம்-மாத்திரமுமூடாமற்
காத்திருந்தாயெனை-இராத்திரிமுழுதும் — உனக்கே

௨. சத்துருபயமின்றி-நித்திரைசெயவெனைப்
பத்திரமாயுன்கையில்-வைத்திருந்தாயே — உனக்கே

௩. முத்தும்ஆரம்விஸ்வஜெந்துகளால்உபாயம
வந்துகெடாவலேகர-பந்துசெய்தாயே — உனக்கே

௪. தீயும்வெள்ளமுங்காற்றும் பேயும்கவிலங்குபல
நோயும்வராமற்காத்தாய்தாயும்தந்தையும்போல் — உனக்கே

௫. நாங்களோர்தடையின்றித்தூங்க இராஇராமுழுதும்
வீங்கிருட்போர்வைதனை தாங்கிநின்றாயே — உனக்கே

௬. இருட்டோதிவிடியும்பொருட்டுநீபுவிதனை
உருட்டிஇராமுழுதும்புரட்டி கொண்டாயே — உனக்கே

௭. பூதநாயகனேபிர-போதநாயகனேசங்
கீதநாயகனே-வேதநாயகனே — உனக்கே

௱௩அ-இராகம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

ஆளாயோ உனையேநம்பினேன்நெடு
நாளாகஉனையே

அநுபல்லவி.

நீளும்புவனாதாராநேயருக்குபகாரா
நிகரறும்-இதபர-சுகமருள்-வாதா
அகம்அறுசுகுணர்கள்-புகழ்-அந-வரதா ஆளா

சரணங்கள்.

௧. எத்தனைபதங்களுக்கெடுப்பேன்கற்பனை நிதம்
எல்லாஞ்செல்லாய்ப்பாட்டுக்கினிமேல்இலை ஆஸ்பதம்
அத்தனேஇரங்கிநீ அருள்வாய்பரமபதம்
அன்றேன்பழம்பாட்டனறி அறியேநான்புதுப்பதம்
அல்லல்வினையகலநல்லவரந்தனை ஆளுவாய்அஃ
தல்லவெனிற்பதங்கள்சொல்லநல்வாக்குதவிமூளுவாய்கன
அகணித-சுகுணபிர-முகம்பரமேசா
செயமயல்-அலகமெய்திகழ் உபதேசா ஆளா

௨. கனியினல்மரத்துக்குப்பலனுண்டோ அதுபோலே
காசினிமீதடியேன்பேசினநீதிநூலே
இனியபயன்பிறருக்கீயினும் அதனாலே
என்ளளவுநலந்தான்எனக்குண்டோபுவிமேலே
இலக்க அந்நூலின்மிசைவிலக்கிய துர்க்குணங்களதாவிமேவெகு
கலக்கமுறஎன்மனமலர்க்கண் அநுதினமுமேவுமே-எந்தன
இதயமதமயலே-மூதல்-அறநீக்கி
நிதம்நிதம்-உன்திரு-பதமலர்தேக்கி ஆளா

௩. ஓங்ககிலாண்டகோடி தாங்கிடும்பரிசன்னியா
உத்தமமூர்த்திகாசுத்தபிரமசைதன்னியா
நீங்கருமாமகிமைவீங்கிவளர்சௌஜன்னியா
நித்தமுந்துதிபுரிபத்தர்மக்கன்னியோன்னியா
நீதிநெறிவிலகுபாதம் அற அருளூட்டுவாய்பெருங்
கோதகல் இகபரசாதகஞானநிலைகாட்டுவாய்-அரு
நிதிபர-கதியெனும்விதி உபதேசா
துதிசெய்-வேதநாயகன்-பதி-அமர்நேசா

ஈசுரவருடத்துப் பஞ்சத்தைப்பற்றிப் பாடியது.

௱௩௯- இராகம்-உசேனி-திசிராஜாதி-மட்டியதாளம்

பல்லவி.

பஞ்சம்தீர்ஐயா-உனையன்றித்
தஞ்சம் ஆர்ஐயா பஞ்சம்

அநுபல்லவி.

வஞ்சகமேகம்உலோபர்கள்போலே
மண்ணில்மழைபொழியாமையினாலே
சஞ்சலமாகித்தளர்ந்தேமென்மேலே
சாமிகதி உந்தன்தாமரைக்காலே பஞ்சம்

சரணங்கள்.

க. எட்டுநாள்பத்துநாள்பட்டினியோடே
இடையிலேகந்தை இருகையில்ஓடே
ஒட்டிஉலர்ந்த உடல்என்புக்கூடே
ஒருகோடிபேர்கள்வசிப்பதுகாடே
ஊரும்இல்லாமல் குடிக்கதண்
ணீரும்இல்லாமல் அன்னமெனும்
பேருஇல்லாமல் பசிதீர்க்க
ஆரும்இல்லாமல்
பாரில் அனேகர்பரதேசி ஆனாரே
ஊரில்அனேகம் உயிர்மாண்டுபோனாரே பஞ்சம்

உ. தாரங்களையேபுருஷர்கைவிட்டார்
தந்தைதாய்பிள்ளைகளைவிலையிட்டார்
வேரும்இலையுங்கிழங்கும்சாப்பிட்டார்
வெறுங்கையாய்வெளியேபுறப்பட்டார்
வேலியும்அற்றார் பெணசாதிகள்
தாலியும்விற்றார் வேலைசெய்து
கூலியும்பற்றார்பலபல
சோலிகள் உற்றார்
தோலும்எலும்புமாய்த்தோன்றியேசோம்பினார்
பாலரும்தாய்முலைப்பால் அற்றுத்தேம்பினார் பஞ்சம்

௪. பஞ்சம்இதுபோலக்கண்டதிலேயே
பலபேர் அடிட்பில்லையார்கள்உலேயே
நஞ்சம்போல்நாட்டிநாள் எறும்விலேயே
நாங்கள்படுக்துன்பம்நாஜுறமலேயே
நாங்களமெய்வாடிமணமிக
உருகித்தள்ளாடிக்கண்ணீர் ஆறாய்ப்
பெருகுயேஓடிப்பிளைசூதகேட்க
வருபவ.கோடி
இரவுபகல்எங்கும் ஏழைகள்சத்தமே
பரனேகலியோடுபண்ணிஞர்யுத்தமே பஞ்சம்

௫. ஏரிகுளம்நதியாவும்கண்ட
ஏகமாகக்கோடைகனல்எங்குமண்ட
சேரிமாடுகள்செத்துப்போய்வெண்ட
ஜெகமுழுதும்உதராக்கினிஉண்ட
தீரைகள்நாடஅவர்கள்
ஈனர்கள்ஜாடதங்கள்கத
வானமைமூட அதுகண்டு
மாணிகள்பாட
மேனிகுலேந்துமெலிந்தாரே இப்படி
கோன்உலேயன்றிக்குடியாவதெப்படி பஞ்சம்

௬. மண்ணில் அனேகர்என்கண்ணின்முன்மாய்ந்தார்
மரஞ்செடிபுல்லேயுமாடுபோல்மேந்தார்
எண்ணில்லாப்பேர்கள்சரகுபோற்காய்ந்தார்
இளேத்துக்களேத்துதவித்திடல்ஓய்ந்தார்
ஏங்கிடுவாரும்களேகொண்டு
தூங்கிடுவாரும் அன்னம்உண்ண
வாங்கிடுவாரும் உடன்உயிர்
நீக்கிடுவாரும்
ஈங்கிந்தவண்ணம் இருண்டதுமேதினி
தாங்கும்வேதநாயகா தஞ்சம்ஏதினி பஞ்சம்

ஹிதோபதேசக்கீர்த்தனைகள்.

கடவுளைத்தியானிக்கும்படிவற்புறுத்தல்.

—*—

௱௬௰-இராகம்-குந்தளவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

மனமேநீ-ஈசனுமத்தைவாழ்த்துவாய்-தினம்
வாழ்த்துவாய் .

அநுபல்லவி.

அனவரதமும்நீ அரும்பதம்பாடிக்
கனசுகமேவிடக் கலந்துகொண்டாடி மனமே

சரணங்கள்.

௧. வம்புவார்த்தைகளேபெரும்பாவம்
வாய்க்குச்சேதமல்லால்என்னலாபம்
என்பிரான்திருமகிமைப்பிரதாபம்
எடுத்துப்பேசுவதுசதகாலக்ஷேமம் மனமே

௨. ஏகமாகஉள்ளுருகியேபரிய
இருகண்ணானந்தபாஷ்பங்கள்சொரிய
தேகபரவசம்தாயன்புவிரிய
சிரகராதிகள் அஞ்சலிபிரிய மனமே

௩. கம்புதின்னக்கைக்கூலியும்ஏனோ
கற்கண்டோ அமுதேபசுந்தேனோ
விரும்பும்பிரமானந்தமேயதுதானோ
வேதநாயகன்யோக்கிணைசொல்லநானோ மனமே

இதுவும் அது.

———

௱௬௧-இராகம்-அடாணா-ஆதிதாளம்-

பல்லவி.

மனமேநீமறவாதே-ஐயன்பதத்தை.

அநுபல்லவி.

கனவிலும்நிதமுநிகனவிலும்பலபல
நினைவிலும்ஒழியாமல் அனவரதமுமே மனமே

சரணங்கள்

௧. மண் அஞ்சராசரமும் விண்ணும்படைத்தளித்தாகிக்கும்
பராபரன்தன்
மண்ணமலர்ப்படத்தைக் கண்ணும்பொழுதில் இன்பந்தேக்கும்
ஆகையினாலே
உண்ணும்பொழுதுவேலைபண்ணும்பொழுதுமொன்றை
எண்ணும்பொழுதுந்துன்பம்நண்ணும்பொழுதுமே மனமே

௨. கல்லுமபெருமரமும் புல்லும்புனலுமேசஞ்சாரம்
செய்யிமந்திபோல்
தில்லும்புல்லும்திரியாவரமுஞ்செய்தென்னசாரம்
வெளியிலேதான்
செல்லும்பொழுதும்வார்த்தைசொல்லும்பொழுதும்பகை
வெல்லும்பொழுதும்பின்னும் அல்லும்பகலுமே மனமே

௩. அஷ்டதிசையும்கெட்டலைந்தோம்புவோம்சரீரம்
இருப்பிடத்தை
விட்டகலாமல்தியானநிஷ்டைசெய்வதில்என்னப்பாரம்
பலவியாதி
குஷ்டம்வந்தாலுந்-துரைப்-பட்டம்வந்தாலும்-பெரும்
கஷ்டம்வந்தாலும்-பிறர்-வெட்டவந்தாலுமே மனமே

௪. கெடுக்கும்பவவினையை-ஒடுக்குவேதநாயகனும்ம்
துயர்வராமல்
தக்கும்இகபரமுங்கொடுக்குந்தினமும்-உண்டுசேஷம்ம்
நித்திரைசெய்யப்
படுக்கும்பொழுதுந்-துகில்-உடுக்கும்பொழுதும் ஒன்றைத்
தொடுக்கும்பொழுதும்சுகம் அடுக்கும்பொழுதும மனமே

இதுவும் அது.

௱௪௨-இராகம்-கல்யாணி-ஆதிதாளம்.

பல்லவி.

இனியாகிலுமனமே-ஐயனை நீநினையாயோதின
இகபெறசித்திபெறவே இனி

அநுபல்லவி.

தனியிளம்பருவமுந்தாண்டிப்போனதுமே
பனைபோல்வளர்ந்துகிழப்பருவமானதுமே இனி

சரணங்கள்.

ஆசைக்கொருகருப்புமயிரேனுமில்லையே
ஐயையோகொக்குப்போல்நரைத்ததுதலையே
காசுக்குதவாக்கிழமென்பதுநிலையே
கன்னியர்க்கும்இனிநாம்கசக்கும்வேப்பிலையே இனி

கண்களிரண்டும்மூக்குக்கண்ணாடிதேடும்
காலூசலாடும்ஓர்கழியைக்கைநாடும்
தணகொள்ளும்வோற்றுத்தந்தங்களாடும்
தடித்தாலுமில்லாமல்ளெயனமலும் இனி

பசிவந்தபின்னெல்லைவிதைப்பதுமதியோ
படுந்தாகம்வந்தபின்வெட்டுதல்நதியோ
விசயஞ்செப்திடச்சாகுங்காலமேத்தியோ
வீணேயுனக்குக்கெட்டுப் போகச்சம்மதியோ இனி

காலந்தனக்கென்னசெய்தோம்அபசாரம்
கணைத்தஆசையனுதினஞ்செய்யுஞ்சோபம்
மேலுமேலுமுடலில்விளைக்கும்விசாரம்
வேதநாயகன்சொல்லேவேதாந்தசாரம் இனி

துர்குணங்களை வெளியிடல்.

௱௨௭-ஆ-ம் யதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

நெஞ்சே இந்நாடெங்குந்தேடினும்
நீசர்நமைப்போலுண்டோ

அநுபல்லவி.

அஞ்சாமல்நாளும் அகந்தைகள்நீடுவோம்
சஞ்சலப்பேயால் தலைசுற்றியாடுவோம் நெஞ்

௧, தேகம்உயிர்முதல்யாவையுமெமதென்று
தேவனைநினைமறப்போம் கரு
மேகநிழல்போல்மறையுமிப்பொய்வாழ்வை
விரும்பிக்கலக்குறப்போம்
மோகவிகாரத்திலேதடுமாறுவோம்
முன்னொன்றும்பின்னொன்றுமாகப்பொய்கூறுவோம்
ஏகமாயெங்கும்பிறர்களைத்தூறுவோம்
எப்படிநாமையோநாங்கரையேறுவோம் நெஞ்

௨, கோயில்குருக்கள்ஜெபதபம்யாவும்
கொடுவிஷம்போலவெறுப்போம் இனம்
நேயமதாகவேதூயமறைசொல்லும்
நீதிகளைமறுப்போம்
ஆயிரம்பாவம்அடிக்கடி பண்ணுவோம்
அன்னியமாதரை ஆசையாயெண்ணுவோம்
ஈயாவுலோபகுணத்தையேநண்ணுவோம்
ஏழைபசியோடிருக்கநாமுண்ணுவோம் நெஞ்

௩, உள்ளபடிநமக்கெள்ளளவென்கிலும்
உத்தமந்தான்இல்லையே பாவ
வெள்ளம்நிறைந்திடும்பள்ளமதனிலே
விழுந்துகெட்டோமில்லையே
கள்ளனைப்போல்வெறுமாயக்கூத்தாடுவோம்
வந்தஎளியர்க்குவாசலைமூடுவோம்
உள்ளபகையுமேகட்டன்புநீடுவோம்
ஊரையடித்தேஉலையிலேபோடுவோம் நெஞ்

௪, உற்றகலையெல்லாம் கற்றமெய்ஞ்ஞானிபோல்
ஊரைமயக்கிடுவோம் பழு
தற்றமெய்ஞ்ஞானத்தில் பற்றுதலின்றி
அலையஉடமடங்குவோம்
மற்றவரைக்கெடுத்துப்பழிவாங்குவோம்
மாற்றோரைக்கண்டால்வயிறுப்பிவீங்குவோம்
நற்றவம்செய்யாமல்நாளெல்லாந்தூங்குவோம்
நல்லேசுநாயகன்பாதத்தைநீங்குவோம் நெஞ்

மயன்மயக்கந்தவிர்த்தல்.

—(*)—

௱௪௪. இ-ம்-எதுகுலகாம்போதி-ஆடதாளசாப்பு.

பல்லவி.

நீமலைக்காதே நெஞ்சே நீமலைக்காதே

அநுபல்லவி.

நேமத்துடனேயன் நாமத்தைப்போற்றில்
க்ஷேமத்தைக்கொள்ளுவோம் காமத்திலேசிக்கி — நீம

சரணங்கள்.

௧. மோகத்தையும் அவிவேகத்தையுந்தரு
போகத்தையுமுத்தி யோகத்தையுநம்பி — நீம

௨. ஆட்டையுமனையின் மாட்டையுங்கட்டிய
வீட்டையுமூன்கெட்ட சேட்டையுமேயெண்ணி — நீம

௩. ஈச்சுக்கீச்சென்றிடும் மூச்சுப்போனால்ஒரு
பேச்சுக்காகாமற் பிச்சுக்குறநம்பி — நீம

௪. நாட்டைக்கொள்ளையிடும் வேட்டைக்காரனாமன்
காட்டைக்கலைத்துயிர்க் கூட்டைக்கொள்வானேயோ — நீம

௫. கேட்டைத்தருஞ்சோற்று மூட்டைதனையன்ப
தோட்டைப்பாண்டத்தைக்கற் கோட்டையெனநம்பி — நீம

௬. கொண்டையிலேரத்ன தண்டையிலேவிரிக்
கெண்டையிலேமதன் சண்டையிலேசிக்கும் — நீம

௭. சேலையென்றுமுத்து மாலையென்றுந்தினம்
வேலைகொள்ளும்பெண்கள் காலைத்தழுவியே — நீம

௮. சொத்துதமக்கென்று கத்துவதன்றிது
பத்துக்குதவாத புத்திரரைநம்பி — நீம

௯. தாயகனேவேத நாயகனைவிட்டு,
மாயவலைபட்டுத் தூயநெறிகெட்டு — நீம

நற்புத்திகூறல்

௱௪௫-இ-ம்-சுருட்டி-திரிபுடைதாளம்.

பல்லவி.

போனதுபோகட்டும் நீ இனியாகிலும்
புத்தியாய்வாழ்மனமே

அநுபல்லவி.

ஞானமில்லாத நடக்கையைத்தொட்டாயே
நம்பினஎன்னை நட்டாற்றிற்கைவிட்டாயே போ

சரணங்கள்.

௧. எத்தனைநாளிருந்தாலும் ஒருநாள்
இறப்பதுசத்தியமே அப்போ
தென்னவரும்புண்ணிய பாவமல்லாமல்மற்
றெல்லாம் அநித்தியமே
பித்தஉடம்பை வளர்த்திடச்செய்கிறாய்
பிரேதவைத்தியமே என்றும்
பேதமில்லாப்பரன் பாதம்பணிந்தோர்க்குப்
பேரின்பஞ்சாந்தியமே
பக்தர்சங்கத்தைநீ நித்தம்பிரிந்தாயே
பங்கம்புரிந்தாயே எங்குந்திரிந்தாயே போ

௨. தன்தாரமன்றிப்பரதாரந்தாய்க்குச்
சமானம் இதுதேரே கெட்ட
தாசியைக்கண்டால் நமஸ்காரஞ்செய்துநீ
தப்வழிபாரே
இன்றுநாளையென்று நாள்போக்காமல்வினை
இட்சணமேதீரே பின்னும்
எந்தஉயிரையும்சொந்த உயிரென
எண்ணித்தயைகூரே
என்றுமபணப்பேய் தனைநீகும்பிட்டாயே
எச்சுக்குட்பட்டாயே சீசீ நீ கெட்டாயே போ

௨. நாதனைப்பேசிடும் நாவினாலற்ப
நரன்துதிபாடாதே நாளும்
நானெனசென்றபி மானம்பிடித்துநீ
நாடெங்கும் ஓடாதே

சாதகபாதகம் என்னவந்தாலும்
தலம்விடக்கூடாதே-கோடி
தர்மம் உனக்குண்டுகர்மம் விளைக்கும்
தனத்தினைத்தேடாதே
போதவேத நாயகனைதான்விடுத்தாயே
பொன்னை அடுத்தாயே என்னைக்கெடுத்தாதே போனது

———(*)———

நித்தியானந்தந்தேடல்.

——(*)——

௱௪௬-இராகம்-இந்துஸ்தான்காப்பி-தாளம்.

பல்லவி.

நித்தியானந்தத்தைநாடு-பர
நிர்மலசுகந்தேடு-மனமே நித்தியா

அநுபல்லவி.

சத்தியமார்க்கந்தனிலே கூடு
சற்சனங்கத்துடன் உறவாடு நித்தியா

சரணங்கள்.

௧. இந்திரசாலவ்உலகவைபோகம்
இன்றைக்கிருப்பதுவோசந்தேகம்
அம்பரமின்னல்போல் அழியும்தேகம்
ஐயோ அதனுடன் உனக்கென்னஸ்நேகம் நித்தியா

௨. ஞனகாணியமுதலானசம்பத்து
சாசுவதமோ அதற்காயிரந்தத்து
தினமுங்கவலைவிளைத்திடும்வித்து
சீச்சீ அதனைவிரும்பலவிபத்து நித்தியா

௩. மெய்யே ஒன்றுக்கும் உதவாதபண்டம்
மிருகாதிசழ்சூழமாமிசகண்டம்
பொய்யோ இதற்கிங்குநித்தியகண்டம்
புண்ணியஞ்செய்யுனக்காயிரந்தண்டம் நித்தியா

௪. காண்பதெல்லாம் நிலையல்ல அநித்தியம்
காயம் இறந்திடவேண்டும் அகத்தியம்
வீணபொருள்மீதாசையென்னபயித்தியம்
வேதநாயகனசொல்லேசத்தியம் நித்தியா

கலாபூரணம்.

—(௧)—

ராகம் ஹி-ந்-ஹிந்துஸ்தானிகாப்பி-ரூபகதாளம்

பல்லவி.

புண்ணியம்போல்பாபம்-மனமே
புரிந்தோயநாமதினமே — புண்ணியம்

அநுபல்லவி.

திண்ணமாகக்குளிக்கப்போயுந்தன்மேலே
சேற்றைப்பூசிக்கொண்டிருப்பதுபோலே — புண்ணியம்

சரணங்கள்.

௧. கையிலேநாம்பிடிப்பதுஜெபமாலை
கஷ்கத்திலிருப்பதுவோகன்னக்கோலை
மெய்யாகத்தினம்படிப்பதுகர்மநூலை
மேலுமேலுநமக்குத்துன்மார்க்கவேலை — புண்ணியம்

௨. ஒருபெண்வேண்டாமென்று கொள்வோம்சந்நியாசம்
ஊரில் உள்ளபெண்கள் மீதெல்லாம்நேசம்
பருகப்பசியில்லாதபோது பவாசம
பசித்தால் ஒருபானைப்பருக்கையும்நாசம் — புண்ணியம்

௩. கடவுளைத்துதிப்பதுபோல்வாய்ப்பாடம்
கண்ணுங்கருத்துங்கணம் இடமெங்குமோடும்
திடமாகக்கோயிற்குள்ளேமுகம்போய்க்கூடும்
சிந்தனைவெளியிலேதிரிந்துகொண்டாடும் — புண்ணியம்

௪. ஆனைதலையில்வளர்ப்பதுஜடைமுடியே
அனுதினமும்கெடுப்பதாயிரங்குடியே
தானம்பிறரறியக்கொடுப்பதோர்கொடியே
தனியேவந்தவனுக்குத்தான்தடிஅடியே — புண்ணியம்

௫. அடித்திடும்கொடுமையிற்புலிக்குநாமேலே
ஆகையில்ஆசனம் புலித்தோலே
நடித்திடுங்குரங்குநாம்சேஷ்டையினாலே
நமக்குள்குறைவுபின்புறத்தெருவாலே — புண்ணியம்

அங்கமெல்லாங்கருமேகவியாதி
அதனைமறைக்கமெய்யில்அணிவோம்விபூதி
நங்கையில்லாப்பொருள்மனைபாதி
நாம்துறந்தோம்கல்லதுரவநீதி புண்ணியம்
ஏகஅன்னம்தள்ளிப்பிடிப்போம்ஒருசந்தி
இதரபட்சணங்களால்நிறைப்போம்தொந்தி
தேகபலம்ஒடுங்கில்விரந்தியாம்பிந்தித்
திடமானல்நற்செய்கைசிரிக்குமேசந்தி புண்ணியம்
உள்ளத்தினழுக்கைகள்நாளுமேகழுவோம்
உடலைக்கழுவநீரில்அடிக்கடிவிழுவோம்
கள்ளத்தனமாகச்சந்நிதிமுன்னேஅழுவோம்
காசுக்குநாயையுங்கைகட்டித்தொழுவோம் புண்ணியம்
பசியில்லாதவர்க்குச்செய்வோம்அன்னதானம்
பசித்துவந்தோரைச்செய்வோம்அவமானம்
சுசியாகப்பிறர்க்குபதேசிப்போம்ஸ்நானம்
துர்க்குணக்கடலிலேதினஞ்செய்வோம்ஸ்நானம் புண்ணியம்
பெருமையாயணிவதுகாவிவஸ்திரமே
பிரதிஷ்டைசெய்வதுதர்மசத்திரமே
பரவியநமதுதுர்க்குணம்சமுத்திரமே
பாடோம்வேதநாயகன்சரித்திரமே புண்ணியம்

பொருளாசையொழித்தல்.

௱௪௮-இராகம்-தனகவசந்தம்-ஆதிதாளம்,

பல்லவி.

பொருளைவிரும்பவேண்டாம்-மனமே
பொருளைவிரும்பவேண்டாம்

அநுபல்லவி.

ஒருவரிடமும்இல்லாது யெங்கும்பறக்கும்
திருவேதநாயகன்சேவடிதுறக்கும் பொருளை

௧. பணமுள்ளவர்க்குநமன்பயப்படுவானோ
குணமுடன் அவர்களைக்கும்பிடுவானோ பொருளை

௨. தனவானென்னைத்துபர்சார அஞ்சிடுமோ
கனசுகம அவருடன கலந்துகொஞ்சிடுமே பொருளை

௩. பார்க்க ஒட்டாமலேபார்வையைக்கெடுக்கும
வார்த்தைசொல்லாமல் வாயையுந்தடுக்கும பொருளை

௪. மண்டலத்தில்நமக்குவயிறொருகுகிரா
கண்டபடிஉண்ணநாம்கந்தனுக்கெகிரா பொருளை

௫. ஊரில்நம்மிருப்பிடம் ஒருமுழமட்டே
பாரிலேநமக்கேனபலமனைக்கட்டே பொருளை

௬. உலகில்வயிறுநமக்குள்ளதுசாணே
மலைமலையாக்குவித்துவைககுதல்வீணே பொருளை

௭. சங்கையில்லாமற்பணந்தலைவெட்டும்ஒருவன்
தங்கைவருவாள்பின்புதமக்கையும்வருவாள் பொருளை

௮. வித்தாரமாகப்பொருள்வேணடுதல்தாழ்வு
செத்தால்தெரியுமேசெட்டியார்வாழ்வு பொருளை

௯. அருளுடன்ஏழைக்குதவாப்பணம்பிளைமே
பொருள் அதைக்குழிவெட்டிப்புதைக்குதல்குணமே பொருளை

௰ பூகமானாலும்உண்ணப்போதுபாகாணி
ஆசலால்நமக்கேன் ஆயிரங்காணி பொருளை

௰௧. கொண்டைச்சேலைக்காரிதான்கிழவியாகாளோ
கொண்டைப்பூமுடித்திடும்குமரியாகாளோ பொருளை

௰௨- வெறுங்கழுத்தாயிருந்தால்விக்குமோதொண்டை
அருந்தலை அணிபோனால் உடையுமோமண்டை பொருளை

௰௩. கடுக்கன்இல்லாவிட்டாற்காதுகேளாதோ
உடுப்புகள்இல்லாவிட்டால் உடம்புநீளாதோ பொருளை

௰௪. கந்தலை அணிந்தவன்கர்ப்பம்ஆகாளோ
விந்தைநகையுள்ளவள் மெலிந்துபோகாளோ பொருளை

பொருந்தச்செலவிடாமல் புதைத்திருப்பனோமே
இருந்தென்னபோவென்ன இதிலென்னமகிமையே
நிறைவெள்ளியாதிகள் நிச்சயமாமோ
புகழ்பயன்தன்னையொன்று புரிப்பன்மன்பெண்ணே

செல்வச்செருக்கு.

ராகம் இம்மேயமோகி-ஏகதாளம்.

பல்லவி.

வீணாகர்வம் ஏன்மனமே உனக்கு
வீணாகர்வம் ஏன்மனமே

அநுபல்லவி.

காண்பொருள்சகலமும் கடவுள் ஆதீனம்
கண்டுகொண்டமாறுக் கேட்டிடுமேசமானம்

சரணங்கள்.

நமதுடன்பிறந்ததோ உத்தியோகம்
நமக்குமுன்னே அதுபலர்க்கு ஆனபோகம்
ஆமே அதற்குக் காத்திருப்பர்அநேகம்
அவர்க்கும் உண்டு ராஜிகசெய்வீகம் வீண்
தாதிகள்போல்செல்வம் பலருடன்கூடும்
தனமிருந்தவிடத்தில் தரித்திரஞ்சேரும்
கூசாமல்யானைதனைக் கொசுகுமேசகும்
குடையை உயர்த்துக் கோபுரத்தையுமேமே வீண்

கனவில்கண்டகத்திக் காய்க்கறிக்காமோ
கல்லாலிருப்பால் காயங்கொண்டிடுமோ
நினைத்தஆசையாமல்மனதில் வேர்கொண்டாமோ
இனைத்துநாய்மடியில் இசைவெல்லாமவேமோ வீண்

தம்பொருளுண்டார் மனைவியர்மைந்தர்போர்
தப்பினால்விலைபோர் தாயாதிகாரர்
வெட்டிச்சமைப் பார்த்திருப்பார்சோரர்
பித்தத்தைக்குறிட்டுவர் மேதிகார் வீண்

௫, இடையிற்கோவணமின்றிப் பிறந்தோமெய்யே
இறந்திடுங்காலத்தும் நாமவெறுங்கையே
உடைமைநமதுசொந்தம் என்பதுபொய்யே
ஊரார்பொருளைநாம் சுமந்தோமையே வீண்

௬. ஜெகமுழுதும்நமக்குச் சர்வமானியமா
சித்திக்காரியம் எல்லாம்ஜயமா
சுகதுக்கபேதம் இல்லாதிவ்வியமயமா
துஷ்டனியமனுக்கு நமைக்கண்டால்பயமா வீண்

௭- நீயுந்தங்கையுந்தமக்கையும் அதினேசம்
நிதமுங்கைமாறிக்கொள்வார் அவர்வாசம்
குடுண்டமாடுபோல் துள்ளல் ஆபாசம்
துள்ளினமாடுபொதி சுமக்குமபிரகாசம் வீண்

௮. தாய்வயற்றிலிருந்து ஜனித்திட்டபோது
சட்டைதலைப்பாகுடன் நாம்வந்ததேது
மாயப்பிரபஞ்சத்தின் வாழ்வெல்லாஞ்சூது
மாவேதநாயகனை மறக்கலொண்ணாது வீண்

(*)

உலகவாழ்வைவெறுத்தல்.

௱௫௰-இ-ம்-இந்துஸ்தானி-ரூபகதாளம்.

பல்லவி.

வாழ்வைநம்பாதே மனமேவாழ்வைநம்பாதே

அனுபல்லவி.

தாழ்வில்லாத நமதுசுவாமி
தாளைத்தேடு பாதபூமி

சரணங்கள்.

தேகமாஞ்சமூட்டைபல
ஜெந்துவுக்கும்நல்லவேட்டை அதில்
ஓகோஆனந்தம்ஓட்டை உயிர்
ஓடஎத்தனைபாட்டை வாழ்

இன்றைக்காளுவார்நாடு நாளை
எடுப்பவர்கையிலேஓடு உடல்
ஒன்றுக்குதவாகூடு இதை
உற்றுப்பார்த்தால் வெழுக்கக்கேடு புவி — வாழ்

பெண்டுபிள்ளைக்கென்னவாட்டம் நம்மைப்
பிடிக்கித்தின்பதில்நாட்டம் கையில்
உண்டாகும்போதுகொண்டாட்டம் செல்வம்
ஓய்ந்தால்சகலரும்ஓட்டம் புவி — வாழ்

இந்தஉலகத்திற்பிறந்தார் முன்னம்
எத்தனையோபேர்கள் இறந்தார் பெற்ற
தந்தைதாய்பாட்டரும்பிறந்தார் நாலு
தாரங்கள் போய்நம்மைமறந்தார் புவி — வாழ்

இன்றுபல்லக்கினிற்போவார் நாளை
எடுக்கும்ஆள்களும் ஆவார்நரர்
என்றவர்யாருஞ்சாவார் மதி
ஈனர்நரகத்திலேவார் புவி — வாழ்

கூடத்தில்அரசனைப்போலே வேஷம்
கொண்டவர்க்குண்டோசெங்கோலே புவி
சாத்தி[illegible]டக்சாலே அந்தச்
சாலே[illegible]நாமெந்தமூலே இந்த — வாழ்

வண்டியும்ஓடத்திலேறும் ஓடம்
வண்டியிலேறும்நாள்தோறும் நாம்
கொண்டபொருள்கள்கைம்மாறும் வேதம்
கூறுஞ்சொல்லேநிறைவேறும் புவி — வாழ்

எண்ணிக்கையில்லாமல்இங்கே முன்னம்
இருந்தவரெல்லாம் எங்கே நாமும்
நண்ணிப்போகவேண்டும் அங்கேவேக
நாயகன்பாதம்நம்பங்கே புவி — வாழ்

உடலின் இழிவு.

ராகம் — இங்கிலீஷ்நோட்டு. தாளம் — ரூபகம்.

பல்லவி.

உடலைநம்பலாமோ நெஞ்சமே
உடலைநம்பலாமோ

அநுபல்லவி.

குடலும்மலசயமும் எலும்பும் நரம்பும்
கொழுத்துப்பழுத்தும் புழுக்குவியலும் — உட

சரணங்கள்.

௧. இந்திரியமலமூத்திரம் கசை
இரத்தநிறைந்தபாத்திரம் பசு
பந்தமேடேய் வளர்க்கேத்திரம் வெறும்
பலத்தபடசூத்திரம் இந்த — உட

௨. ஆசைபட்டியின்கூடு பல
அசுத்தத்துர்நாற்றப்பைமேல் இதை
ஏசிப்போபோவென்னும்வீடு கிட்ட
எட்டிவாவாவென்னுங்காடு இந்த — உட

௩. கண்ணீர்பீளைகள்வடியும் இரு
காதிற்குறும்பிபடியும் சளி
வண்ணமூக்கில்வந்திடியும் நல்ல
வாயுமெச்சிலாய்முடையும் இந்த — உட

௪. பயனின்றிவிழுமட்டை கொடும்
பாம்புகழற்றுஞ்சட்டை போலே
உயிர்போனால்வெறுங்கட்டை இதை
உற்றுப்பார்த்தாலோட்டையோட்டை இந்த — உட

௫. காகம்நாய்நரிக்கூட்டம் பல
கழுகுக்கும்நல்லஊட்டம் கரு
மேகமின்னல்போலாட்டம் இது
மெய்யல்லபொய்மனோட்டம் இந்த — உட

[illegible]
[illegible]
[illegible]
[illegible] உடலே

[illegible]
[illegible]
[illegible]
[illegible] உடலே

[illegible]
[illegible]
[illegible]
[illegible] உடலே

[illegible]
[illegible]
[illegible]
[illegible] உடலே

[illegible]
[illegible]
[illegible]
[illegible] உடலே

பணமூ வூ லே.

கஉ-இராகம் [illegible] -ரூபகதாளம்.

பல்லவி.

[illegible]
[illegible] பணமே

அநுபல்லவி.

[illegible]
[illegible] பணமே

௧. தேடிஉனைவைத்துமூடியவர்க்கு
தீர்க்காயுசுதருவாயோ-இனி
நாடியவன்வந்துசாடும்போது நீ
நானென்றுமுன்வருவாயோ-இனி
கூடியபேர்கள்குடியைக்கெடுப்பாயே
கொல்லச்சொல்லப்பின்னுங்காட்டிக்கொடுப்பாயே
ஓடிஓடி அற்பரைப் போயடுப்பாயே
உத்தமரைக்கண்டால் ஓட்டமெடுப்பாயே பணமே

௨. மத்தியில்உன்னைப்படைத்ததல்லால்-முன்
வரும்போதுகூடவந்தாயோ-இஷ்ட
சித்தியும்சத்தியும் நித்தியங்கைகூடச்
சிதாகாசனம்நீதந்தாயோ
புத்தியிருக்கும்இடம்விட்டே நீங்குவாய்
பொய்யும்புரட்டும்உள்ளவிக்கோங்குவாய்
எத்திசையுங்கெடுத்துப்பழிதாங்குவாய்
ஈயாதவர்கையகப்பட்டுத்தூங்குவாய் பணமே

௩. மண்ணில்உனைநரர்பண்ணினதன்று
மனிதனைநீபண்ணினையோ-உயிர்
விண்ணினைமண்ணினைப்பண்ணினோம்நேசம்
விலகச்செய்சத்துருநீயோ
எண்ணரிதான இடமெங்குஞ்சூழுவாய்
இந்திரசாலஞ்செய்துவிளையாடுவாய்
வண்ணநரர்கள்மனக்கக்கூடுவாய்
வைத்துப்புதைப்பவர்வாயில்மண்போடுவாய் பணமே

௪. வஞ்சகமாய்ப்பிரபஞ்சமெல்லாம் நீ
வளைத்துச்செய்வாய்கொடுங்கோன்மை
நஞ்சம்நீகருணைநெஞ்சம்என்றுமெய்ஞ்
ஞானிகட்கல்லவோமேன்மை
பஞ்சமாபாதகங்கட்குநீஆலயம்
பாரில்துன்பமென்பதெல்லாம் உன்தன்மயம்
மிஞ்சஉனையுடையோர்க்கொழியாய்ப்பயம்
வேதநாயகன்மேலுனக்குண்டோ பணமே

பரஸ்திரீகமனம்விலக்கல்.

―――(*)―――

௱௫௯-இராகம் கமாஸ் ஆதிதாளம்,

பல்லவி,

மாதரைவிழையாதே-நெஞ்சே மாதரை

அனுபல்லவி.

பூதலமேல்பெரும்-பாதகமும்விப
ரீதமுமேவரும் ஆகலினால்மனது மாதரை

சரணங்கள்.

அருமஞ்சட்பூச்சல்லவோமுகக்காந்தி
அடிக்கடிபெண்கள்திறமாயுபச்சேசாந்தி
ஒருமையா அவர்களைவிருப்புகல்பிராந்தி
உடம்புகுந்துபார்த்தால்வருமேவாந்தி மாதரை

முன்னழகுபின்னழகுமேபட்டு
முகஅழகானது நெற்றியிற்பொட்டு
அன்னநடையென்பதுகவிஞர்கள்கட்டு
அருகிலில்லாமற் பறந்திடுஞ்சிட்டு

மரித்திடுமாதர்கள்சுகம்அரைட்சணமே
மறுபிறவித்தில்உண்டாந்துன்பரணமே
பிடித்திடில்மலஜலம் எலும்புதோல்தினமே
பிராணன்போனால்நரிநாய்பிடுங்கிடுமே மாதரை

மேனிமுழுதும்வெளிவேஷத்தின்தருக்கு
மினுக்கெனவெண்ணெய்பூசியேகாட்டுவார்களுக்கு
ஈனம்அறமிலைதினம் கண்ணீர்முழுக்கு
இல்லாவிடில்கப்பல்லற்றலாமழுக்கு மாதரை

இடையில்மயக்குவதுசாலியஞ்சேலை
இருகாதில்சொலிப்பதுதட்டான்கைவேலை
கடையிலேவிற்பதுகொண்டைப்பூமாலை
கன்னிக்குச்சொந்தமெல்லாம் கடைமருந்தாலே மாதரை

௬. கன்னியர்கிளிமொழியின்கிம்சுதுப்பு
கனகனைப்பமன்குழல்உனைக்கட்டுக்குப்பு
அப்பணியமர்வன் விசேஷமணப்பு
அமருடனபேசுவதெபெருகுமப்பு மாதவா

௭. இகமாகவேமணந்துசெய்தபெட்டி
இகபரஇரண்டுக்குமேவழிகாட்டி
இராவிளைஞர்களைச்சேர்த்துவாகைமட்டி
ஈனகரைத்தும் அவனுக்குமூக்கைவெட்டி மாதவா

௮. என்றுங்காமாதுரர்க்கு ரோகங்களிலேயே
ஊனுமபோட்டக்கைகளில் வேசைமெய்யேவெட்பிலேயே
அன்றுகொண்டவன் அறிந்தால்வருங்கொலையே
அற்பசுகத்தில்வரும் ஆபத்துகளிலேயே மாதவா

௯. கவிழுவாசனைஉட்டாவிடில்கெட்ட விச்சு
காதவழி அடிக்கும் இதுவிசப்பேச்சு
தொழுதழுதழுவிக்கன்பதெல்லாம்போய்ப்பூச்சு
தோஷங்கள்பிறராலும் கனைச்சு மாதவா

௰. அழகழகென்பதெல்லாம்வெறுப்பிஜாலம்
அணியும்துணியுமபோனால் அலங்கோலம்
அனுதினம்சுகத்தினைவெறுப்பதுசீலம்
வேதனையகல்செய்அனுகூலம் மாதவா

இதுவுமது.

—(✻)—

௱௨௪ இ-ம்-தெள்ளிபத்து-ஆதிதாளம்.

பல்லவி.

மனமேஉனக்குமகாசகிர்தம்-சுகு
மாதவைரவினையார்த்து மனமே

அநுபல்லவி.

நினைமென்மெச நீபடிகேட்டால் உனக்கு தி
செய்வேன் நாத்திடில்வைவேன் ஊவிவேன மனமே

சரணங்கள்.

சட்டிமுகத்தைச்சந்திரபிம்பமென்னும் வெறும்
சடைக்கட்டைத்தங்கம்கும்பமென்றும்
முட்டிகால்களைச்சொர்னஸ்தம்பமென்றும்மாதர்
முன்கவலைக்குஞ்சப்பாக்கம்பமென்றும்
மொட்டைத்தலைக்குமுழங்காலுக்கும்யிணைத்தே
முடிந்தாயே வினை படிந்தாயே கெட்ட — மன

உச்சிட்டத்தைஅமிர்தக்கட்டியென்றும் நாறும்
ஊத்தைவாயைப்பவளப்பெட்டியென்றும்
மச்சம்பீளைவடியுந்திட்டியென்றும்தே
வாங்குருவைஅபூர்வசிட்டியென்றும்
பிச்சைக்காரன்காதையை மெச்சிக்கொள்வதுபோல்
பிடித்தாயே பொய்யைப்படித்தாயேகெட்ட — மன

செட்டிகளாலல்லவோஇடையழகு எண்ணெய்ச்
செக்காராகளால்அல்லவோ தலையழகு
தட்டார்களால்அல்லவோ நடையழகுமாதர்
தம்மழகெல்லாம்பல கடையழகு
குட்டிச்சுவரில்முட்ட வெள்ளெழுத்தோநீ
குதித்தாயேபெண்ணைத் துதித்தாயேகெட்ட — மன

சொத்தைப்பற்களை முத்துச்சரங்களென்றும் மிகச்
சூம்பியதோளைமூங்கில்மரங்களென்றும்
சித்தமாகக்கமலங்கரங்களென்றுநாறும்
சிக்குமயிரைச்சிலதாங்களென்றும்
பித்தன்போலவர்ணித்து வேதநாயகன்அகு
பிரிந்தாயே துன்பம் தரிந்தாயேகெட்ட — மன

—:*:—

இதுவுமது.

௱௫௫-இ-ம்-சௌராஷ்டிரம்-ஆதிதாளம்.

பல்லவி.

பெண்ணாசையேபெரும்பித்து அதில்
பிரமிப்பதெல்லாம்விபத்து — பெ

அநுபல்லவி,

கண்ணாலேவலைபூட்டி அற்பசுகம்
காட்டிப்புருஷரை வாட்டிவதைக்கும் — பெ

சரணங்கள்.

௧. கலகலெனஅசைப்பார் அவர்தண்டை
காட்டுமிருகமயிரேகொண்ட
உலகைமயக்கும் அவர்சேலைக்கெண்டை
உற்றுப்பார்த்தால்நன்மையேதவர் அண்டை பெ

௨. கேவலம்அங்கமெல்லாம் பிணநாற்றம்
இறுகிநரைமயக்கந்தலைக்கேற்றம்
ஓவியமேனிமினுக்குப்பொய்த்தோற்றம்
உள்ளேதிரும்பிப்பார்த்தால்அழுநாற்றம் பெ

௩. கட்டிகட்டியாகக் கண்பீளைசாறும்
காதிற்குறும்புசளிகக்கல்சேரும்
கொட்டும்வியர்வைதலைப்பேனும்ஈரும்
கும்பிநாற்றமாங்குளிகிட்டநீரும் பெ

௪. மண்ணில்எலும்புபோல்அல்லவோமாது
மற்றதெல்லாஞ்செட்டிதட்டார்செய்சூது
பெண்ணில்லாவிட்டால்பிழைப்பவர்க்கேது
பெண்டுஜெபமும்அவர்போனால்செல்லாது பெ

௫. மண்ணிற்பரஸ்திரீயைச்சேரும்நிமித்தம்
வாழ்வுஞ்சுகமுந்தனமுமனைத்தும்
எண்ணில்லாத்துன்பமும்புண்களுஞ்சித்தம்
ஈயெறும்புமவோர்ச்சவமதித்தம் பெ

௬. இறவிற்கூத்தாடிகள்வேஷமெடுப்பார்
இருட்டிலெவரும்மயங்கிக்கொடுப்பார்
தரையில்மின்னார்பகல்வேஷங்கொடுப்பார்
ஜாலவித்தைசெய்துலகைக்கெடுப்பார் பெ

௭. உண்டால்விழும்வெட்டினர்கொல்லுங்கத்தி
உண்ணினோர்கண்டோரைக்கொல்லும்பெண்சத்தி
அண்டாமலாடவாஒடுதல்புத்தி
அமர்வேதநாயகன்சொற்கேட்டால்சத்தி பெ

உய்யும்வழி.

ருசு-இ-ம்-சங்கராபரணம் ரூபகதாளம்.

பல்லவி.

உய்யும்வகையிதுநெஞ்சமே வேறு
செய்யுமஉபாயங்கள் வஞ்சமே

அநுபல்லவி.

மையல்தரும்மும்மலங்களைநீக்கு
ஐயனபொற்பாதத்துக்குன்னை ஆளாக்கும் உய

சரணங்கள்.

க. நிந்தைகலந்தமூவாசையே நாளும்
நிக்கிரகஞ்செய் அப்பசாசையே
எந்தவிதத்திலுமாசையேழியும்
யென்றெண்ணுந் தெய்வபூசையே உய்

உ. நான்எனதென்றபிமானமே மிக
நாட்டுறதுமதியீனமே
எனுனக்கிந்தஅஞ்ஞானமே நீதான்
என்றுஞ்செய்வ ய்செபத்தியானமே உய்

ந. பெண்டுசேய்பண்டபதார்த்தமே பொருள்
பிடையாமந்தச்சங்காத்தமே
கொண்டஅறந்தானயதார்த்தமே அதைக்
கூடில்உண்டாம்பரமார்த்தமே உய்

ச. மையல்மிகுந்துகெடாதே பாவி
வாழ்வென்பதுவெறும் சூதே
னையும்மெய்யன்புவிடாதே வேத
நாயகனைநிதம்ஓதே உய்

நெஞ்சொடுபிணங்கல்.

௱௫௭-இ-ம்-அசாவேரி-ஆதிதாளம்.

பல்லவி-

அனுதினமிந்தப்படி உன்னுடன்போர்கொடுக்க
யாராலாகும்நெஞ்சே

அநுபல்லவி.

கனபந்தரோகெள்ளாம் காமானுபந்தந்தள்ளாம்
தினமுமென்னுயிரைக்கொள்ளாம் சீசீஇதென்னபிள்ளாம் அ

சரணங்கள்.

க. அனந்தமுறைகள்சொல்லக்கேளாய்
அகந்தைஅழியாயோ
தினந்தினமும் நீபுரிந்திடுந்துற்
செய்கைகள்ஒழியாயோ நீ
நினைந்ததேதிடமா உன்னால்
நிதமுஞ்சங்கடமா
கனத்தகவலைக்குநீயிருப்பிடமா
செய்வதெல்லாம்அடமா அனு

உ- படித்ததினிவேதந்தான் சொல்லிய
படிநீநடவாயே
கடித்தவிஷம்ஒப்பாகி வினையின்
கடலைக்கடவாயோ நீ
பிடித்ததேபிடியா ஆசை
பேயுன்னிடங்குடியா
உடுத்தமாயைக்குநீமிதியடியா
உனதொழில்இப்படியா அனு

௩. கடந்தமேலோர் பகர்ந்தமொழியைக்
கனவினுமதியாயோ
நடந்தபொய்யாகியவழிநீங்கி
நல்வழிமிதியாயோ நாம்
அடைந்தஉடல்சதமா புவிவாழ்
வானதுசாஸ்வதமா
தொடர்ந்துவேதநாயகன் ஹிதமாய்ச்
சொல்லியுமேமதமா அனு

—(*)—

துர்க்குணம்போன்ற நற்குணங்கள்.

௱ருஅ-இராகம்-தன்னியாசி-ஆதிதாளம்.

பல்லவி.

செய்யவேண்டுமானால் நீ அனுதினம்
செய்-செய்-செய்-மனமே

அனுபல்லவி.

ஐயோவெறுத்தாய்நற்செய்கைகளையே
ஆகையாற்பின்சொலுந் துர்ச்செய்கைகளையே செய்ய

சரணங்கள்.

க. எதிர்உதவிகருதி ஈயாலோபர்
ஈனர்கள்காற்றடிக்கினும் அதில்சோபம்
விதிதீவினைமேல் தீராக்கோபம்
வருவதுவரட்டும் இப்படிப்பாபம் செய்ய

உ. பரன் அடிமீதில் அடங்காமோகம்
பலதெய்வங்களைப் பணியாத்துரோகம்
இரவும்பகலும்புண்ணியந்தன்னில்இராகம்
இப்படியேதான்பாபம் அநேகம் செய்ய

ங. பலருக்கும்உதவிசெய்வதில்பலவந்தம்
பரஸ்திரீக்கிடம்ஈயாதே நிர்ப்பந்தம்
தலமிசைபிறர்க்கிடர் செய்வதில்மந்தம்
தளராதிவ்வகைதோஷம் ஆனந்தம் செய்ய

ச, பொய்கொலைகளவுகள்செய்அறியாமை
புனிதர்போலநாம் இல்லையென்பபொறுமை
மெய்விலகியஅவதூறுதராமை
மென்மேல்இப்படியேபலதீமை செய்ய

ரு. நற்குணந்துர்க்குணம்எனச்சொல்லும்அகத்தியம்
தன்காரியப்பேறுதஅபத்தியம்
நற்கதிபெறுவதில்ஒழியாப்பைத்தியம்
ஞானிலத்திவ்விதமானதுஷ்க்கிருத்தியம் செய்ய

௬. நன்மைதின்மைகளெல்லாமக்குரோதம்
நாளும்அச்செய்கையிலேயிடுவாதம்
தன்வசிப்பிரத்தம் சர்வலோகவிரோதம்
தனராதிசெய்வாரே அபராதம் செய்
௭. ஆட்கொள்ளவேதநாயகனை பாதமுத்தாரம்
அணியெனஉனக்குரைத்தேன்சவிஸ்தாரம்
கேட்கிலை ஆகளிப்பொருந்தேனுத்தாரம்
கெட்டசெய்கைகள் உனதிஷ்டப்பிரகாரம் செய

—(-*)—

மனவர்க்கத்தைப்பற்றி.

௯௩-இராகம்-பந்துவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

புரட்டெல்லாம்எங்கே படித்துக்கொண்டனை
புகலுவாய்மனமேஇந்தப் புரட்

அனுபல்லவி.

முரட்டுமார்க்கம்சென்றலைகிறாய்-அனு
முனையின்உள்ளும்நீநுழைகிறாய் இந்தப் புரட்

சரணங்கள்

௧. பொருளைத்தந்ததன் அருளைமறந்து
பொருளுக்கேஉபகாரம்-செய்யும்
மருளர்போல் அற்பப் பொருளைவிரும்பி
வானபரனஉபகாரம்-தன்னை
மறந்தாய்-என்னைத்-துறந்தாய்-பொன்னைச்
சிறந்தாய்-பின்னைப்-பறந்தாய்-பாரில்
உருவில்லாமல்தேரோட்டுகிறாய்பானு
உதயம்இரவிற்காட்டுகிறாய்-கன
இருள்கொள்பாசத்தில்மாட்டுகிறாய்-நாளும்
என்னைப்பம்பரம் ஆட்டுகிறாய்-இந்தப் புரட்
௨. மண்டலந்தனில்கண்ட பொருளெலாம்
வண்மையென்றுநீ குறித்தாய்பிர
சண்டைஆசைக்கல்உண்டதாலேநீ
தலைமயங்கியேவெறித்தாய்-தனத்
தாசி-எனப்பேசி-விலை

புரிவிலேயே சிவ பரா
அன்பாகவிளக்கை அடைந்திரும்-காற்போல்
ஆழ்கடல்மீதுக் கடக்கிருப்-பல
வன்பாகுவிளைவுடைக்கிரும் புன்மயர்
வசமுமலைமுமற்றிடக்கிருக்கும் இந்தப் புரட்
வன்னவெசால்லிலும் உள்ளன்பெயாயுனக்
கோவிக்கத்தலைவாடைய மசருப
முன்னமேபோதுமென்னைநெக்கிலே
மூடைத்திவிளக்கிரட்டை - இது
போகப்-பைதும்-காசம்-சவ
சோசம் விசை-மாசம்-இவத்
அன்னம்போவெல்லாம்பறக்கிருப் கல்வின்
ஆவிடத்தும்பாவைமறக்கிருப்-கை
வன்னனைத்தினத் துறக்கிருப்-வேத
நாயகனைசொல்லைமறக்கிருப்-இந்தப் புரட்

———:※:———

மனமயக்கம்.

———

௬௩-இராகம்-வசந்தா-ஆதிதாளம்.

பல்லவி.

மயக்கிருப்பனமே ஞபோவீணே மயக்கிரு

அநுபல்லவி.

மயக்கிருப்பனமேடைசாழ்ந்துசொப்பனமே
மாருமப்பதினமே மயக்

சரணங்கள்.

ஏகனைமோட்சத்தியாகனைக்கருணைப்பிர
வாகனைப்பணியாமல் ஞபோவீணே மயக்
என்னவிர்ப்பெரியோர் கண்ணியபொருளாம்
புண்ணியப்புரியாமல்ஞபோவீணே மயக்
செயிடன்றோர்கள் தாயகனைவேத
நாயகனைத்தொழாமல்ஞபோவீணே மயக்

காலதூஷணை.

௱௯௧-இராகம்-தர்பார்-ஆதிதாளம்

பல்லவி.

ஓகோகாலமேஎன்போல்எவர்க்குண்டிந்திர ஜாலமே

அநுபல்லவி.

பேரமாகவேஅண்டம்பூமெல்லாமேய்வாய்
பூனைபோலிருந்துநீ புலியைப்போற்பாய்வாய்

சரணங்கள்.

௧. ஊரெல்லாந்தீங்கினும் உனக்கில்லைதூக்கம்
ஓயாமல்ஓடுவாயுனக்குண்டோதேகம்
ஆர்கெட்டால்உனக்கென்ன அறியாய்நீநோக்கம்
அதிகவட்டிகள்கொடுப்பவர்க்குன்மேல்ஏக்கம் ஓகோ

௨. பாலரைக்கிழவராய்ப்பண்ணியேகொடுப்பாய்
பகைமதன்ஜெயம்நடவாமலேதடுப்பாய்
காலிரண்டுடையார்க்குக்கோலொன்றிகொடுப்பாய்
காலனுக்குயிரெல்லாங் காட்டியேவிடுப்பாய் ஓகோ

௩. ஆயுதமில்லாமல்யாவையும்அறுப்பாய்
அழுதாலுந்தொழுதாலும் அகன்றெம்மைவெறுப்பாய்
சாயுந்திராசுபோலே சகலமும்நிறுப்பாய்
சகலஉயிரையுங்கட்டிவிட்டுவறுப்பாய் ஓகோ

௪, கல்லைப்போல் உடம்பையும் வில்லைப்போல்வளைப்பாய்
கணந்தினம்மதிவாரம் ஆண்டெனக்கிளைப்பாய்
வில்லைப்போல்வதனத்தைச் செல்லைப்போல்துளைப்பாய்
வீக்கழகியர்க்குத்தே வாங்குருவிளைப்பாய் ஓகோ

௫. துக்கம்உள்ளவர்க்குநீ தொலையாமற்கிடைப்பாய்
சுகமுள்ளபேர்க்குநீ துரிதமாய்நடப்பாய்
விக்கலும்இருமலும்வேதையுங்கொடுப்பாய்
மிஞ்சுங்கருமநூரைப் பஞ்சுபோற்கெடுப்பாய் ஓகோ

௬. மலைகள்மண்டபங்களைவலிமையா இடிப்பாய்
வாரிகழுகடலும்வற்றிடக்குடிப்பாய்
தலை மொறகீதான்கொள்ளையடிப்பாய்
தனிவேதநாயகன் தயையாலேநடிப்பாய் ஓகோ

உத்தியோகசம்பந்தக்கீர்த்தனைகள்

நியாயபரிபாலனஞ்செய்ய வரம்வேண்டல்.

௧௧௨-இ-ம்-சாவேரி- ஆதிதாளம்

பல்லவி.

நானேபொது-நீதிதானேசெலுத்திட
நல்வரம் அருள்கோனே நானே

அநுபல்லவி.

தானேயாகியசாக்ஷாத்காரமே
தேனே அமுதமேதிவ்யஞானசாரமே நானே

சரணங்கள்

௧. வட்டஉலகில்யாரும்பொதுவில் அநுபவிக்கும்
மழைகால்வெயில் பூகாதிபோலவே
இஷ்டர் அநிஷ்டர்தமா எளியர்செல்வர்பெண்பூமான்
என்னும்பேதம்உன்னுமல்லவே
இட்டமாச்சரிநீசெலுத்தலின்மனம்காட்டி
சிறியவழக்கும்பெருவழக்கெனத்திண்ணம்நீட்டி
சட்டசாஸ்திரங்கள்மிகஉணர்ந்தறிவினைத்தீட்டி
சகலஉயிர்களும்எங்களுயிர்போல்பாராட்டி
சிட்டபரிபாலனமெனுமுடிசூட்டித்
தீயமொழிபகரமற்செவிதழிபூட்டிக்
கொட்டஞ்செய்துட்டர்கண்ணில்விரலைவிட்டாட்டிக்
கூகூஎனப்பொய்கதறும்படிமாட்டி நானே

௨. அருணன்சந்திரனிலைநீங்கினுந்தரைமேல்கூழ்
ஆயினும்அறத்தைநான்விட்டாமல்
வருணன்போற்பொருள்மாரிவழக்கர்பெய்யினும்-அதை
வாங்கயாசகன்போற்கைநீட்டாமல்

வரும்வழக்கர்மனத்தைதவன் சொற்களாற்சுடாமல்
மற்றக்கீழுடக்யே கஸ்தர்வம்புக்கிடக்கொடாமல்
அருமடியால்வழக்காராச்சியில் அணிடாமல்
அப்பன்பாட்டன்சொன்னாலும் அறநெறிக்கவிடாமல்
தருமதேவன்றநூர ஸதலக்கனில்கடிக்கத்
தப்புசாக்ஷிகள்கிடுகிடென்னவேதுடிக்க
இருமையகல்அக்நிமேலோட்டம்பிடிக்க
இலஞ்சம்வாங்கிகள்வெட்கத்தால்உயிர்மடிக்க வே

௩. அந்தவிலக்குமுடக்கூன்குருடேனைமுத
லானஜென்மமவராமல்தடுத்தாயே
முக்தமானிடஜென்மந்தந்ததுமன்றிபின்னும்
முஞ்சி. திகாரமுங்கொடுத்தாயே
இந்தஉபகாரத்தை இதயத்தெழுதித்தேக்கி
எவர்க்கும்பெரியவனுனெனும் அகங்காரம்நீக்கி
நக்தாவிளககப்போல் நவையிருளினைப்போக்கி
நான்செய்தநீதிநூற் றென்னடையைத்திட்டாந்தமாக்கித்
தொந்தமெனவேவிளையாடி உண்டுதூங்கிச்
சுகஉடல்வளர்க்கும் சோம்பினைநூக்கிச்
விந்தைநனைமுயற்சியில் மேன்மேல்ஓங்கி
வேதநாயகன்நல்லோனெனஇசைதாங்கி வே

தூர்வழக்காளிகளைப்பற்றி.

௧௯௧-இ-ம-சௌராஷ்டிகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

இந்தவழக்குக்கெல்லாம் காந்தானேகோர்ட்டில்
வந்தவனையெல்லாமநமக்கஜெயனு இந்த

அநுபல்லவி,

நந்தன்வலிபச்சண்ணனடபிகுந்தானுட-அந்த
நாதனைத்திட்டிஅவன் அடித்தானும் இந்த

சரணங்கள்.

௧. தந்தைதூர்மார்க்கஞ்செய்துகொண்டானு - பின்னை
தாரங்களைத்தெருவில்விட்டானும்
முந்தஅதிசக்கடவ்பட்டானும் - பின்
முழுதுந்துர்விநியோகம்-இட்டானும்- இந்த

அண்ணன் தன் தம்பியென்றே வெறுத்தானும்-அவர்க்
காணிபாகங்கொடாமல் மறுத்தானும்
கன்னனாய்வாய்மைப்பெண்ணை அறுத்தானும்-கடைக்
காரன்கெட்டசரக்கை நிறுத்தானும் இந்த

கள்ளப்புவாதிமகள் கொய்தானும்-அதைக்
கண்டிருந்தும் அப்பால்-எய்தானும்
செகபிசகானபட்டணம் மைதானும்-அதைச்
செவிடன்கேட்டிசைகை செய்தானும் இந்த

துங்கன்வாதியைக்கண்டு சிரித்தானும் சிக்கர
தும்பி இருமி கெட்டி முரித்தானும்
தங்கள் இரண்டுகையும் விரித்தானும் அந்தச
சாந்தனுந்தன்முகத்தைச் சுளித்தானும் இந்த

காமிகான்வாதியைப்பிடித்தானும் இந்
காமிலானைஉதைத்துடைத்திடித்தானும்
ஓரமில்லாதவன்கடித் தடித்தானும் பரம்
இனம்வேதநாயகன் படித்தானும் இந்த

உத்தியோகசங்கடம்,

௧௬௬-இ-ப்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி,

அப்பா இதென்ன அதிகாரம் ஐயோ
எப்போதும்பக்திசெய்ய இல்லையேநேரம் அப்பா

அநுபல்லவி.

சுப்பையரோ அபத்தமூட்டை-அந்த
சுந்தரையர்வழக்கிலே சொள்ளாயிரம்-துட்டை
அப்பையர்கற்பிப்பார் பொய்ச்சீட்டை-அந்
அனந்தையர்கட்டுவார் ஆகாசக்கோட்டை அப்பா

சரணங்கள்

சிலர்கேட்பார் கற்பகச்சோலை-சேறு
சிலர்கேட்பார்கமன் அனுகாமிசை-இலை
பலர்கேட்பார்நாறு புளிப்பாலே உண்ணும்
பகலும் உண்ணில் கமக்கிதுதானோவேலை அப்பா

௨. அண்டப்புரட்டன் அந்தவாதி-அதி
லண்டப்புரட்டன் அப்பா அவன்பிரதிவாதி
சண்டப்பிரசண்டன் நியாயவாதி-யாரும்
சகஸ்திரப்புளுகன்சாக்ஷிக் காரனெனும்வாதி அப்பா

௩. எப்போதும்பொய்வழக்கா டட்டம்-அவர்க்
கிந்திரலோகங்கிடைத்தாலும்-இன்னமுந்தான்வாட்டம்
தப்புசாக்ஷிகள்வாய் நீட்டம்பொய்ச்
சத்தியஞ்சொலையென்றால் அவர்க்குக்கொண்டாட்டம் அப்பா

௪. பேராசைக்காரன் குப்பன்செட்டி-அவன்
பிரமாதிகளிடத்தும் வாங்குவான்வட்டி
சோரன்வழக்கிலே சிக்கக்குட்டி-இவர்
சூதால்வேதநாயகன்பதந்தொழ அட்டி அப்பா

இருவமது,

௧௫-இ-ம்-புன்னாகவராளி-திரிபுடை-தாளம்

பல்லவி.

போதும்போதும்உத்தியோககலமே-இதில்
ஏதுசுகங்கமகருணையே போதும்

அநுபல்லவி

ஓதக்கடலின் அலைக்கோய்வுண்டோ ஆரவாரம்
வேதநாயகன்காமம் விளம்பவுண்டோநேரம் போதும்

சரணங்கள்.

௧. சிலர்பிலவழக்குகள்கொடுப்பார்-வேறு
சிலர்பணவழக்குச்செய்தடுப்பார்
பலரும்நம்முடன்சண்டைதொடுப்பார்-அல்லும்
பகலும்நம்பிராணனை எடுப்பார்
உலகில்வழக்கிழந்தோர் ஊரெங்குந்தூற்றுவார்
நலமில்அப்பீல்கோட்டார் நம்தீர்ப்பைமாற்றுவார் போதும்

ஒருவன்கேட்பான் துணைப்பிள்ளையே
யொருவன்கேட்பான் பேருயிரை
ஒருவன்கேட்பான அருணைப்பிள்ளையே
யொருவன்கேட்பான வெண்ணெக்கரிசை
கரு [illegible] க்குணைக்கதாபம்
கரு [illegible] க்குகேதாபம் போது

எந்தநேரமும் துயரமே [illegible]
என்னமெய்ப்பிரமுக்குமோ
அந்தகத்திலே [illegible] அதில்
அகப்பட்டதாம்கருப்புபோலே
சந்ததமுண்டாகும் [illegible] போதாயம்
இந்தக்கழுத்துத்தாறு இருப்பதுபட்டதாயம் போதும்

எழுதிஎழுதிஎண்ணமிட்டும்பெற்றேரும்
இந்திரியெதிரியாக்கூடும்
பழுதுமெய்க்கதிகர்க்குப்பாடம்
அழுதாலுமெழுதாலும் அவர்தந்துணைப்போயே
[illegible] போ

———

பெரியதுரையாகிய கடவுளுக்கும்
மனுஷதுரைக்குமுள்ள பேதம்.

௱௬௰-ஆம்-சௌராஷ்டிரம்-ஆதிதாளம்.

பல்லவி.

அந்தப்பெரியதுரைக்கிந்தத்துரைகள்சரியா
ஜோடாகுமோ
விந்தைபொன் [illegible] அந்த

அநுபல்லவி.

இந்தப்புவியின்கண்ணைச்சொந்தப்பொருளாச்செய்து
தந்தைக்குநேராகச்சிந்தைக்குள்-உதைபும் அந்த

சரணங்கள்.

க. அந்தத்துரைநாம்செய்யுமெந்தப்பிழைகளையும்பொறுப்பான்
இரக்கமின்றி
இந்தத்துரைநாம்செய்யுமெந்தப்பிழைக்கும்தலை அறுப்பான்
வேலைகொள்ளாமல்
அந்தத்துரைதான்நமக்கெந்தபொருளுந்தந்துநிறுப்பான்
வேலைவாங்கியும்
இந்தத்துரைநமதுசொந்தப்பொருளையுமேபறுப்பான்
விளையாட்டாக
அந்தத்துரைஉலகம் அமைத்தளிந்தழிப்பான்
இந்தத்துரைகந்தலை இரண்டாகக்கிழிப்பான்
அந்தத்துரைதனிமை யாப்பகைஒழிப்பான்
இந்தத்துரைபடைகள் இருந்துமேவிழிப்பான் அந்த

௨. அந்தத்துரைவாகனமின்றி அண்டங்களெல்லாங்கடப்பான்
முடவன்போலே
இந்தத்துரைவாகனம் இல்லாவிட்டால்விழுந்துகிடப்பான்
எக்காலமுமே
அந்தத்துரைதானென்று அருந்தாமல்நமக்கன்னம்படைப்பான்
சோறுகறியும்
இந்தத்துரைதான்நமக்கியாமல்தன்வயிற்றில் அடைப்பான்
பலவகையில்
அந்ததுரைதான்நமக் கனுதினம்உழைப்பான்
இந்தத்துரைதான்நம்மை ஏவல்கொண்டுபிழைப்பான்
அந்தத்துரைஎன்றைக்கும் அழிவின்றித்தழைப்பான்
இந்தத்துரையைஇனி இயமனவந்தழைப்பான் அந்த

௩. அந்த்துரைசகல அந்தரங்களையுந்தெரிவான்
குருடன்போலே
இந்தத்துரைஉலகில்எதுந்தெரியாமலேதிரிவான்
துஷ்டரையெல்லாம்
அந்தத்துரை அடக்கிமுந்தச்சிஷ்டருக்கருள்செரிவான்
பொய்யரையெல்லாம்
இந்தத்துரைஉயர்த்திவந்தநல்லவர்க்கிடர்புரிவான்
சத்தியமாக

அந்தத்துரைதான்சுத்த அமலசொரூபி
இந்தத்துரை உலகில்இணையில்லாப்பாபி
அந்தத்துரை வேதநாயகன்மனைவியாவி
இந்தத்துரைஎவர்க்குமீயாதலோபி அந்த

கோட்சொல்லும் உத்தியோகஸ்தர்களைப்பற்றி

௱சுஎ-இ-ம்-பிசாவேரி-திரிபுடைதாளம்.

பல்லவி.

எந்தநாளிலுங்கர்மமேஜெயம் என்மயங்கிருய்பெண்ணே

அநுபல்லவி.

நிந்தனைபலர்கூறட்டும்-அவர்
நினைவெல்லாம்நிறைவேறட்டும்-பின்பு
சிந்தனைதடுமாறட்டும்-அவர்
சிரிப்பார்சிரித்துநாறட்டும்-பெண்ணே எந்த

சரணங்கள்.

க. எரிகியவீட்டில்பிடுங்குவதுலாபம்
என்றுசொல்வார் அந்தவண்ணமே
மெரியகோட்சொல்லிநம் உத்தியோகத்தைப்
பிடுங்குவதிவர்வண்ணமே
சரியிவர்எண்ணமுடிக்கட்டும்-லஞ்சம்
சர்வகொள்ளைகள் அடிக்கட்டும்-உண்மை
துரைமகன்கண்டுபிடிக்கட்டும்-அந்தத்
துஷ்டரைடஜன் அடிக்கட்டும் எந்த

உ. வரும்இடரெல்லாம்வரட்டும்நாம்-அதில்
வருத்தங்கொண்டென்னசாரமே
சருவமூடர்கள்வாழும்நாட்டினில்
சாதுக்கட்கபயகாரமே
துரைமகன்நம்மைக்கெடுக்கட்டும்-அந்தத்
துஷ்டர்க்குத்தியோகங்கொடுக்கட்டும்-அவர்
துரையில்கெட்டபேரெடுக்கட்டும்-பின்பு
தம்பிமார்களைமுடிக்கட்டும்-பெண்ணே எந்த

௩. வல்லவனுக்குப்புல்லும்- ஆயுதம்
வாழ்வதநமக்கருமையா
நல்லவர்க்கிதுகாலமா- இங்கு
நாமிருப்பதுபெருமையா
கல்லில்நார் இவர் உரிக்கட்டும்- அவர்
காலில்விலங்குதரிக்கட்டும்-கண்ட
யெல்லவருமேசிரிக்கட்டும்-மிக
என்சொல் அப்போமிசரிக்கட்டும்-பெண்ணே எங்க
௪. கோளும்பொய்களும்கூறட்டும்-நாய்
குலைத்துநத்தம்பாழாமா
முழுதும்சூரியனொளியைகளைகயினால்
மூடமறைந்துமோகுமா
நீளுந்தீயர்கள்குதிக்கட்டும் - அவர்
நெஞ்சில்வஞ்சகமபதிக்கட்டும்-நமை
நாளுமே அவமதிக்கட்டும்-வேத
நாயகன்சிலைவிதிக்கட்டும்-பெண்ணே எங்க

சுவாமியை நினைக்கநேரமில்லையென்று

முறையிடல்.

௱௬௮-இ-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

நினைப்பதெப்போதுநெஞ்சே ஐயன்பதத்தை
நினைப்பதெப்போதுநெஞ்சே
தனத்தையும்மாதர்யௌவனத்தையும் உத்தியோக
கனத்தையும்எண்ணிப் பலதினத்தையும்கழித்தால் நினை
௧. பாட்டிலும்பலவிளையாட்டிலும்துர்விஷயக்
